மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள்

எஸ். ஆரோக்கியநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள்

எஸ். ஆரோக்கியநாதன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவு

அறக்கட்டளை நிறுவியவர்: டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்

சொற்பொழிவு : 15

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Mol̲iyiyaḷ nōkkil tolkāppiya, caṅka ilakkiya āyvukaḷ
Author	:	Dr. S. Arokianathan Professor, Department of Tamil Pondicherry University, Pondicherry - 605 014
General Editor	:	Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Tharamani, Chennai - 600 113 Ph: 2254 2992
Publication No.	:	623
Language	:	Tamil
Edition	:	First Edition
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg. TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	x + 110
No. of Copies	:	1200
Price	:	Rs. 40/- (Rupees Forty only)
Printing	:	Pavai Printer Pvt. Ltd., #16(142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph : 044-28482441.
Subject	:	Linguistics study on Tamil language, ancient grammar and literature

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துக்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள் எனும் தலைப்பில் பொழிவு செய்ய எழுத்துரு அனுப்பியுள்ள பேரா. முனைவர் எஸ். ஆரோக்கியநாதனின் பொழிவுரை மொழியியல் நோக்கில் எழுதப்பட்டிருப்பினும் சமூகம், பண்பாடு, இலக்கிய வளர்ச்சி, மரபும் மரபுக் கட்டுடைத்தலும், உரைத்திறன் எனப் பல நிலைகளில் சிந்திக்க வாய்ப்பளிக்கும் ஆய்வினை முன் வைத்துள்ளது.

சமூக மொழியியலாளர், பயன்பாட்டு மொழியியலாளர், பண்பாட்டு மொழியியலாளர் எனப் பல நிலை மொழியியல் வல்லுநர்கள் பார்வையில் பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்டுள்ள இப்பொழிவுரை சிறந்த ஆய்வு நூலாக அமைகிறது. இலக்கணம், இலக்கியம், நீதி நூல்கள், வழக்கு மொழிகள் எனப் பல தளங்களில் பேராசிரியர் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார்..

தொல்காப்பியரின் உரைநெறி: கிளவியாக்கம் என்னும் தலைப்பில் இளம்பூரணர் சேனாவரையர் இவ்விருவரது எடுத்துக்காட்டுகளை முன் வைத்து விளங்கியும், வரைபடங்கள் காட்டியும் ஆங்கில வாக்கியங்களை எழுதிக் காட்டி விளக்கியும் தந்திருப்பது சிறப்புக்குரியதாகும்.

ஒவ்வொரு பேச்சு வழக்கும் இடம், பொருள், ஏவல் கருதி எதை எப்படி எங்கே பேச வேண்டும் என்ற வரன்முறைக்கு உட்பட்டு இடக்கரடக்குகளாய், மங்கல வழக்குகளாய் வெளிப்படுகின்றன (ப. 53).

> கர்நாடக மாநிலத்துப் பள்ளிகளில் கன்னடம் கட்டாயப் பாடமாக்கப்படும்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தி, தமிழ் உணர்வைத் தூண்டும் இயக்கத்தை வளர்த்து, ஆட்சியை மாற்றித் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்திய தமிழகத்தில் இன்று தமிழ் கட்டாயப் பாடமாக எல்லாப் பள்ளிகளிலும் கற்றுத் தரப்படவில்லை (ப. 15)

எனும் ஆசிரியரது கூற்றுகள் ஆங்காங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. இவை சமூகப் பயன்பாட்டு நோக்கில் அக்கறை கொண்டவையாக அமைகின்றன.

இலக்கணம், இலக்கியம் பிற மொழியாளர்க்குத் தமழ் மொழியியல் எனும் பல நிலைகளில் கொண்டுள்ள நல்லறிவின் சாரமாக இந்நூல் மிளிர்கிறது.

இந்நிறுவனத்தில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்கள் தம் பெயரில் நிறுவியுள்ள அறக்கட்டளையின் 15ஆவது சொற்பொழிவாக இப்பொழிவு நிகழ்கிறது. பொழிவு நிகழும் இந்நாளிலே அது நூலாக அச்சிட்டு வெளியிடப்பெறுவது மிகச் சிறப்பாகும். இவ்வறக்கட்டளையை நிறுவிய டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் **தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவைப் பதிப்பித்துச் செம்மைசெய்து, பொருண்மைக்கேற்பக் கட்டுரைகளை இடம் மாற்றி, ஒழுங்கு செய்து, மெய்ப்புத் திருத்தமும் செய்த இந்நிறுவனப் பதிப்பு மேற்பார்வையாளர் முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

இயக்குநர்

தன் விவரக் குறிப்பு

எஸ். ஆரோக்கியநாதன் (13 ஜூலை 1946)
87, மாதாக்கோவில் வீதி, முத்தியால்பேட்டை,
புதுச்சேரி 605 003.
தொலைபேசி: 0413 2236355, 94432 14962

கல்வித் தகுதி: பட்டப்படிப்பு (இயற்பியல்), திருச்சி, புனித ஜோசப் கல்லூரி 1966

முதுகலை (மொழியியல்), அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1968

முதுகலை (ஆசிய மொழியியல்), வாஷிங்டன் பல்கலைக் கழகம் 1980

முதுகலை (தமிழ்), மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1986

முனைவர் பட்டம் (மொழியியல்), வாஷிங்டன் பல்கலைக்கழகம் 1982

பணிகள் : பேராசிரியர், தமிழ்த்துறை, புதுவைப் பல்கலைக்கழகம் 2003-

தேர்வு ஆணையர், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 1999-2003

தமிழ்த்துறைத்தலைவர், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 1999

தமிழ்ப் பேராசிரியர், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி 1988-

இணைப்பேராசிரியர், மொழியியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் (1983-88)

உதவிப் பேராசிரியர், ஆசிய மொழிகள் துறை, வாஷிங்டன் பல்கலைக்கழகம், அமெரிக்கா (1977-82)

துணை ஆய்வாளர், இந்திய மொழிகள் ஆய்வு நிறுவனம், மைசூர் (1972-77)

இளநிலை ஆய்வாளர், இந்திய ஆய்வுகளின் அமெரிக்க நிறுவனம், சிக்காகோ, அமெரிக்கா (180-81)

வருகை தரு பேராசிரியர், இந்தியவியல் ஆய்வு நிறுவனம், மூனிச் பல்கலைக் கழகம், ஜெர்மனி, 1990-91

எழுதிய நூல்கள் : மொழியியல் நோக்கில் தொல்காப்பியம்
ஓரியண்ட் லாங்மேன், சென்னை, *2001*

Tangkhul Naga Dictionary
Central Institute of Indian Languages (CIIL), Mysore, *1996*

தகவல் தொடர்பியல்
முத்துப் பதிப்பகம், விழுப்புரம், *1993*

மொழியியல் சிந்தனைகள் (கட்டுரைகள் தொகுப்பு)
மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, *1993*

இலக்கியச் சாரல் (கட்டுரைகள் தொகுப்பு)
மணியம் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, *1992*

காரைக்கால் – புதுச்சேரி தெருப்பெயர் ஆய்வுகள்
முத்து பதிப்பகம், விழுப்புரம், *1990*

விண்ணைத் தொடும் விழுதுகள் (கவிதைத் தொகுப்பு)
முத்து பதிப்பகம், விழுப்புரம், *1989*

சமூக மொழியியல் அகராதி
முத்து பதிப்பகம், விழுப்புரம், *1988*

Language Use in Mass Media:
Creative Publishers, New Delhi, *1988*

இரு மொழிய ஆய்வுகள்
முத்து பதிப்பகம், விழுப்புரம், *1987*

கிளைமொழிகள்
முத்து பதிப்பகம், விழுப்புரம், *1987*

மொழியியல் இரட்டை வழக்கு
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, *1986*

Tangkhul Folk Literature
Central Institute of Indian Languages (CIIL), Mysore, *1982*

Tamil Clitics: Dravidian Linguistics Association
Trivandrum, *1981*

Tangkhul Phonetic Reader
Central Institute of Indian Languages (CIIL), Mysore, *1980*

இவரின் கீழ்ப் பத்துக்கும் மேற்பட்டவர்கள் ஆய்வுப் பட்டம் பெற்றுள்ளனர். நாற்பதுக்கும் மேற்பட்டோர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர். ஆராய்ச்சி அனுபவமும் ஆசிரிய அனுபவமும் நிருவாகத் திறனும் பல்லாண்டுகள் வாய்க்கப்பெற்றவர். தமிழறியாத பிறமொழி மாணவர்களுக்குப் பேச்சுத் தமிழ் கற்றுக் கொடுப்பதில் வல்லவர்.

நெஞ்சொடு கிளத்தல்.......

புதுவைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணவர்களுக்கு இலக்கணப் பாடம் நடத்தியபோது தொல்காப்பியத்தை மீண்டும் படிக்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. தேர்வுக்கு நான் படித்த காலத்தில் ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததை அப்படியே மனனம் செய்து திரும்ப எழுதுகிற அளவில்தான் என் தொல்காப்பியத் தொடர்பு இருந்தது. மற்ற இலக்கியங்களோடு உள்ள பரிச்சயமும் அந்த அளவு தான். ஆனால் வகுப்பு எடுக்கத் தொல்காப்பிய நூற்பாக்களைப் படித்தபோதுதான் பெரும் சந்தேகங்களும் புரியாத நிலையும் எனக்குத் தோன்றின. இளம்பூரணர் தொடங்கிச் சிவலிங்கனார், பாலசுந்தரம் வரை பலர் எழுதியுள்ள பல்வேறு உரைகளைப் படித்துப் பார்த்து, புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்துடன் வகுப்பில் மாணவர்கள் எழுப்பும் ஐயங்கள் என்னைப் பலமுறை திக்குமுக்காட வைத்துள்ளன.

வகுப்பறைக்கு அப்பால் நான் பல வினாக்களுக்கான விளக்கங்களைத் தேடி உரையாசிரியர்களிடம் வந்து அடைக்கலமானதுண்டு. இப்படியாகத்தான் நான் இலக்கண நூல்களோடு உறவானது. அத்துடன் தமிழ் இலக்கிய இலக்கணங்களை மொழியியல் அடிப்படையில் ஆராயும்போது பல புதிய விளக்கங்களைப் பெற முடிகிறது. இன்னும் சரியான புரிதல் ஏற்படாத ஏக்கம் எனக்குள் இருக்கத்தான் செய்கிறது.

அந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபடும்போது பல பல்கலைக் கழகங்கள் அவ்வப்போது நடத்திய கருத்தரங்குகளில் பங்கேற்கும் வாய்ப்பு என் இலக்கிய இலக்கண ஆய்வுகளுக்கு வடிகாலாயிற்று. அவ்வாறு கருத்தரங்குகளில் வாசித்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல் வடிவமாகும்.

ஆய்வு என்று சொன்னால் அது தவம் போன்றது எனக் கூறி அவ்வாறே வாழ்ந்துவரும் முதுபெரும் மொழியியல் அறிஞர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் என்னை ஆய்வுலகில் ஊக்குவித்து உதவியவர் ஆவார். இந்த ஏகலைவனின் இதய நன்றி அவருக்குக் காணிக்கையாகும்.

ஆய்வுக்குரிய அரிச்சுவடியை எனக்குக் கற்றுத் தந்து கைத் தாங்கலாய் என்னைக் கூட்டிச் சென்று உயர்த்திவிட்ட என் ஆசான் மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் இ. அண்ணாமலை அவர்களை நன்றியோடு வணங்கி மகிழ்கிறேன்.

எப்போதும் என்னை எழுதத் தூண்டும் அன்பு நண்பரும் எனது ஆய்வு மாணவருமான அழகப்பா பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் மு. பாண்டி அவர்களையும், உடுமலைப்பேட்டை அரசுக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் மு. மதியழகன் அவர்களையும் இக்கட்டுரைகளையெல்லாம் தேடித் தொகுத்த மாணவ நண்பர்கள் வீ.சோமசுந்தரம், பா. அனிதா, தமிழரசி, கவிதா மற்றும் தட்டச்சு செய்து உதவிய நண்பர்கள் குப்புசாமி, செல்வி சாந்தி குமாரி ஆகியோருக்கும் நன்றி கூறக் கடன்பட்டுள்ளேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரும் நாட்டுப்புற ஆய்வுலகில் தடம் பதித்து ஒளிரும் ஆய்வாளருமான பேராசிரியர் கே. ஏ. குணசேகரன் அவர்களைச் சந்தித்த போது, 'தங்கள் நிறுவனத்தில் எனது நூலை வெளியிட இயலுமா' என்று மிகுந்த தயக்கத்துடன் கேட்டேன். அடுத்த கணமே 'கொண்டு வாருங்கள்' என உற்சாகத்துடன் கூறி என்னை அளவிலா வியப்பிலும் மகிழ்ச்சியிலும் திளைக்க வைத்தார்கள். அத்துடன் ஒரு நாள் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவர் காட்டிய ஆர்வமும் அக்கறையும் என்னை மெய்சிலிர்க்க வைத்தன. அவரது பெரு முயற்சியின்றி இது நூல் வடிவம் பெற்றிராது. பேராசிரியர் கே. ஏ. குணசேகரன் அவர்களுக்கு -அவரது அன்பிற்கு- எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

தமிழ் ஆய்வுலகம் எனது இம் முயற்சியைப் பாராட்டி ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையுடன் தங்கள் கரங்களில் காணிக்கையாக்குகிறேன்.

மிகுந்த அன்புடன்,

எஸ். ஆரோக்கியநாதன்

பொருளடக்கம்

		பக்கம்
1.	தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சியில் மொழியியலின் பங்கு	1
2.	மொழித்தூய்மை : சில சிந்தனைகள்	10
3.	மொழி வழக்கில் ஆண் பெண் வேறுபாடுகள்	16
4.	மொழியும் பண்பாடும் : எழுவாய் மயக்கம்	20
5.	தொல்காப்பியம் : ஒரு வரன்முறை இலக்கணம்	25
6.	மொழியியல் நோக்கில் தொல்காப்பியப் புணர்ச்சி விதிகள்	31
7.	தொல்காப்பியத்தில் உவம உத்தி வளர்ச்சி	61
8.	சேனாவரையரின் உரைநெறி: கிளவியாக்கம்	73
9.	தமிழ் இலக்கியங்களும் இரட்டை வழக்கு நிலையும்	79
10.	சங்க கால இலக்கியக் கொள்கை : ஒரு வியப்பூட்டும் புதிர்	82
11.	மொழியியல் நோக்கில் "நாடனொடு நட்பு"	88
12.	சங்க இலக்கிய மரபைக் கட்டுடைத்த சிற்றிலக்கியங்கள்	91
13.	வள்ளுவரின் மொழித்திறன்	98
14.	திருக்குறளில் சமூகவியல் சிந்தனைகள்	102
15.	ஆத்திசூடியின் பாடுபொருள்	107
	துணைநூல்கள்	110

தமிழ்மொழி, இலக்கிய வளர்ச்சியில் மொழியியலின் பங்கு

ஒரு மொழியை அறிவியல் பூர்வமாக அணுகி ஆராயும் போக்கு மொழியியல் சார்ந்ததாகும் என்றால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் மொழியை அப்போது தெரிந்திருந்த அறிவியல் துணையோடு ஆராய்ந்த தொல்காப்பியரின் இலக்கண ஆய்வு மொழியியல் சார்ந்ததாகும் என்பதில் ஐயமில்லை. சங்க காலத்தில் பாட்டெழுதும் பணியே தலைதூக்கி நின்ற படைப்பிலக்கியக் காலமாதலால் மொழியும் இலக்கியமும் ஒன்றாகக் கருதப்பட்டு, இலக்கியத்தில் இருப்பதுதான் மொழி எனும் இறுகிய கொள்கை நிலவியிருந்தது. காலப்போக்கில் பண்டைய கவிதைப் படைப்புகள் ஓலைச்சுவடிகளில் முடங்கிப் போய்ப் படிப்போர் அருகிப் போனதால் அவற்றிற்கு உரைகள் தேவையாயின.

அனைவராலும் இலக்கியப் படைப்பிற்கு ஏற்றதாகப் போற்றப்பட்ட கவிதை நடையை ஒட்டியே உரைகள் எதுகை மோனைகளோடு எழுதப்பட்டன. அக் காலத்தில் இலக்கியப் படைப்புக்கு உரையெழுதப்பட்ட இலக்கியப் போக்கினை மொழி எளிமையாக்கம் எனும் உத்தி முறையாக மொழியியல் நோக்கில் ஓரளவு கருதலாம். இந்த உரைகளுக்கு இடையே சிற்சில திறனாய்வுக் கருத்துக்கள் விரவி வரத்தான் செய்தன. ஆயினும் அத்தகைய இலக்கியத் திறனாய்வுக் கூறுகள் அனைத்தும் ‘முன்னோர் மொழியைப் பொன்னைப்போல் போற்றும்’ தாரக மந்திரத்தினைத் தாண்டி வரவில்லை.

இலக்கிய மதிப்பீடுகள்கூட இலக்கியப் படைப்புகளைப் போலவே உணர்வுப்பூர்வமான தளத்தில் நிகழ்ந்தன. முற்காலத்தில் கவிதை எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் பொற்றாமரைக் குளத்தின் மேல் மிதந்தால் சிறந்த கவிதை என்றும் நீரில் மூழ்கினால் அது சிறப்பற்றது என்றும் முடிவு செய்ததாகக் கூறுவது கவிதையின் தன்மையைவிடக் கவிதை எழுதப்பட்டிருந்த ஓலையின் கனப்பரிமாணத்தைத் தீர்மானிப்பதாக அமையும் என்பதை இன்றைய அறிவியல் அறிவு உணர்த்தும். இறையனார் களவியல் உரைகளில் சிறந்தது எது என்று தேர்ந்தெடுக்கக் கையாண்ட உத்திமுறை நமது இலக்கிய மதிப்பீடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உச்சகட்ட வைதீக மரபை உறுதி செய்கிறது.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே முறையான கல்விமுறை நமக்கு அறிமுகமாகியது. நமக்குப் பிற துறைக் கல்வியும் பிற மொழியாளர்கள் வேறொரு மொழி கற்றலில் கற்பித்தலில் முறையானதொரு அணுகுமுறையைப் பின்பற்றும்

முயற்சியும் மேற்கொள்ளப்பட்டன. தமிழகத்தில் சங்க காலம் தொடங்கி வேற்று மொழியாளர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். தமிழ்மொழியைக் கற்றும் பேசியும் வந்துள்ளனர். மெய்ப்பாடுகளுள் ஒன்றாகிய நகை என்பதன் தோற்றுவாயிலைக் குறிப்பிட வந்த உரையாசிரியர் ஆரியர் பேசும் தமிழின்கண் நகை தோன்றும் என்று கூறியிருப்பதால், வேற்று மொழிக்காரர்கள் தமிழ்மொழி பேசினார்கள் என்றும் அவர்கள் பேசிய தமிழ் மாறுபட்டிருந்ததால் நகைப்புக்கு உள்ளாகியது என்றும் அறிகிறோம். ஆனால் முறையாக மொழி கற்றல் நிகழ்ந்ததற்கான ஆதாரம் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. பண்டைக் காலத்தில், தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றதிற்குச் சான்றுகள் இல்லை. தமிழகத்தில் வேற்று மொழிக்காரர்கள் தமது சுய முயற்சியால் பிறமொழியைக் கற்றுக் கொண்ட போக்கு ஐரோப்பியர் காலம் வரை நீடித்து வந்தது.

தாய்மொழியாளர்களுக்குத் தமிழ்மொழி அவர்களின் இலக்கியம் வழியாகக் கற்றுத் தரப்பட்டதாகக் கருதலாம். ஆரிய அரசன் பிரகத்தனுக்குக் கபிலர் குறிஞ்சிப்பாட்டுவழித் தமிழ்க் கற்பித்ததாகக் கூறுவது இதனையே உணர்த்தும். இலக்கியம் கற்பது புதியதொரு இலக்கியத்தைப் படைக்கவும், படைக்கப்பட்டுள்ள இலக்கியத்தை நயப்பு செய்யவும்தான் என்று கருதப்பட்டது. அதனால்தான் 'காரிகை கற்றுக் கவி பாடலாம்' என்று கூறினர்.

ஐரோப்பியர் கல்விமுறை காலூன்றும்வரை மொழி என்பது ஒரு தனிப் பொருளாகக் கருதப்படாமல் எள்ளிற்குள் இருக்கும் எண்ணெய்போல் இலக்கியத்திற்குள் புதைந்து இருப்பதாக மட்டுமே கருதினர். மொழியையும் இலக்கியத்தையும் படைப்புத் தளத்திலிருந்து தனித்தனியாகப் பிரித்து எடுத்து ஆய்வுக்களத்தில் ஐரோப்பியர்கள் நிறுத்திய பிறகுதான் அறிவியல் அணுகுமுறை யென்ற ஒன்றே இலக்கியத் துறையில் தலைதூக்கத் தொடங்கியது.

சமயம் பரப்புதலைப் பெரு நோக்கமாகக் கொண்டிருந்த ஐரோப்பியக் குருமார்கள் தாங்கள் கற்றறிந்த இலத்தீன் இலக்கணப் படிப்புமுறைப் போக்கில் தமிழ்மொழியைக் கூறுபோட்டு வகிர்ந்து பார்த்து, 'இது பெயர்ச் சொல், இது வினைச்சொல்' என்று வகைப்படுத்தி, வேற்றுமைகளை ஒன்று முதல் எட்டு வரை வரிசைப்படுத்தியும் தன்மை முன்னிலை படர்க்கை மூவிடங்களை 'நான் வந்தேன், நீ வந்தாய், அவன் வந்தான்' என்று வாய்பாட்டு வாக்கியங்கள் வழிப் பட்டியலிட்டும் கால வகைகளை நான் வருகிறேன், நான் வந்தேன், நான் வருவேன் என்று விரித்தும் மொழி இலக்கணத்தைக் கற்றுத் தரும் புதிய முறையினைக் கண்டறிந்தார்கள். இவ்வாறு மொழி கற்கும் முயற்சியால், மொழியாய்வு அமைப்பியல் அணுகுமுறையைப் பெற்றது. அதே சமயம் மொழி கற்றலுக்குத் தேவைப்படும் உபகரணங்களான அகராதிகள், உரைநடை நூல்கள், இலக்கண நூல்கள் ஆகியனவும் வெளிவரத் தொடங்கின.

19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் மேலைநாட்டு அறிவியல் உலகில் நிகழ்ந்த ஆய்வுக் கோட்பாடுகளை ஸ்திரப்படுத்தவும், ஸ்தூலப்படுத்தவும் தேவைப்படுகிற தரவுகளைக் கீழ்த்திசை நாடுகளில் தேடும் முயற்சிகள் ஒரு பக்கம் நடந்தன. மேலைநாட்டு மொழி ஆய்வுத் துறைகளில் மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து அவற்றிடையே நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளின் அடிப்படையில் மொழிக் குடும்பங்களை உருவாக்குதல் நிகழ்ந்தது. அதன் அடிப்படையில் கால்டுவெல் என்பார் திராவிட மொழிகளுக்கிடையே ஆய்வினை மேற்கொண்டு 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் நூலினை 1856இல் வெளியிட்டார். அதில் தமிழ்மொழி சமஸ்கிருதச் சார்பின்றித் தனித்து நின்றும், தனக்குரிய தனித்தன்மைகளை இழந்துவிடாமலும், மூல திராவிட மொழியின் கூறுகள் பலவற்றைத் தமிழ்மொழி தன்னிடம் தக்க வைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறது என்றும் விளக்கியிருந்தார்.

இதுவரை கவிதை நயப்புக்காரர்களாகவே இருந்து வந்த தமிழ் அறிஞர்கள் அறிவியல் துணையோடு தமிழ்மொழியின் அருமை பெருமைகளை, தனித்து நிற்கும் ஆற்றலை, வடமொழியைச் சாராது இருந்து வளர்ந்து வரும் போக்கை மேலைநாட்டார் விளக்கியிருப்பது கண்டு பெருமையும் புளகாங்கிதமும் அடைந்து மேலைநாட்டினரின் மொழி ஆய்வுப் போக்கினை மதித்துப் போற்றத் தொடங்கினர். இதன் காரணமாக மேலை நாட்டவர் கூறும் அறிவியல் சார்ந்த மொழி ஆய்வுப் போக்கினைப் புரிந்து கொள்ள முடியாமல் பேணுதலும் அதனை ஏற்று அவர்களுக்குக் கருத்துச் சொல்லத் தொடங்கினர்.

வடவரையும் வடமொழியையும் எதிர்த்துப் பேசியும், பண்டைத் தமிழ் இனப்பெருமை, இலக்கியச் சிறப்பு ஆகியவற்றை மூலதனமாகக் கொண்டு அரசியல் நடத்தத் தொடங்கிய திராவிட இயக்கங்களைக் கால்டுவெல்லின் கருத்துக்கள் வெகுவாகக் கவர்ந்தன. அத்துடன் ஆரியர்களையும் அவர் பேசும் ஆரிய மொழியின் கலப்பினையும் எதிர்த்து வந்த தனித் தமிழ் ஆர்வலர்களும் தமிழ் இலக்கிய விரும்பிகளும் கால்டுவெல்லின் கருத்தினை ஆதரித்து இலக்கிய மேடைகளில் எடுத்தியம்பத் தொடங்கினர்.

புலியை முறத்தால் அடித்த பெண்மணிகளைக் கொண்ட வீரப் பரம்பரையினர் என்றும் இமயமலையில் புலிக்கொடியைப் பொறித்து, வடவர்களாகிய கனக விசயர்களின் தலைமேல் கண்ணகிக்குச் சிலை செய்யக் கல் ஏற்றிக் கொண்டு வந்த சேரமன்னர்கள் வழி வந்த பரம்பரையினர் என்றும் இனப்பெருமை பேசினர். தமிழ்மொழி இன விழிப்புணர்வு திராவிட இயக்கங்களால் பரவலாக்கப்பட்டது என்றாலும் ஆரிய ஆதிக்கமும், வடமொழித் திணிப்பும் தமிழின் தமிழரின் தற்பெருமைப் போக்கிற்குத் துணையாயின. இவையெல்லாம் இளைய சமூகத்தினரிடையே தமிழ்மொழி இலக்கியம் பற்றிய ஈடுபாட்டினை வளர்த்து,

தமிழ்த்துறைகளில் தமிழ் படிப்போரின் எண்ணிக்கைகளைக் கூட்டின என்பதில் ஐயமில்லை.

1950களில் தமிழ் இலக்கியக் கல்வி பல்கலைக்கழகங்களில் பண்டைய இலக்கியப் பெருமைகளையும் இனப்பெருமைகளையும் மீட்டுருவாக்கம் செய்யும் நிலையில் 'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று போர்ப் பரணி கொட்டிய வண்ணம் பட்டப் படிப்புகளுக்குப் பல இளைஞர்களை ஈர்த்த வண்ணமிருந்தது. இதற்கு வெளியிலிருந்த திராவிட அரசியல் இயக்கங்களும் ஆரிய எதிர்ப்பால் எழுந்த மொழி இலக்கிய அமைப்புகளும் உறுதுணையாய் நின்றன. பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் (1881-1953), ரா.பி.சேதுப்பிள்ளை (1896-1961), பாலூர் கண்ணப்ப முதலியார் எனத் தொடர்ந்த மரபுவழிச் சார்ந்த பல்கலைக்கழக இலக்கியத்துறைப் பேராசிரியர்கள் பண்டைய தமிழ் இலக்கியங் களையும், தமிழ் மொழிப்பெருமைகளையும் தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பிலா உயர்வுகளையும் தமது கல்விப் பாடங்களின் வழியாகப் போதித்து வந்தனர்.

அறிவியல் வழிப்பட்ட மேலை நாட்டினரால் தமிழுக்குப் பெருமை சேர்த்த ஆய்வு முடிவுகளைக்கூட நம் தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும், திராவிட இயக்கங்களும், சமூக அரசியல் இலாபங்களுக்காக உணர்வு வழிப்பட்ட செய்தி களாகப் பயன்படுத்திக் கொண்டதோடு மரபுவழிச் சார்ந்த கல்வி மையங்களிலும் அதனை நிலைநாட்டத் தொடங்கினர். தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பட்ட வகுப்பிற்குரிய பாடத்திட்டத்திற்கு ஏற்று, முறையாகக் கற்றுத் தந்து, இலக்கிய நயப்புகள் செய்து, பழம்பெருமை பேசித் தமிழாசிரியர்கள் பாடம் நடத்தி வந்தனர். பல்கலைக் கழகப் பணி பழைய இலக்கியங்களை மனனஞ் செய்யும் மனநிலையையும் அவற்றைப் பயிலவும், பயிற்றவும் வாய்ப்புத் தருவதாக அமைகிறது என்று க.கைலாசபதி (1968) தமது தமிழில் முதல் நாவல் இலக்கியம் என்ற நூலின் முன்னுரையில் கூறுவது இங்கே சிந்திக்கத்தக்கது.

1954இல் டேராடூனில் நடந்த கோடை காலப் பயிற்சிப் பள்ளி வழியாகவும் சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்பாகவும் மொழியியல் இந்திய அரங்கிற்குள் குறிப்பாகத் தமிழகத்தில் நுழையத் தொடங்கியது. இந்த டேராடூன் மொழியியல் கோடை காலப் பள்ளிக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் பேராசிரியராக இருந்த தெ.பொ.மீனாட்சிசுந்தரன் அவர்கள் சென்று வந்தார்கள். அதன் விளைவாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அதன் வெள்ளி விழா ஆண்டாகிய 1956ஆம் ஆண்டு பல்கலைக் கழக மானியக் குழுவின் நல்கையுடன் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த தேவநேயப் பாவாணரை வைத்து மொழியியல்துறை தொடங்கப்பட்டது. பின்னர், தெ.பொ.மீனாட்சிசுந்தரன் மொழியில் துறையின் தலைவரானார். இதன்வழி, தமிழகத்தில் மொழியியல் துறை முறையாகக் காலூன்றத் தொடங்கியது.

மேலை நாட்டினர் தமது மொழியியல் அணுகுமுறையில் தமிழ்மொழியின்-தமிழர்களின் அருமைபெருமைகளை இலக்கியங்களின்வழி ஆய்வு அணுகுமுறையோடு மீட்டுருவாக்கம் செய்த வரலாற்றினை அறிந்திருந்த மரபு சார்ந்த தமிழறிஞர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறையின் தொடக்கத்தைப் பொதுவாக வரவேற்றனர் என்றே கூறலாம்.

அக்காலத்தில் தமிழறிஞர்கள் பலரும் தமிழ் இலக்கணமும் இலக்கியமும் நன்கு கற்றுத் தேர்ந்து புலமை பெற்றிருந்தனர். பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார், தெ.பொ.மீனாட்சிசுந்தரன் போன்ற ஒரு சாரார் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுடன் சமஸ்கிருத மொழியையும் நன்கு அறிந்திருந்தனர். பேரா சி.இலக்குவனார், ரா.பி.சேதுப்பிள்ளை போன்ற இன்னொரு சாரார் ஆங்கில இலக்கண இலக்கிய அறிவுடையவர்களாக இருந்தார்கள். சிறுபத்திரிகைகள் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் தமிழ் ஆர்வலர்களாக இருந்த டி.கே.சிதம்பரநாத முதலியார், க.நா.சுப்பிரமணியன் போன்றவர்கள் தமிழ்த் துறைகளில் சிக்காமல் தனிப்பட்ட முறையில் முறையாகத் தமிழ் கற்றவர்களாக இருந்தனர்.

1950களுக்கு முன்னால் தமிழறிஞர்கள் பலரும் தமிழ் மொழியோடு ஆங்கிலமும் இன்னும் சொல்லப் போனால் சமஸ்கிருதமும் அறிந்து, அம்மொழிகளின் இலக்கண இலக்கியங்களைக் கற்றவர்களாகவும் இருந்தனர். பொதுவாகச் சமஸ்கிருதமும் ஆங்கிலமும், அறிந்த தமிழறிஞர்கள் தேசிய உணர்வு கொண்டவர்களாகவும், தமிழ் மட்டுமே அறிந்தவர்கள் திராவிடத் தேசிய உணர்வு கொண்டவர்களாகவும் அரசியல் ரீதியாக வகைப்பட்டிருந்தனர் என்பது சற்று வேறுபட்ட விஷயமாகும். தெ.பொ.மீனாட்சிசுந்தரன் அவர்கள் சமஸ்கிருதம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மும்மொழிகளிலும் இலக்கண இலக்கியப் பரிச்சயம் உடையவராக இருந்தார். அதனால் அவர் தலைமையின்கீழ்த் தொடங்கப்பட்ட மொழியியல்துறை தமிழகத்திலிருந்த பிற தமிழ்மொழி இலக்கியத் துறையின் பங்கினை மனதில் கொண்டு தமது மொழியியல் கொள்கைக்கு ஏற்ப மொழி ஆய்வில் மட்டுமே பொதுவாக அதிகக் கவனம் செலுத்தத் தொடங்கியது. மொழியியல் துறையில் ஆங்கிலவழிக் கல்விமுறை கடைபிடிக்கப்பட்டதாலும், அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறை, கன்னட, மலையாள, தெலுங்கு மொழிகளில் மொழியியல் ஆய்வுகள் நிகழவும், மொழியியல் அறிஞர்கள் உருவாகவும் ஊன்றுகோலாக இருந்தது.

மொழியியல் துறையில் பணி மேற்கொள்ள வந்த ஆசிரியர்கள் பெரும்பாலும் முறையாகத் தமிழ் கற்றுத் தமிழாசிரியர்களாகவும் சிலர் மொழியியலில் சான்றிதழ் அல்லது பட்டயம் பெற்றவர்களாகவும் இருந்தனர். தொடக்க நிலை ஆய்வாளர்களும், முதுகலைத் தமிழ் படித்தவர்களாகவே இருந்தனர். அதனால்தான் 1960களின் தொடக்கத்தில் காணும் மொழியியல்

துறை ஆய்வுகள் எல்லாம் பண்டைத் தமிழ் இலக்கியங்களையும் கல்வெட்டுகளையும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளாக அமைந்தன.

சான்றாக, தாட்சாயினியின் கம்பராமாயண யாப்புநிலை, சிங்காரவேலுவின் அப்பர் தேவாரப் பாடல்களில் மொழியியல் ஆய்வு ஆகியன மேற்கொள்ளப்பட்டன. மொழிநடை ஆய்வுகள் என்ற வரிசையில் கு.முருகையன் கலித்தொகையையும், விஜயவேணுகோபால் நன்னூலையும், பரமேஸ்வரி திருக்குறளையும், எஸ்.என்.கந்தசாமி பரிபாடலையும், நித்தியகல்யாணி நற்றிணையையும், சுப.திண்ணப்பன் பழமொழியையும் ஆய்வுசெய்தனர். இலக்கணத்தில் தமிழில் பெயர்ச்சொல் இணைகள் பற்றி விஜயவேணுகோபாலும், தமிழ்ப் பெயர்ச்சொற்கள் பற்றிக் கமலேஸ்வரனும் ஆய்வு செய்தனர். தமிழ் நாடகம் பற்றி ஆறு.அழகப்பன் ஆய்வு செய்தார். கி.பி.1050 முதல் 1250 வரையிலான கல்வெட்டுகளின் மொழிநடை பற்றிப் பாகீரதியும், கி.பி.1350 முதல் 1700 வரையிலான கல்வெட்டுகளின் மொழிநடை பற்றிச் செ.வை.சண்முகமும் ஆய்வு மேற்கொண்டனர். கிளைமொழி ஆய்வுகளாகப் பொதுப் பேச்சு மொழி பற்றி மு. சண்முகம்பிள்ளையும், கொல்லி மலை மக்களின் மொழியினைக் கி. கருணாகரனும், நரிக்குறவ மக்களின் மொழியினைச் சீனிவாச வர்மாவும் ஆய்வு மேற்கொண்டனர். இதுதவிர, கன்னடம், தெலுங்கு, மலையாளம், உருது ஆகிய மொழிகளிலும் அவற்றின் இலக்கிய, கல்வெட்டுத் தரவுகளின் அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அக்காலத்திய மொழியியல் ஆய்வாளர்களும், அவர்களது நெறியாளர்களும் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களாகவும், மொழியியலில் சான்றிதழ் அல்லது பட்டயம் பெற்றவர்களாகவும் இருந்தனர். மொழியியல் துறையினரில் சிலர் வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் மொழியாய்வு தொடர்பாகச் சென்றுவருவதும் மேலை நாட்டினர் பலர் தமிழ் படிக்க இங்கு வருவதும் நிகழ்ந்தன. மேலைநாட்டினர் தமிழை ஆர்வமுடன் கற்க வருவதற்குத் ‘தமிழோசை திக்கெட்டும் பரவச் செய்வதற்கு’ மொழியியல்துறை காரணமாக இருப்பதால் மரபுவழிச் சார்ந்த பல்கலை மற்றும் கல்லூரித் தமிழ் அறிஞர்கள் மொழியியல் துறையினைச் சற்றுக் கரிசனமாகப் பார்க்கத் தொடங்கினர்.

இதே சமயம் தமிழகத்திலிருந்த சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைகளும், பல கல்லூரிகளின் தமிழ்த்துறைகளும், மரபு இலக்கிய, இலக்கண ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வந்தன. பேராசிரியர் சோமசுந்தர பாரதியார், ரா.பி.சேதுப் பிள்ளை, டி.கே.சிதம்பரநாத முதலியார் போன்றோரும், எளிய தமிழில் பல்வேறு தமிழ் இலக்கிய நூல்களும், நாவல்களும் எழுதிப் பிரபலமாக இருந்த கல்லூரிப் பேராசிரியர் மு.வரதராசனார் போன்றவர்களும் அ.ச.ஞானசம்பந்தன், தா.ஏ. ஞானமூர்த்தி, தமிழண்ணல், சி. பாலசுப்பிரமணியம், ந. சஞ்சீவி, பொன். சௌரிராஜன் போன்றவர்களும்

மரபுவழி ஆய்வுகளை மேற்கொண்டனர். பிற்காலத்தில் இவர்களெல்லாம் மு.வ.வகையினர் மு.வ.பள்ளியினர் எனக் கூறுமளவிற்கு மொழி இலக்கிய ஆய்வுகளில் மரபுவழிச் சார்ந்து நின்றனர். இவர்களைப் பின்பற்றிப் பல்வேறு கல்வி நிறுவனங்களும் இத்தகைய மரபு சார்ந்த இலக்கிய இலக்கண ஆய்வில்-இலக்கிய நயப்பு வேலைகளை விட வகுத்தும் தொகுத்தும் கொண்ட அடிப்படை அறிவியல் சார்ந்த ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கினர்.

இதே வேலையில் தெ.பொ.மீ. அவர்களைப் போலவே கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவராயிருந்த வி.ஐ.சுப்பிரமணியம், அங்கு அமைக்கப்பட்ட மொழியியல் துறையின் தலைவரானார். தமிழின் மொழி வளர்ச்சிக்கு மொழியியல் துறையும், இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கியத் துறையும் இணை கோட்டில் இயங்குகின்றன என்றே பொதுவாகப் பலரும் கருதினர். ஆயினும் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, மொழியியல் துறையின் ஈர்ப்புடனும், மலையாள இலக்கிய இலக்கண ஆய்வினை அறிவியல் கண்கொண்டு அணுகத் தொடங்கியது. திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைத் தவிர்த்து ஏனைய திராவிட மொழி பேசும் மாநிலங்களான ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் தமிழ்த்துறைகள் தமிழ் கற்பிக்கும் துறைகளாக இருந்தனவென்று கருதலாம். பொதுவாகத் தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வில் மொழியியல் அணுகுமுறையினைப் பின்பற்றுவதில் தமிழகக் கல்வி நிறுவனங்களை விடத் தமிழகத்திற்கு வெளியிலிருக்கிற பிற மாநிலக் கல்வி நிறுவனங்களும் அயலகக் கல்வி நிறுவனங்களும் அதிக அக்கறை காட்டின எனலாம்.

கீழ்த்திசை நாடுகளான சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளில் மொழியியல் கண்கொண்டு தமிழாய்வுகளும், மொழியாய்வுகளும் விரிவடையத் தொடங்கின. ராம.சுப்பையாவின் கீழ்பராக் (Lower Perak) பகுதிகளில் தமிழ் மொழி வழக்கு என்ற ஆய்வு இதற்குச் சான்றாகும். அது போன்றே இலங்கையில் க.கைலாசபதியின் தமிழ் மொழியின் வீரயுகக் காலம் பற்றிய ஆய்வு இலக்கியத் துறையில் காணப்படும் அறிவியல் அணுகுமுறை கொண்ட ஆய்வாகக் கருதலாம். சுசிந்திரராஜா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இலங்கைத் தமிழ்க் கிளை மொழி ஆய்வினை முனைவர் பட்டத்திற்காக நிறைவு செய்துவிட்டு இலங்கையில் மொழியியல் ஆய்வினை மேற்கொண்டார். இலக்கியத் துறையில் பேரா. கைலாசபதியும், மொழியியலில் தனிநாயக அடிகளும், சுந்தரராஜாவும் இலங்கையில் தமிழ்மொழி இலக்கிய ஆய்வுகளில் அறிவியல் அணுகுமுறையை வளர்த்து வந்தனர். அவர்களைத் தொடர்ந்து கா. சிவத்தம்பி போன்றவர்கள் தமிழில் திறனாய்வுப் போக்கினை மார்க்சிய அணுகுமுறையுடன் மேலாய்வு செய்திருப்பதை நாமறிவோம்.

1969இல் மைசூரில் தொடங்கப்பட்ட இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் மொழியியல் பட்டதாரிகளுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்கித் தந்ததால் மொழியியல் பட்டப்படிப்பு ஒரு உத்வேகம் பெற்றது.

1976இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறையில் 44 முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்ததாக மொழியியல் துறை கையேடு குறிப்பிடுகிறது. 1966இல் தெ.பொ.மீனாட்சிசுந்தரன் மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவியேற்றார். 1972இல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் பேராசிரியர் ஆறுமுகத்திற்குப் பின்னால் மு. சண்முகம் பிள்ளை தமிழ்த்துறைத் தலைவரானார். மு. சண்முகம் பிள்ளை அவர்கள் பேச்சுத் தமிழில் முனைவர்பட்ட ஆய்வு செய்தார் என்பதால் தாம் சார்ந்த மரபுவழிப்பட்ட பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு நவீனத்துவம் மிகுந்த புதியதோர் வடிவினை வழங்கினார். உரைநடை இலக்கியம் பற்றிய ஆய்வுகளும் பல்கலைக்கழக வளாகத்திற்குள் படியேறி வந்தமர்ந்தன.

நாட்டுப்புற வாய்மொழி இலக்கியங்களை எழுத்து இலக்கியங்களைப் போன்று இலக்கியத் தகுதியும் தரமும் உடையதாகக் கருதிப் பல்கலைக்கழக மட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள முனைந்ததால் நாட்டுப்புறவியல் பற்றிய விழிப்புணர்வும் நாட்டுப்புற இலக்கியம் பற்றிய பெருமிதமும் தோன்றத் தொடங்கின. அத்துடன் நாட்டுப்புறவியல் ஆய்வில் ஈடுபட்ட அனைவருக்கும் மேலை நாட்டினரின் மொழியியல் சார்ந்த ஆய்வு அணுகுமுறைகளே வழிகாட்டிகளாக அமைந்ததால் மொழியியல் அணுகுமுறை இந்தப் புதிய துறையின் ஆய்வுத் தளத்திலும் பயன்பட்டது. இதுவரை வெளியிலேயே இருந்து வந்த தமிழ் ஆர்வலர்களும், தமிழ் மரபு வாதப் போக்கினைக் கடுமையாக விமர்சித்து நவீனத்துவத்தை ஆதரித்து வந்த சி.சு. செல்லப்பா, க.நா.சு. போன்ற சிறு பத்திரிகையாளர்களும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் நவீனத்துவத்தை வெகுவாக ஆதரித்து வரவேற்றனர். இதன் காரணமாகச் சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழத் துறைகளும், பிற கல்லூரிகளின் தமிழ்த் துறைகளும் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தைப் பின்பற்றி ஓரளவு மரபுகளை நெகிழ வைத்துத் தத்தமது பாடத்திட்டங்களில் பற்பல புதிய தேவைக்கான மாற்றங்களை மேற்கொள்ளத் தொடங்கின.

தமிழ் ஆசிரியர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த இந்த ஆய்வு அணுகுமுறை மன மாறுதலை மேலும் வளர்த்திட மொழியியல் துறையினர் பெரிதும் முயன்றனர். மொழியியல் ஆய்வாளர்களும், தமிழ் அறிஞர்களும் ஒரு தளத்தில் சந்திக்கவும், தமிழ் ஆசிரியர்களை ஆய்வுக் கட்டுரைகள் எழுத ஊக்குவிக்கும் முகமாகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இருந்தபோதே தெ.பொ.மீனாட்சிசுந்தரன் அவர்கள் இலக்கியப் பேராசிரியர்களான தா.ஏ.ஞானமூர்த்தி, வ.சுப.மாணிக்கம் ஆகியவர்களின் துணையோடு மொழியியல் துறையினரின் ஆதரவுடன் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழ் ஆசிரியர் மன்றம் என்ற அமைப்பினைத் தோற்றுவித்தார்.

இதன்வழி ஆண்டுதோறும் பல்கலைக்கழக ஆசிரியரிடமிருந்து ஐந்து பக்க அளவில் கட்டுரை ஒன்றினைப் பெற்று அவற்றையெல்லாம் 'ஆய்வுக்கோவை' என்ற பெயரில் தொகுத்து வெளியிட்டு, மாநாடு நடத்துவது அதன் பெரும்

நோக்கமாக இருந்தது. இதன் முதல் மாநாடு 1969இல் மதுரை தியாகராசர் கல்லூரியில் நடந்தது. இது இலக்கியப் பேராசிரியர்களை மொழியியல் ஆய்வுக் கட்டுரைகளுக்கும் ஆய்வு அணுகு முறைகளுக்கும் அறிமுகப்படுத்தியது. 1970களில் தமிழ் ஆய்வுலகில் அறிவியல் அணுகுமுறையோடு மொழியையும், இலக்கியத்தையும் ஆராய வேண்டும் என்ற உந்துதலுக்கு மொழியியலின் பங்களிப்பு பெருமளவு இருந்தது என்பதில் ஐயமில்லை.

இத்துடன் மரபுவழி இலக்கிய வாசிப்பினை எதிர்த்தும் பரிச்சார்த்த முறையில் ஆர்வம் கொண்டு நவீனத்துவத்தை ஆதரித்தும் வந்த பல்வேறு இலக்கிய வட்டங்களும் இலக்கிய ஆர்வலர்களும், மொழி இலக்கிய ஆய்வுகளில் புதிய போக்கினை வேண்டி நின்றதும், பத்திரிகைகளும் அத்துடன் மேலை நாட்டினர் தமிழ் மொழியின் அருமை பெருமைகளை அறிவியல் அணுகுமுறை கொண்டு எடுத்தோதியதால் அந்த ஆய்வு முறை மீதும் அதற்குரிய மொழியியல் அணுகுமுறை மீதும் ஏற்பட்ட மரியாதையும் மதிப்பும் மரபு வழிப்பட்ட பல்கலைக்கழகத் தமிழ் அறிஞர்களை மொழி இலக்கிய ஆய்வில் மொழியியல் அணுகுமுறையைச் சற்றே தயக்கத்துடன் ஏற்றுக்கொள்ள வைத்தன என்பதில் ஐயமில்லை.

மொழித்தூய்மை : சில சிந்தனைகள்

மொழி ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி. தனிமனிதச் சிந்தனைகளை வெளிப்படுத்தவும், சமூகத்தினர் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் மொழி எளியதொரு வாயிலாக அமைகிறது. எழுத்து, பேச்சு எனும் இரு ஊடகங்களின் வழியே கருத்துப் பரிமாற்றங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. அவை எழுத்து வரி வடிவங்கள் வாயிலாகவும், பேச்சு ஒலியமைப்பு வாயிலாகவும் நிகழ்கின்றன. இவற்றில் பேச்சு மொழியே முதலில் தோன்றியதும் முக்கிய மானதுமாகும். மொழியின் எழுத்து வடிவம் பெரும்பாலும் செம்மை செய்யப்பட்டு வரன்முறைக்கு உட்பட்ட புனைநிலையாக அமைகிறது.

மொழியின் பயன்பாடு அம்மொழி பேசும் சமூகத்தின் தேவைக்கு ஏற்ப விரிவடைந்து வளர்ச்சி பெறுகிறது. இலக்கியப் படைப்புகள் மொழி வாயிலாக நிகழ்கின்றன. மேலும் இலக்கியப் படைப்புகள் உயர்வாகக் கருதப்படுவதால் அவற்றிற்குப் பயனாகும் மொழி வகை உயர்ந்ததாகவும், சிறந்ததாகவும் கருதப்படுவதுமுண்டு. வாய்மொழி இலக்கியம் பேச்சு மொழியில் வாழ்ந்து வருவதை மறந்துவிட முடியாது. பலசரக்குப் பட்டியல், சலவைக் கணக்கு முதல் கடிதம் எழுதுதல், காவியம் படைத்தல் வரை எழுத்து மொழியின் பயன்பாடு நீண்டுள்ளது. அதுபோன்றே குழந்தைகளோடு கொஞ்சுதல், குழாயடிச் சண்டை தொடங்கி மேடையில் பேசுதல், வகுப்பறை விளக்கம் வரை பேச்சு வழக்கு பயனாகும் சூழல்களும் விரிவடைந்துள்ளன.

மொழித் தூய்மை ஒவ்வொரு மொழியின் வரலாற்றிலும் மொழி ஆர்வலர்களால் மேற்கொள்ளப்படும் பாராட்டிற்குரிய முயற்சியாகும். பெரும்பாலும் மொழித் தூய்மை எழுத்து மொழியைச் சார்ந்தே பேசப்படுகிறது. மொழியின் தூய்மை நிலை பாதிக்கப்பட்டிருப்பதுதான் இம்முயற்சிக்குக் காரணமாக அமைகிறது. அகநிலையில் மொழிக்குரிய வரன்முறை காலப்போக்கில் மீறப்படுவது அல்லது பின்பற்றாத நிலை மொழித்தூய்மைக்கு ஒரு காரணமாகும். மொழியின் வரன்முறை அதன் அமைப்பை, பயன்பாட்டை அடியொற்றியது. மொழி யமைப்பை, அதன் உட்கூறுகளை விளக்குவது அம்மொழியின் இலக்கணமாகும். ஆகையால் மொழியின் இலக்கணம் நெகிழ்வுற்றுப் பின்பற்றப்படாத நிலை ஏற்படும் போது மொழித்தூய்மை தோன்றுகிறது. மொழியின் இலக்கணம் மொழியின் ஒலி, சொல், தொடர், வாக்கியம் என அதன் உட்கூறுகளின் அமைப்பையும் அவற்றின் பயன்பாட்டினையும் அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் மொழியின் உட்கூறுகளில் நெகிழ்வு ஏற்படும்போது அதன் இலக்கணம் மீறப்படுவதாகக் கருதப்படும். இது மொழித் தூய்மைக்கு மாறான போக்காக அமைகிறது. புறநிலையில் பிறமொழித் தாக்குதலால் ஒருமொழி அதன் உட்கூறுகளில் பல்வேறு மாற்றங்களை அடையலாம். இதனால் மொழித்தூய்மை பாதிக்கப்படலாம்.

சங்ககாலந் தொடங்கித் தமிழ் மொழியில் மொழித்தூய்மை அவ்வப்போது நிகழ்ந்து வந்தாலும் மறைமலையடிகளின் காலந் தொடங்கியே இஃது ஓர் இயக்கமாக உருவாகி வலுப்பெற்றுள்ளதைக் காணலாம். தொல்காப்பியம் தமிழ் மொழியின் வரன்முறை இலக்கணம் என்று கருதப்படுகிறது. ஆயினும் ஒன்றிற்கே யுரிய பல வேறுபாடுகள் இருப்பதைத் தொல்காப்பியம் சுட்டிக்காட்டவும் தவற வில்லை. 'தே+குடம்' என்பது தேன்குடம், தேங்குடம், தேக்குடம் எனப் பலவாறு வரலாம் என்பதே இதற்குச் சான்றாகும். ஆயினும் தொல்காப்பியர் காலத்து விதிமுறைகள் பல நன்னூலார் காலத்திலேயே பின்பற்றப்படாது வழக்கொழிந்து போனதையும், புதிதாகப் பல கூறுகள் ஏற்பட்டதையும் வரலாறு உணர்த்துகின்றது. வடமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்திப் பயன்படுத்தத் தொல்காப்பியர் வழி அமைத்துவிட்டதால் இன்று வடமொழி (பிறமொழி)ச் சொற்களை எழுதப் பயன்படும் ஜ, ஷ, ஹ போன்ற கிரந்த எழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கு அட்டவணையில் இடம்பெற நேர்ந்துள்ளன.

தொல்காப்பியக் காலத் தமிழர்களும் தமிழ்ச் சமூகமும் இன்று முற்றிலும் மாறியிருப்பது கண்கூடு. பிற சமயத்தைச் சார்ந்தவர்களும் தமிழர்களாக இருக்கிறார்கள். 'இன்பத் தமிழ் எங்கள் மொழி, இஸ்லாம் தங்கள் வழி' எனும் தமிழ் முஸ்லீம்களும், 'கர்த்தரும் கன்னித் தமிழும் எங்கள் இரு கண்கள்' எனும் கிருத்துவர்களும், சமணர் போன்றோரும் தமிழர்களே. தமிழ்நாட்டில் பிறந்து தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இவர்கள் தங்களது அயல்நாட்டுச் சமய ஈடுபாட்டினால், தாய்மொழியில் பிறமொழிச் சொற்களாகிய பல சமயச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். அத்துடன் தங்களது சமய ஈடுபாட்டினால் சமயப் பெரியார்களின் பெயர்களைத் தமிழ்க் குழந்தைகளுக்கு வைப்பதால் பிறமொழிச் சொற்களும் புழக்கத்திற்கு வருகின்றன.

இவற்றையெல்லாம் தமிழ்ப்படுத்தினால், தமிழொலிகளுக்கு ஏற்ப மாற்றி யமைத்தால் பொருள் வேறுபட்டுவிடும். அத்துடன் சில சொற்களை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தமது குறியீடாகக் கருதுகிறார்கள். 'வணக்கம்' என்பதற்குப் பதிலாகக் கிறித்துவர்கள் 'தோத்திரம்' என்றும் முஸ்லீம்கள் 'சலாம்' என்றும் பிராமணர்கள் 'நமஸ்காரம்' என்றும் கூறுகிறார்கள். இவை போன்ற குறியீட்டுச் சொற்களைத் தமிழ்ப்படுத்துவது அவர்களது சமய உணர்வுகளுக்கு இடர்ப்பாடாக அமையும்

தமிழர் சமூகம் புதிய சமயங்களை, பழக்க வழக்கங்களை இலக்கிய் வளமையை ஏற்று மொழிப் பயன்பாட்டினை விரிவடையச் செய்துள்ளது. சமூக வளர்ச்சியே மொழி வளர்ச்சிக்கு அடிப்படை. மொழி தானாக வளர முடியாது; வாழ முடியாது. இந்த அறிவியல் உண்மையைப் பல ஆண்டுகளாக அறிஞர்கள் கூறி வருகின்றபோதும் ஆர்வலர்கள் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியதாகத் தமிழின் தோற்றத்தையும், தமிழின் வளர்ச்சியே தமிழரின் வளர்ச்சி என்ற கோட்பாட்டையும் உறுதிபடக் கூறுவதைக் காணலாம். ஆயினும் ஒரு சமூகம் தன் வளர்ச்சியை மனதில் கொண்டு தன் மொழி வளர்ச்சியைத் திட்டமிடுதல் கூடும். மொழி வளர்ச்சியை இரு வகைகளில் திட்டமிடலாம். மொழியின் அக நிலையில் புதிய இலக்கணம், அகராதி, கலைச்சொல் உருவாக்கம் முதலியன ஏற்படலாம். மொழியின் பயிற்றுமொழிக் கொள்கை, ஆட்சிமொழிக் கொள்கை, மொழியின் பயன்பாட்டுச் சூழல்களை விரிவுபடுத்துதல், அவற்றை நிலைப்படுத்துதல் ஆகியன மொழி வளர்ச்சிக்கான புறநிலைத் திட்டங்களாகும்.

தமிழ் நெடுங்கணக்கு கல்லில் வடிக்கப்பட்ட காலத்திற்கும், பனை யோலையில் எழுதப்பட்ட முறைக்கும், தாளில் அச்சடிக்கப்பட்ட நிலைக்கும், தற்போது கணிப்பொறியில் பதிவு செய்யப்படும் பாங்கிற்கும் ஏற்ப மாற்றங்களைக் கண்டுள்ளது. மொழியின் எல்லாக் கூறுகளிலும் இது போன்ற மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போது மொழியின் இலக்கணமும் தானாக மாறுபட்டே தீர வேண்டும்.

'ன.ஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்'

'மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கைக்
காலக் கிளவியோடு முடியும் என்ப'

எனும் விதிகள் மாற்றம் பெற்றிருப்பதைக் காணலாம். அழனும் புழனும் வழக்கிழந்த சொற்கள் என்பதால்

'அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
. . . .'

எனும் விதி இன்று நமக்கு அவ்வளவாகத் தேவைப்படவில்லை. இவ்வாறு கொள்ளுவன் கொண்டு தள்ளுவதைத் தள்ளி 'எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்', இலக்கணநூல் புதிதாக இயற்றிடவும் வேண்டும்' (பாரதிதாசன், கவிதைத் தொகுதி – 2, ப.95).

இன்றைய சூழலில் அறிவியல் தொடங்கி அடுப்பங்கரை வரை மொழிப் பயன்பாடு விரிவடைந்துள்ளது. அறிவியல் கட்டுரைகள் எழுதும் போது தமிழில் பிறமொழி கலவாது எழுதுவது கடினமாகக் கருதப்படுகிறது. தமிழில் அறிவியல்

கலைச்சொற்கள் போதிய அளவு இன்னும் உருவாக்கப்படவில்லை, தரப்படுத்தப் படவுமில்லை. கம்ப்யூட்டரைக் குறிக்கக் கணிப்பொறி, கணிப்பான், கணினி என்று வெவ்வேறு சொற்களை நாம் பயன்படுத்துகிறோம். அதில்கூட இதுதான் சரி இதையே எல்லோரும் பயன்படுத்துவோம் என்று சொல்லும் அதிகாரம்கொண்ட ஓர் மையம் (பிரஞ்சு அகாதமி போன்றதோர் அமைப்பு) நம்மிடம் இல்லை. அப்படியே ஓர் அமைப்பு இருந்து அவ்வாறு சொன்னால் நாம் அனைவரும் அதையே பின்பற்றும் நிலையில் இருக்கிறோமா? நமது பல்கலைக் கழகங்களுக் கிடையே டாக்டர் பட்டம் வழங்குவதில் ஒற்றுமை காண முடிகிறதா? ஓரிடத்தில் டாக்டர் என்பது பிற இடங்களில் முனைவர், அறிஞர், பண்டாரகர் என வேறுபடுகிறது.

இவ்வாறு பல்வேறு வேறுபாடுகளுடன் ஒரு பொருளுக்குப் பல்வேறு சொற்கள் வழக்கில் வரும்போது சொற்களைத் தரப்படுத்த இயலாது. இன்னும் ஆழ்ந்து அறிவியல் கட்டுரைகள் எழுதும் போது பல கலைச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொற்கள் நம்மிடம் இல்லை. சக்கரம், அச்சு, ஆரம் எனக் கட்டை வண்டியின் பாகங்களைத் தமிழில் கூறலாம். ஏனெனில் கட்டை வண்டி நமது கண்டுபிடிப்பு. ஆனால் சைக்கிள், ஸ்கூட்டர், கம்ப்யூட்டர் போன்றவற்றின் பாகங்களுக்குத் தமிழ்ச் சொற்கள் அவ்வளவு எளிதாகக் கிடைத்துவிட்டன. மிதிவண்டி, மகிழுந்து வண்டி, கணிப்பொறி என்று அவற்றைச் சொல்வதே இப்போது பரவலாகியுள்ளது. மேலும் அவற்றைத் தூயதமிழில் பயன்படுத்தினால் கருத்துப்பரிமாற்றம் ஓரளவு தடைபடுகிறது.

தமிழ்ப் பத்திரிகைத்துறை 'வடவேங்கடம் தென்குமரி' எல்லைக்குள் மட்டுமே செயல்பட முடியாது. பிற மாநில, பிற நாட்டுச் செய்திகளை அறிவிக்கும் கடப்பாடு பத்திரிகைத்துறைக்கு இருக்கிறது. அவசரத்தில் எழுதப்படும் இலக்கியமாகப் பத்திரிகைத்துறை விளங்குகிறது. பிறமொழிச் சொற்களின் கலப்பினை அங்கே தவிர்க்க இயலாததாகிவிடுகிறது. முடிந்தவரை பிறமொழிச் சொற்களை, தொடர்களைத் தவிர்க்கலாம். ஆனால் முற்றிலும் முடியுமா என்பது ஐயமே. அறிவியல், பத்திரிகை ஆகிய துறைகளில் கிரந்த எழுத்துக்களைக் கலக்காது, பிறமொழிச் சொற்களை முற்றிலும் தவிர்த்து எழுத முடியாது என்பதை நடைமுறை உணர்த்துகிறது.

ஆனால் இலக்கியக் கட்டுரை எழுதும்போது நாம் நிச்சயம் தூய தமிழில் எழுதலாம். லகர ரகரம் போன்ற எழுத்துக்கள் மொழி முதலில் வராமலும் அவ்வாறே க், ச் போன்றவை மொழியிறுதியில் வராமலும் எழுதுதல், முழுதும் மரபிலக்கணத்திற்கு உட்பட்டுப் பிற மொழிச் சொற்களின் கலப்பின்றி நமது இலக்கணத்திற்குரிய தொடர் மற்றும் வாக்கியங்களை மட்டுமே பயன் படுத்துதல் போன்ற இத்தகைய போக்கைத் தமிழறிஞர்களே கடைப்பிடிப்பதில்லை. இலக்கியக் கட்டுரையை வேண்டுமானால் இந்த வரன்முறை விதிகளுக்கு உட்பட்டு

எழுதுவார்கள். ஆனால் பத்திரிகைச் செய்திகளையும், அறிவியல் கட்டுரைகளையும் இவ்வாறு தூய தமிழில் எழுதுவது நடைமுறையில் உள்ளதா! தொல்காப்பியத்தில் காணும் மாத்திரை, அதிகாரம் ஆகியன வடமொழிச் சொற்கள் இவற்றைத் திருத்தி வெளியிடுதல் நியாயமாகுமா?

அறிஞர்கள் முதல் கொஞ்சம் படித்தவர்கள் வரை பலரும் எழுத்து மொழியினைப் பயன்படுத்துகிறார்கள். இதில் பிறமொழிச் சொற்கள் என்று தெரியாமலேயே கூட எழுதுவோருமுண்டு. மாற்றுத் தமிழ்ச்சொல் தெரியாது பிறமொழிச் சொற்களை எழுதுவோருண்டு. 'திருக்குறள் வகுப்பு நடத்தவில்லை. எங்களுக்குத் தெரிந்த செய்தியைத் தெரிவிக்கிறோம்' என்ற ஒரே நோக்கோடு கருத்துப்பரிமாற்ற நிலையில் எழுதுவோருண்டு. மொழி படித்தவர்கள் வேண்டுமானால் மொழித்தூய்மையில் கவனம் செலுத்தி எழுதி வெற்றி காண முடியும். ஆனால் இது சாதாரணப் படிப்பறிவு உடையவர்களிடம் சாத்தியமாகுமா?

எழுத்துமுறை, சொற்களஞ்சியம், தொடரமைப்பு, வாக்கியம் என்று மொழியின் எல்லாக் கூறுகளிலும் மொழித்தூய்மை பின்பற்றப்பட வேண்டும். தமிழில் பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. இந்த இரட்டை வழக்கு நிலை தமிழ் மொழியின் எல்லா நிலைகளிலும் காணப்படுகிறது. லகர, ரகரங்கள் பேச்சு வழக்கில் மொழி முதலில் தாராளமாக இடம்பெறுகின்றன. தொடர்களும் வாக்கியங்களும் இலக்கண வரம்பிற்குப் புறனாக அமைகின்றன. இது தூய தமிழுக்கு முற்றிலும் புறம்பானது. பேச்சு வழக்கின் பாதிப்பால் எழுத்து வழக்கில் பல கூறுகள் இலக்கண அமைப்பிற்கு மாறாக அமைகின்றன. இதையும் தூய தமிழ் ஏற்காது.

இந்நிலையில் எல்லாச் சமயங்களைச் சார்ந்தவர்களும் நன்கு படிக்காதவர் களும் சற்றே எழுதப் பேசத் தெரிந்தவர்களும் எல்லாத்தர மக்களும் மொழிப் பயன்பாட்டாளர்களாக இருக்கிறார்கள். மொழி பயன்படும் சூழல்களும் அறிவியல், பத்திரிகை, இலக்கியம், குறிப்பு எழுதுதல், சலவைக் கணக்கு எனப் பல்வேறு எழுத்துச் சூழல்களிலும் விரிவடைந்துள்ளன. இவைபோன்று நெருக்கமாகப் பேசுதல், இயல்பாகப் பேசுதல், முறையாகப் பேசுதல் எனப் பல்வேறு பேச்சுச் சூழல்களிலும் மொழியைப் பயன்படுத்துகிறார்கள். தமிழில் இரட்டை வழக்கு தெளிவாக இருந்து, எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் தனித்தனிச் சிறப்புக் கூறுகளுடன் வழங்கி வருகின்றன. இன்று தமிழ் மொழியை அதன் தூய நிலையில் மேற்கூறிய எல்லா மொழிப் பயன்பாட்டாளர்களும் எல்லா மொழிச் சூழல்களிலும் எழுத்து, பேச்சு எனும் இரு ஊடகங்களிலும் கடைப்பிடிப்பதில்லை.

இவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும் என்பது மொழித் தூய்மையாளர்களின் பேரெல்லையாய் அமைகின்ற இலட்சியம். ஆனால் எழுத்து ஊடகத்தில் குறைந்தபட்சம் மொழித் தூய்மையைப் பிற மொழிச் சொற்களின் கலப்பினைத்

தவிர்க்க வேண்டும் என்பது மொழி ஆர்வலர்களின் எண்ணம். ஆனால் கருத்துப் பரிமாற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துத் தூய்மை மாசு எனும் கோட்பாடின்றி மொழியைப் பயன்படுத்துகின்ற பெரும்பான்மைத் தமிழர்களையே இன்று நடைமுறையில் பார்க்க முடிகிறது. பலருக்கு மொழித் தூய்மை என்பது இலட்சியக் கனவாக இருந்து வருகிறது.

மொழித்தூய்மை பெரும்பாலும் எழுத்து வழக்கிலும் முறையான பேச்சுச் சூழலிலும் எதிர்பார்க்கப்படுகிறது. அதுவும் இலக்கியம் சார்ந்த எழுத்துப் படைப்புகளும், பேச்சு வடிவங்களும் மொழித்தூய்மையைப் பேணிப் போற்ற முயலுகின்றன. அதிலும் சொல் அளவில் மொழித்தூய்மை பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. தெளிவாகத் தெரிந்த பிறமொழிச் சொற்களை அப்படியே பயன்படுத்துதல் எதிர்க்கப்படுகிறது. இது நியாயமான செயலே. ஆனால் மேசை, தாராளம், சனிக்கிழமை போன்ற சொற்களைப் பயன்படுத்துவதில் மிதவாத மொழித்தூய்மை இயக்கத்தினர் தயக்கங்காட்டுவர். மொழித்தூய்மை குறித்துப் பல்வேறு இயக்கங்களுக்கிடையேயும் கருத்து மாறுபாடுகள் உள்ளன. பேசும் போதும் எழுதும் போதும் எல்லாச் சூழல்களிலும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் பிற மொழிக் கலப்பின்றிப் பேச வேண்டுமென எதிர்பார்ப்பது தீவிரவாத மொழித் தூய்மையாகும்.

தமிழர்களின் மொழிப்பற்றும் ஈடுபாடும் வெறும் இலட்சியம் சார்ந்த வெளிப்பூச்சு என்பதுபோல நமது கள ஆய்வும் கருத்துச் சேகரிப்பும் உணர்த்து கின்றன. பிறமொழித் திரைப்படங்கள், பயிற்று மொழியாகப் பிறமொழியைப் பயன்படுத்துதல், பிறமொழியைப் பொதுவிடங்களில் பெருமையுடன் பேசுதல் ஆகியன நமது தாய்மொழி ஈடுபாட்டைக் குறைத்துக் காட்டும்.

கர்நாடக மாநிலத்துப் பள்ளிகளில் கன்னடம் கட்டாயப் பாடமாக்கப்படும்போது இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தி, தமிழ் உணர்வைத் தூண்டும் இயக்கத்தை வளர்த்து, ஆட்சியை மாற்றித் தமிழ்ப் பற்றை வெளிப்படுத்திய தமிழகத்தில் இன்று தமிழ் கட்டாயப் பாடமாக எல்லாப் பள்ளிகளிலும் கற்றுத் தரப்படவில்லை என்பது மொழித் தூய்மையாளர்களுக்கு மட்டுமின்றி, மொழி ஆர்வலர்கள் அனைவருக்குமே வியப்பாக உள்ளது. இதற்கான தமிழறிஞர்களின் குரல்களும் அங்கீகரிக்கப் படவில்லை. தமிழர்களது மொழிப்பற்றும் ஈடுபாடும் மேம்போக்கானவை அல்லது அதிகாரப் பலமற்றவை எனும்போது மொழித்தூய்மை சிறுபான்மைத் தமிழர்களின் இலட்சியக் கனவாக மட்டுமே என்றும் இருந்து வரும். இதையே வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

மொழி வழக்கில் ஆண் பெண் வேறுபாடுகள்

மொழி மனிதனால் அவனது தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டும் வளர்க்கப் பட்டும் வந்துள்ளது. பயன்படுத்து வோரின் திறமைக்கு ஏற்ப மொழியெனும் கருவி படைப்பாற்றலும், நெகிழ்வுத் தன்மைகளும் கொண்டு விளங்கும். ஒவ்வொரு மொழியும் அம்மொழி பேசும் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளைப் பிரதிபலிக்கத் தவறுவதில்லை. தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுக்காலத்து நீண்ட வரலாற்றுடன் கூடிய இலக்கிய வளம் கொண்ட மொழி. நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமை வாய்ந்த முதல் தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம். தமிழ்மொழியின் கட்டமைப்பை நமக்கு அறிவார்ந்த நிலையில் விளக்கும் இந்நூல் மொழிப் பயன்பாட்டையும் குறிப்பிடுகிறது.

ஈ, தா, கொடு எனக் கிளக்கும் மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய (நூற்பா 927)

என்பது பேசுவோனுக்கும், கேட்போனுக்கும் இடையேயான சமூகத் தகுதிகளின் அடிப்படையில் இம்மூன்றும் சொற்களின் பயன்பாடுகள் அமைய வேண்டும் என்பதை

ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே;
தாவென் கிளவி ஒப்போன் கூற்றே;
கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே (நூற்பா 928-930)

எனும் நூற்பாக்கள் உணர்த்துகின்றன. இலக்கணக் கூறுகளின் அடிப்படையில் சில மொழி வழக்குப் பயன்பாடுகள் அமைவதுண்டு.

தருசொல், வருசொல் ஆயிரு கிளவியும்,
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த (நூற்பா 512)

என்பதும்

யாது, எவன் என்னும் ஆயிரு கிளவியும்
அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும் (நூற்பா 514)

என்பதும் இலக்கணம் சார்ந்த மொழி வழக்குகளாகும். சில மொழி வழக்குகள் சிறியவர், பெரியவர் என வயது வேறுபாட்டின் காரணமாகவும் வேறுபாடு அமையலாம். ஆண் பெண் வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டும் மொழி வழக்குகள் வேறுபடலாம். இத்தகைய பால் வேறுபாட்டின் வழி அமைந்த

மொழி வழக்குப் பயன்பாட்டினையே இக்கட்டுரை தனது ஆய்வுத் தளமாகக் கொண்டுள்ளது.

பண்டைய சமூகத்தில் பெண்கள் 'இல்லிருத்தப்பட்டவர்கள்' என்பதற்கு அக்காலத்திய இலக்கண நூலிலும் சான்றுகள் உண்டு. "முந்நீர் வழக்கம் மகடூஉவோடில்லை" என்பது மகளிரின் பயண வரம்பு குறித்ததாகும்.

அச்சமும் நாணும் மடனு முந்துறுத்த,
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப (1042)

என்று கூறும் இலக்கணம்

பெருமையும் உரனும் ஆடூஉ மேன (1041)

என்கிறது. ஆண் அக்காலத்திய சமூகத்தில் ஆதிக்கம் பெற்றவனாக இருந்ததைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. பெண் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்தவும், வெளியிடாது தடைபடுத்திக் கொள்ளவும் வேண்டியிருந்தது. இதனைத் தொல்காப்பிய நூற்பா பிரதிபலிக்கிறது. சான்று:

தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை (1064)

பெண்ணின் உணர்வுகள் புதிய மட்கலத்தின் புறத்தே நீர் கசிவுறுவது போல வெளிப்பட்டுப் பிறரால் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்பதை

பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப (1064)

என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. அதனால்தான் எத்துணை தோல்வி நேரினும் தலைவி மடலேறுதல் தவிர்க்கப்படுவதை

எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான (981)

எனும் நூற்பா சுட்டுகிறது.

தொல்காப்பியம் பெண்ணுக்கான கட்டுப்பாடுகளை மொழிப் பயன்பாட்டில் விளக்கியுள்ளது போல மொழியில் காணும் சில சொற்களும் தொடர்களும் கூட இப்பால் வேறுபாட்டினை நமக்கு உணர்த்தும். ஆண்பால் சொல்லின்றி 'பரத்தை, விதவை, கைம்பெண், விபச்சாரி ஆகிய சொற்கள் இன்றைய வழக்கில் இருப்பதைக் காண முடிகிறது. அதுபோன்றே இன்றைய பேச்சு வழக்கில் 'போலீஸ், டாக்டர், வாத்தியார்' ஆகிய சொற்கள் பொதுவாக ஆண்களைக் குறிப்பதால் பெண்களுக்குரிய அடைமொழியைச் சேர்த்துப் 'பெண் போலீஸ், பெண் டாக்டர், டாக்டரம்மா, வாத்தியாரம்மா' ஆகிய சொற்கள் பெண்களைக் குறிக்கப்

பயன்படுகின்றன. அதுபோன்றே 'நா்ஸ்' எனும் சொல் பெண்பாலுக்கே உரியதாகக் கருதப்படுவதால் ஆண் எனும் அடைமொழியுடன் 'ஆண் நா்ஸ்' எனும் சொல் புழக்கத்தில் உள்ளது.

தொடரியல் நிலையில் கூட ஆண், பெண் பால் வேறுபாடுகளைக் காணமுடியும். திருமணம் நடந்ததைப் பற்றிப் பேசும் போது ஒரு பெண் "உங்களுக்கு வாழ்க்கைப்பட்டு... அல்லது உங்களுக்குக் குப்பை கொட்டி..." எனும் தொடர்களைப் பயன்படுத்துகின்றாள்.

மொழி உச்சரிப்பில்கூடப் பெண் பேச்சு வழக்கில் வாக்கிய முடிவு சற்று 'இழுத்து இசையோடு பேசப்படுவதுபோல் ஏற்றத் தாழ்வு கொண்ட ஒலி சுரத்துடன் அமைந்துள்ளது. வசவுச் சூழலில் பெண்ணின் கற்புநிலையை இழிவு படுத்தும் சொற்களை அதிகமாக ஆண்கள் பயன்படுத்துவதாகவும், சாபம் வழங்குவது போன்ற வாக்கியங்களைப் பெண்கள் அதிகமாகப் பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

பழமொழிகள்கூட ஆண்களை உயர்வுபடுத்துவதாக அமைந்துள்ளன. "சாண்பிள்ளை ஆனாலும் ஆண்பிள்ளை" என்பதும் "பெண்புத்தி பின்புத்தி" என்பதும் இக்கூற்றை வலியுறுத்தும். உலக மொழிகள் சிலவற்றில் ஆணுக்கான பேச்சு வழக்கும், பெண்ணுக்கான பேச்சு வழக்கும் முற்றிலுமாக மாறுபட்டு, ஒன்றை மற்றொருவர் பயன்படுத்தாத முறையிலும், அப்படி பயன்படுத்தினால் அது நகைப்புக்குரியதாகவும் அமைந்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகளைச் சார்ந்த கரிபியத்தீவு மக்களிடையே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியான பேச்சு வழக்குகள் இருப்பதாகப் பீட்டர் டிரக்கில் (1974) எனும் சமூக, மொழியியல் ஆய்வாளர் குறிப்பிடுகிறார். சூலு மொழியில் மாமனாரின் பெயரையோ கணவனின் தம்பிமார் பெயர்களையோ, மனைவி குறிப்பிடக்கூடாது என்றும் அப்படி குறிப்பிட்டால் அது மரண தண்டனைக்கு உரிய செயலாகவும் கருதப்பட்டது. அமெரிக்க இந்திய மொழிகளில் ஒன்றான 'கோசத்தி' மொழி வழக்கில் ஆண், பெண் பால் வேறுபாடுகள் உள்ளன. திராவிட மொழிகளில் ஒன்றான 'குருக்' (முருசரமா) என்னும் பழங்குடி மொழியில் ஆண் பெண் பேச்சு வழக்கு வேறுபாடுகள் இருப்பதைப் பிரான்சிஸ் எக்கர் என்பவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆண் பெண் பேச்சு வேறுபாடுகள் ஒரு மொழியில் இருப்பதற்கு அந்த மொழி பேசும் சமூகத்தில் காணும் ஆண், பெண் தொடர்பான சமூக மதிப்பீடுகளே அடிப்படையாகும். ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு சில சொற்களை நாம் பயன்படுத்த இயலாது. இதனை இடக்கரடக்கல், மங்கல வழக்கு எனக் குறிப்பிடுவர். இது சூழல் வழி ஒரு மொழியின் பயன்பாடு கட்டுப்படுவதைக் காட்டுகிறது. இக்கட்டுப்பாடோ அல்லது சில வழக்கு வேறுபாடோ ஒன்றின் ஆதிக்கத்தினால் மட்டும் ஏற்பட்டதாகக் கருதமுடியாது.

காலங் காலமாய் ஒரு சமூகமே ஒரு மொழியை உருவாக்கி வளர்த்து வருகிறது. அதன் வளர்ச்சி அச்சமூகத்திலுள்ள அனைவரையும் சார்ந்ததாகும். ஆண் பெண் இருபாலரும் பயன்படுத்தி வந்த மொழி குறிப்பிட்ட ஒரு பாலருக்கு மட்டுமே உரியதாக உள்ளது என்று கூறிவிட முடியாது. ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்த மக்களுக்கு உரியதொரு கருவியான மொழியைச் சிலர் சில சூழல்களில் முழுமையாகப் பயன்படுத்த முடியா விட்டால் அது கருவியின் தவறல்ல. சூழல் கட்டுப்பாடுகளால் விளைந்த நிலை என்று உணர வேண்டும். ஒரு மொழியில் வழக்கு வேறுபாடுகள் நிச்சயம் உண்டு. வட்டார, சாதி, சமூக, ஆண், பெண் வழக்கு வேறுபாடுகள் உண்டு. ஒருவரின் வழக்கு வேறுபாடுகள் அவரின் மொழி வழக்குப் பயன்பாட்டிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. ஒருவரின் பேச்சுமுறை அவர் பேசும் பொருளின் அடிப்படையிலும், சூழல் அடிப்படையிலும் வேறுபடலாம். இதனை ஆண், பெண் வேறுபாடுகளினால் எழுந்த ஆதிக்க உணர்வின் அடிப்படையில் காண்பது சிறப்பாகாது.

எல்லா மொழி பேசும் பெண்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரு பெண் மொழியை உருவாக்க முடியும் எனக் கருதுவதும் அது எல்லாச் சூழல்களிலும், எல்லாக் கருத்துக்களையும் கடலைப் போல் பொங்கி வருமாறு தங்கு தடையின்றிக் கூற இயலும் எனக் கருதுவதும், மொழி பற்றிய அடிப்படைச் சிந்தனை யில்லாததையே சுட்டுகிறது. ஒவ்வொரு மொழியிலும் பெண்களுக்கான மொழி வழக்கு இருக்கலாம். ஆனால் எல்லா மொழி பேசும் பெண்களுக்காக ஒட்டுமொத்தமான ஒரு பெண்மொழி என்பது கற்பனையேயாகும். இது ஒவ்வொரு மொழியிலும் உள்ள பெண் மொழி வழக்கைக் குறிப்பதாகக் கொண்டால் சரியாக அமையும்.

ஒவ்வொரு பேச்சு வழக்கும் இடம், பொருள், ஏவல் கருதி எதை எப்படி எங்கே பேச வேண்டும் என்ற வரன்முறைக்கு உட்பட்டு இடக்கரடக்குகளாய், மங்கல வழக்குகளாய் வெளிப்படுகின்றன. ஒவ்வொருவரின் பேச்சு வழக்கும் முழு மொழித் திறன் உடையவையே. ஒவ்வொருவருக்கும் தத்தமது தாய்மொழியில் மொழித் திறன் குறைவில்லை. பயன்படுத்துவோரும் முழுமையாகப் பயன்படுத்தத் தெரியாதவர்கள் அல்லர். ஆனால் சமூகக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வரம்புடன் நின்று பேச வேண்டும் என்பது பண்பாடு மிகுந்த சமூக இயக்கத்தின் நியாயமான முறையாகும். இதனையே ஒவ்வொரு சமூகமும் தான் மாறுவதுடன் தன்னைச் சார்ந்துள்ளனவற்றை மாற்றிக் கொண்டும் வாழ்ந்தும் வளர்ந்தும் வருவதை வரலாறு நமக்கு உணர்த்துகிறது.

மொழியும் பண்பாடும் : எழுவாய் மயக்கம்

ஒரு சமூகத்தின் பண்பாட்டினை அச்சமூகத்தினரின் தாய்மொழி தவறாமல் பிரதிபலிக்கும் என்பர். சமூக இயக்கத்தில் ஓர் அங்கமாகப் பயன்படும் மொழி அச்சமூகத்தின் சிந்தனையோட்டத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ப வளர்ச்சி பெற்றிருக்கும். சங்க இலக்கியங்களில் வேழம், பிடி, களிறு எனப் பத்துக்கும் மேற்பட்ட சொற்கள் யானையைக் குறிக்கின்றன. யானைக்குரிய பல்வேறு சொற்களைச் சுட்டும் வகையில் "இம்பர்வான் எல்லையில் இராமனையே பாடி என் கொணர்ந்தாய் பாணா" எனத் தொடங்கும் தனிப்பாடல் ஒன்றும் உள்ளது. மன்னர் ஆட்சிக் காலத்தில் யானையின் பயன்பாடு மிகுதியாக இருந்ததை இச் சொல்லாட்சிகளும் தனிப்பாடலும் சுட்டுகின்றன. தற்காலத்தில் யானையைக் குறிக்க யானை என்ற ஒரு சொல் மட்டுமே பெருவழக்கில் உள்ளது.

பண்டைக் காலத்தில் ஆடவர்கள் தமக்குள் நண்பர்களாக இருந்ததால் தோழன் எனும் சொல் ஆண்களுக்குள்ள ஆண் நண்பர்களைக் குறிப்பிட்டது. அதுபோன்றே பெண்களுக்குள்ள பெண் நண்பர்களைத் தோழி என்ற சொல் குறிக்கும். ஆனால் தற்காலத்தில் பால் மாறி நண்பர்களாக விளங்கும் சமூகச் சூழல் இருப்பதால் ஆண்களுக்குள்ள பெண் நண்பர்களைச் சினேகிதி, நண்பி எனும் சொற்களும் பெண்களுக்குள்ள ஆண் நண்பர்களைக் குறிக்கச் சினேகிதன், நண்பன் எனும் சொற்களும் பயன்படுகின்றன. இந்த அயல் பண்பாட்டுப் பழக்கத்தின் விளைவாக, "பிரண்டு" (Friend) எனும் ஆங்கிலச் சொல் இருபாலார்க்கும் பொதுவாகப் பயன்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் friend என்பதற்கும் girl friend boy friend என்பதற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன.

தமிழ்ச் சமூகச் சூழலில் ஏற்பட்ட நட்பு வட்டார விரிவாக்கத்தினால் புதிய புதிய சொற்களும், புதிய புதிய பொருள்களில் அமைந்திருப்பதைக் காணமுடியும். உறவுமுறை அடிப்படையில் 'மாமா, மாப்பிள்ளை, மச்சி' எனும் சொற்களும் அரசியல் வாடையுடன் 'தலைவா' எனும் சொல்லும் ஆண் நண்பர்கள் வட்டாரத்தில் அதிகம் புழங்கப்படுகின்றன. ஆயினும் பெண்களின் நட்பு வட்டாரத்தில் மண உறவுமுறையில் வரும் உறவுமுறைச் சொற்கள் இடம்பெறுவ தில்லை. பெரியவர்களுக்கும், வயது மூத்தோர்களுக்கும் மரியாதை தந்து பழகுவதால் தமிழ்ச் சமூகப் பண்பாட்டில் விளிசொற்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. முன்னிலை மற்றும் படர்க்கைச் சுட்டுப்பெயர்கள் மரியாதை அடிப்படையில் வகைப்படுத்தப்படுவதைக் காணலாம். இளையவர்களை 'நீ' எனவும், மூத்தவர்களை 'நீங்கள்' எனவும் படர்க்கையில் அவன், அவள், என்பன இளையோர்க்குரியதாகவும் அவர்(அவுங்க) என்பது மூத்தவர்க்குரியதாகவும் மரியாதை அடிப்படையில் அமைந்த சுட்டுச் சொற்கள் எனவும் கருதலாம்.

தகுதி கருதியும், வழக்கு கருதியும் சில சொற்களை நேரடியாகச் சொல்லாமல் அடைச் சொற்களால் குறிப்பதும் உண்டு. தலைவர்களையும், பெரியவர்களையும் அவர்களது ஊர்ப் பெயராலும், சிறப்புப் பெயராலும் குறிப்பது மரியாதை நிமித்தமான பண்பாடாகும். சான்றாக, செம்மங்குடி, சீர்காழி, காரைக்குறிச்சி என்பனவற்றை இங்கே குறிப்பிடலாம். கணவன் பெயரைச் சொன்னால் ஆயுள் குறைந்துவிடும் என்று காரணம் கூறி, மரியாதை நிமித்தமாகக் கணவன் பெயரைக் கூறாத பண்பாட்டினைத் தமிழர்களிடையே நாம் காணலாம்.

கணவன் மனைவியை 'நீ' என அழைப்பதும், மனைவி கணவனை 'நீங்கள்' என விளம்புவதும் மரியாதை நிமித்தமான மரபாகும். பொதுவிடத்தில் சில சொற்களைத் தவிர்த்து அவற்றிற்கு மாற்றாக உள்ள சொற்களைக் கூற வேண்டும் எனும் மரபினை 'அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்' எனும் தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுகிறது. 'செத்தாரைத் துஞ்சினார்' என்பதும், 'சுடுகாட்டை நன்காடு" என்பதும் மங்கல வழக்காகக் கருதப்படுகின்றன. சில சொற்களை விலக்கப்பட்ட சொற்களாகக் கருதி எப்போதும் கூறக்கூடாது எனும் பண்பாட்டின் அடிப்படையில் 'இடக்கரடக்கல்' எனும் வகைப்பாட்டினை உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

அமங்கலமாகக் கருதிவிடக் கூடாது என்ற நிலையில் சில நிகழ்வுகளை மங்கலமாய்க் கூற விரும்பி 'விளக்கை அணை' என்பதற்குப் பதிலாக 'விளக்கைக் குளிரவை' எனக் கூறுவதும் 'போகிறேன்' என்பதற்குப் பதிலாகப் "போய்விட்டு வருகிறேன்' என்பதும் பண்பாட்டின்வழி அமைந்தனவாகும்.

இறப்புச் செய்தியில்கூட அவரவருடைய இறை நம்பிக்கைக்கும், சமயச் சார்புக்கும் ஏற்ப இயற்கை எய்தினார், இறைவனடி சேர்ந்தார், சிவலோக பதவி அடைந்தார், வைகுண்டப் பதவி அடைந்தார், இயேசு பாதம் சேர்ந்தார், மவுத் ஆனார்' போன்ற தொடர்களில் இடம்பெறுகின்றன.

கிறித்துவ மதத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர்கள் "He passed away, He expired" எனும் தொடர்களால் குறிப்பதை இந்து சமயத் தாக்குதலால் தமிழ்க் கிறித்துவர்கள் 'இறைவனடி சேர்ந்தார்' என்பதையொட்டி 'இயேசு பாதம் சேர்ந்தார்" எனக் குறிப்பிடுவதாகக் கருதலாம். இல்வாழ்வில் ஈடுபட்ட பெண்ணொருத்தி 'கஷ்ட ஜீவன காலத்தினைக் குறிப்பிட "நான் ஏதோ குப்பை கொட்டிக் கொண்டிருக்கிறேன்" எனக் கூறுவதுண்டு. ஆங்கிலத்தில் "I am washing his dirty linen" என்று கூறுவது வழக்கம். குடும்பம் நடத்துவது என்பது குறைந்தபட்ச நிலையில் குப்பை கொட்டுவது அதாவது வீட்டைப் பராமரித்து வருதல் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் குறிக்கப் படுகிறது. இதன் காரணமாகத்தான் இந்த வீட்டுக்கு மருமகளாக வரப் போகின்றவளை 'விளக்கு ஏத்த வாம்மா' என்று அழைப்பது உயர்ந்தபட்ச நிலையில் 'குடும்பத்தைச் சிறப்பிக்க வந்த' எனும் பொருளில் அமைகிறது என இதன்வழிக் கருதலாம்.

ஆண்மகன் ஒருவனே பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான் என்பதாலும் பெண் திருமணம் செய்விக்கப்படுகிறாள் என்பதாலும் திருமணம் செய்தபின் கணவன் வீட்டிற்குப் பெண்ணை அழைத்து வருதலே நமது மரபு என்பதால் (உன்னைக்) கட்டிக்கிட்டு வந்தேன் எனும் வாக்கியம் ஆண்களுக்கு உரியதாகவும் '(உங்களுக்கு) வாழ்க்கைப்பட்டேன்' என்பது பெண்களுக்கு உரியதாகவும் தமிழர் பண்பாட்டு அடிப்படையில் அமைந்ததாகக் கருதலாம்.

தன் ஐயத்தை இவன் 'தெளிவிப்பான்' எனும் அடிப்படை நம்பிக்கையோடு வினா வாக்கியத்தை ஒருவர் கொடுக்க விடை அறிந்தவனாக ஐயம் தெளிவிப்பானாக எதிரில் இருப்போன் அமைய வேண்டிய சூழலில் தனக்குத் தெரியாது என விடை அமைந்தால், வினாத் தொடுத்தவனின் அடிப்படை நம்பிக்கை தளர்ந்து போய்விடும். அதனால் எதிர்மறையான பதிலை நேரடியாகக் கூறாமல் மறை முகமாகக் கூறுவது நல்ல பண்பாகக் கருதப்படுகிறது. இதன் அடிப்படையில்தான்

எப்பொரு ளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்

எனும் தொல்காப்பிய நூற்பா அமைந்துள்ளது.

ஒருவர் ஒரு பொருளைத் தன்னிடத்தில் கேட்டபின் அது தன்பால் இல்லையாயின் அவர் கேட்டதற்கு இனமான பொருளைக் கூறி இதுவல்லது இல்லையென்க எனும் சேனாவரையரின் உரை தமிழர்களின் பண்பாட்டு அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் விரிவாகத்தான் "பயிறுளதோ வணிகரே என்றவிடத்து உளுந்தல்லது இல்" எனும் விளக்கம் தரப்பட்டுள்ளது. தமிழில் உணர்வு தொடர்பான வினைச்சொற்களுக்குரிய எழுவாய் பெரும்பாலும் மயக்க நிலையில் அமைந்துள்ளது. "I am Happy" எனும் ஆங்கில வாக்கியத்திற்குத் தமிழில் 'நான் மகிழ்கிறேன்' என்பது சரியான மொழிபெயர்ப்பாகும். இவ்வாக்கியத்தில் நான் என்பது எழுவாய். மகிழ்கிற வினையைச் செய்கிறது நான். ஆனால் 'எனக்கு மகிழ்ச்சி' என்பது நான்காம் வேற்றுமை உருபு கொண்ட தன்மைப் பெயர்ச் சொல் ஆகும். மொழியியலாளர்கள் இதனை நான்காம் வேற்றுமை உருபு கொண்ட எழுவாய் (Dative Subject) எனக் கருதுவர்.

உடல்நிலை குறித்த வினைச்சொற்களை அடிப்படையாகக் கொண்ட பெரும்பாலான வாக்கியங்களிலும் எழுவாய் நான்காம் வேற்றுமை உருபு கொண்டதாக் கருதலாம்.

எனக்குத் தலைவலி.
எனக்குக் தலை(யை) வலிக்கிறது.

எனக்குக் காய்ச்சல்.
எனக்குக் காய்ச்சல் (ஆக இருக்கிறது).

இதன் எதிர்மறை வாக்கியம் கீழ்க்கண்டவாறு அமையும்.

எனக்குத் தலைவலி இல்லை.
எனக்குத் தலை(யை) வலிக்கவில்லை.

தமிழில் உள்ள சில உணர்வு தொடர்பான வாக்கியங்களும் அவற்றிற்குரிய ஆங்கில வாக்கியங்களும் கீழ்க்கண்டவாறு அமைகின்றன.

எனக்குப் பிடிக்கும் (to me it is desired)
I like (this)

எனக்குத் தெரியும் (To me it is known)
I know (this)

எனக்கு வேண்டும் (to me it is needed)
I need (this)

இவ்வாக்கியங்களில், I need (this) தமிழில் நான்காம் வேற்றுமை உருபுகொண்ட எழுவாயான 'எனக்கு' எனும் சொல்லிற்கு ஆங்கில மொழியில் 'நான்' (I) என்பது நேரடியாக எழுவாய் நிலையில் இடம்பெற்றுள்ளது. இது போன்றே 'I am late' எனும் ஆங்கில வாக்கியத்திற்கு 'நான் தாமதம் (ஆகிறேன்)' என்பது மொழிபெயர்ப்பாக அமைந்தாலும், தாமதம் ஆகியது, தாமதம் ஆகிவிட்டது, என்பன பொருத்தமான தமிழ் வாக்கியங்களாகக் கருதப்படுகின்றன. தொடரமைப்பு நிலையில் 'தாமதம்' எழுவாயாக இடம்பெறுகின்றது. பொருண்மை நிலையில் நான் என்பது எழுவாயாகக் கரந்து நிற்கிறது.

இதுபோன்றே தான் செய்த ஒரு செயலினை வேறொன்றின் மீது ஏற்றி அது செய்ததாகக் குறிப்பிடுவது சிற்சில வாக்கியங்களில் காணப்படுகின்றது. சான்றாக,

தரை வழுக்கியது (The floor slipped)
(I slipped on the floor)

முள் குத்திவிட்டது (The thorn pricked)
I stepped on the thorn

மேற்கூறிய இரு வாக்கியங்களிலும் எழுவாயின் 'பிழை' வேறொன்றின்மீது ஏற்றப்பட்டு அது வினை நிகழ்த்தியதாக இங்கே குறிப்பிடப்படுகிறது.

'நான் ஜெயித்தேன், நான் வென்றேன்' எனும் வாக்கியங்கள் இயல்பாக அமைவதுபோல் 'நான் தோற்றேன்' என்பது அமைவதில்லை. 'நான் தோற்று விட்டேன், தோல்வி அடைந்துவிட்டேன்' என்பன துணை வினை கொண்ட வாக்கியங்களாக வழங்கப்படுகின்றன. 'நான் வேலையை முடிக்கவில்லை' என்பதற்குப் பதிலாக 'வேலை முடியவில்லை' என்பதே பொது வழக்காகும். 'நான் தவறினேன்' என்பதைவிடத் 'தவறிவிட்டது' என்பது இயல்பாக உள்ளது.

வேலை முடியவில்லை எனும் வாக்கியத்தில் 'வேலை' எழுவாயாக இத்தொடரமைப்பில் இடம்பெற்றாலும் பொருண்மை நிலையில் கர்த்தாவாகிய 'நான்' கரந்த நிலையில் இருப்பதை அறியலாம். பேசுவோன் உணர்வுகளில் தான் இயங்குவதாக நிகழ்தளத்தில் (Active state) கூறாது உணர்வு தன்னிடம் கிடைக்கைத் தளத்தில் (Passive state) இருப்பதாக வெளிப்படுத்துகின்றான். உணர்வுத்தளத்தில் தன்னை நேரடியாக வெளிப்படுத்திக் கொள்ளாத நிலையினைத் தமிழ் மொழியில் காணலாம். நம் மரபில் தன் உணர்வுகளை அடக்கி ஆளுதல் சான்றோனின் பண்பாகக் கருதப்படுகிறது.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து"

எனும் குறள் ஐம்பொறிகளையும் அடக்கி ஆளுவதின் சிறப்பினை உணர்த்துகிறது. இதனால் உணர்வு தொடர்பான வினைச்சொற்களைக் கொண்ட வாக்கியங்களில் கர்த்தா எழுவாயாக வராது கரந்து நிற்க, தொடரமைப்பு நிலையில் உணர்வு வினை நிகழ்த்தியதாக வாக்கியம் அமைய உணர்வு எழுவாயாக இடம்பெறுகிறது.

நான் என்பது உடலும் உயிரும் கலந்திருக்கின்ற பேசுவோனைக் குறிப்பதாகும். 'நான் படிக்கிறேன்' எனும்போது 'பேசுவோன் படிக்கிறான்' எனும் பொருள் வெளிப்படுகிறது. ஆனால் எனக்கு உடம்பு சரியில்லை, எனக்கு உடம்பு வலிக்கிறது எனும்போது உடம்பு எழுவாயாகவும் 'என்' எனும்சொல் நான்காம் வேற்றுமை உருபு ஏற்றும் வருகின்றன. 'என்' என்பது 'நான்' எனும் தன்மைப் பெயர்ச்சொல் வேற்றுமை உருபு ஏற்கும்போது அடைகிற திரிபு வடிவமாகும். அவ்வாறாயின் 'நான்' என்பதின் திரிபாகிய 'என்' என்பதும் 'உடம்பு' என்பதும் ஒருசேர இவ்வாக்கியத்தில் இடம்பெற்றிருப்பதால் என்னிலிருந்து உடம்பு வேறுபட்டதாகக் கருதவேண்டும். இதனடிப்படையில் நான் என்பது உயிரை மட்டும் குறிக்கிறதாகக் கருதுவது தத்துவார்த்த நிலையினைச் சாரும்.

நான் என்பதை ஆன்மாவுடன் தொடர்புபடுத்தி, அதன் காரணமாக நான் என்பது சிற்சில வாக்கியங்களில், எழுவாய் நிலையிலிருந்து புறம் தள்ளப்படுவதாகக் கருதலாம். உணர்வு தொடர்பான வினைச்சொற்கள், உடல் நலம் குறித்த வினைச்சொற்கள், முரண் கருத்துக் கொண்ட வினைச்சொற்கள் ஆகியன வாக்கிய அமைப்பில் இடம்பெறும்போது ஆன்மாவைத் தொடர்புபடுத்தாது உடலை மட்டுமே முன்னிலைப்படுத்துவதாகக் கருதினால் 'நான்' என்பதற்குப் பதிலாக 'எனக்கு' என்பது வெளிப்படையாகத் தொடரமைப்பில் இடம்பெறுகிறது எனலாம். இதற்குத் தமிழ்ச் சமூகத்தின் தத்துவார்த்த கருத்தாக்கங்களும் அகந்தை ஒழிந்த அடக்க மனநிலையும் காரணங்களாகும்.

தொல்காப்பியம் : ஒரு வரன்முறை இலக்கணம்

ஒரு சமூகத்தின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமைவது மொழி. இம்மொழியே அச்சமூகத்தின் வளர்ச்சிக்கும், சிந்தனைக்கும் அடிப்படையாக அமைகிறது. கருத்துப் பரிமாற்றக் கருவியாகப் பயன்படும் மொழி, பேச்சு நிலையில் தோன்றி, தொடர்ந்து பயன்பட்டுவந்து வளர்ந்து எழுத்தாக்கம் பெற்று, பின்னர் இலக்கிய வளத்தோடு பரிணாம வளர்ச்சி கண்டு காலங்காலமாய்ச் சமூகத்தோடு இயைந்தும் இணைந்தும் செயல்பட்டுப் பின்னர் அச்சமூகத்தில் ஒரு குறியீடாக (Symbol) மாறிவிடுகிறது.

மொழி கருத்துப் பரிமாற்றக் கருவி என்ற நிலையிலிருந்து உணர்வு நிலையில் அச்சமூகத்தை அடையாளம் காட்டும் கருவியாக (குறியீடாக) மாறுகிறது. அந்த உணர்வுத் தளத்தின் உயர் நிலையில் கவிதை வடிவில் நிகழும் போற்று உத்தியின் வெளிப்பாடாக, "தமிழைப் பழித்தோரை என் தாய் தடுத்தாலும் விடேன்" எனும் கவிதை உணர்வு வடிவம் பெறுகிறது.

ஒரு மொழியினைப் பொதுவாக அச்சமூகத்தினர் எல்லோரும் பயன்படுத்து கின்றனர். அது அவர்களுக்குத் தாய்மொழியாக விளங்குகிறது. இத் தாய்மொழி சமூகத்தின் எல்லாத் தரப்பு மக்களாலும் பேசப்படுகிறது. அதுபோலவே அச் சமூகத்தினர் வாழும் எல்லா நிலப்பரப்பிலும் அவர்தம் மொழி பேசப்படுகிறது. சமூகம் பல்வேறு சாதி சமய மக்களால் ஆனது. இவ்வாறு பல்வேறு சமூகக் கூறுகளால் வேறுபட்டு வாழும் மக்களின் மொழியும் பல்வேறு வழக்குகளாய்ச் சற்று மாறுபட்டு விளங்குகின்றது.

பிராமணர்களின் மொழி வழக்கு அரிசன மக்களின் பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டிருப்பதை நாம் உணரலாம். அது போன்றே படித்த நகர்ப்புற மக்களின் பேச்சு வழக்கிலிருந்து படிக்காத கிராமப்புற மக்களின் பேச்சு வழக்கு வித்தியாசமாக இருக்கிறது. இவ்வாறு ஒரே பகுதியைச் சார்ந்த மக்கள் தத்தம் சமய சாதி சமூக நிலைகளுக்கு ஏற்பப் பேச்சு வழக்குகளில் வேறுபட்டு நிற்பதைக் கிளைமொழி வழக்குகளாகக் குறிப்பிடுவர்.

ஒரு சமூகத்திலுள்ள கல்வி, சாதி, சமயம், ஆகிய கூறுகளால் தாழ்ந்தவனிலிருந்து உயர்ந்தவன் வரை எல்லாத்தரப்பட்ட மக்களும் தமக்கிடையே சிறு சிறு வேறுபாட்டுடன் தாய்மொழி வழக்குகளில் பேசிக் கொள்வதெல்லாம் அவர்தம் தாய்மொழியினையே சாரும். 'வழக்கு எனப்படுவது உயர்ந்தோன் மேற்றே' என்று சொல்வது சமூகத்தின் ஒரு சாராரின் கிளைமொழி வழக்காகவே அமையும்.

ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சமூகத்தினர் பல்வேறு இடங்களில் பரந்துபட்டு வாழ்வார்கள். அவ்வாறு பல்வேறு இடங்களில் வாழ்கின்ற மக்களின் பேச்சு வழக்கும் காலப்போக்கில் வேறு பகுதி மக்களின் பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டிருக்கும். இவ்வாறு மாறுபடும் பேச்சு வழக்குகளின் மாறுபாட்டு அளவு இரு பகுதிகளுக்கும் இடையேயுள்ள தூரத்திற்கேற்ப விலகியும் நெருங்கியும் காணப்படும். அதாவது புதுச்சேரியின் பேச்சு வழக்கிற்கும், சென்னையின் பேச்சு வழக்கிற்கும் வேறுபாடு சிறிதாக இருக்கலாம். ஆனால் சென்னையிலிருந்து வெகுதூரத்திலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்தோடு ஒப்பிடும்போது அவர்களுடைய பேச்சு வழக்கு நம்மிலிருந்து அதிகம் மாறுபட்டிருப்பதை உணர முடியும்.

புதுச்சேரி மக்களிடையே சமூக நிலையில் சாதி சமய வேறுபாடு களுடன் மொழி வழக்குகள் மாறுபட்டாலும் புதுச்சேரிக்கென ஒரு பொதுப் பேச்சு வழக்கினை இதிலிருந்து பெற முடியும். இந்தப் பொதுப் பேச்சு வழக்கு கன்னியாகுமரி பொதுப் பேச்சு வழக்கிலிருந்து மாறுபட்டிருக்கும். இவை வட்டாரக் கிளைமொழிகளின் வகைப்படும். அதே சமயம் புதுச்சேரி பிராமணர்களின் பேச்சு வழக்கோடு கன்னியாகுமரி பிராமணர்களின் பேச்சு வழக்கினை ஒப்பிடும்போது பிராமண வழக்கில் பொதுமை கொண்டிருந்தாலும் வட்டார வழக்குகளால் அவை வேறுபடும். இதனைச் சமூக மொழியியல் ஆய்வுகள் விளக்கியுள்ளன.

தொல்காப்பியம் தமிழுக்கான ஒரு இலக்கண நூல். 2000 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. தமிழ் மொழியில் கிடைத்துள்ள முதல் நூலும் இதுவேயாகும். தொல்காப்பியம் ஒரு இலக்கண நூல் என்பது தமிழ்மொழி வரலாற்றில் மிக முக்கியமான பதிவாகக் கருத வேண்டும். காரணம் மொழி பற்றிய விழிப்புணர்வின் அடையாளமாகவே இலக்கண உருவாக்கத்தை அறிஞர்கள் கருதுவர். ஒரு மொழியில் காலப் போக்கில் ஏற்படும் மாற்றங்களால் அதன் கட்டமைப்பில் அக நிலைச் சிதைவு ஏற்படலாம். அதுபோன்றே பிறமொழியின் தாக்குதலால் ஒரு மொழியில் ஏற்படும் சிதைவுகள் புறநிலைச் சிதைவுகள் ஆகும். இந்த அகப் புறச் சிதைவுகள் ஒரு மொழியின் வரலாற்றுப் பாதையில் தவிர்க்க இயலாததாகும்.

காலப்போக்கில் இந்த அகப்புறச் சிதைவுகள் மொழியின் வரிவடிவ நிலைகளையும் தொடர் நிலைகளையும் பொருண்மை நிலைகளையும் மேலோட்டமாகப் பாதிக்கும்போது, இப்பாதிப்புகள் சிற்சில சமயங்களில் மொழியின் வளர்ச்சிக்குக் கூடப் பயன்படலாம். தற்போது 'லை', 'னை' போன்ற வரிவடிவ மாற்றங்கள் இன்றைய கணிப்பொறியுகத்தில் தட்டச்சு செய்வதற்குப் பெருந் துணையாகக் கருதப்படுகின்றன. அதே சமயம் ஆங்கிலச் சொற்கள் அப்படியே தமிழில் எழுதப்படும்போது அவை மொழிச்சிதைவாகக் கருதப்படும்.

தொல்காப்பிய இலக்கண நூல் தமிழ்மொழியின் கட்டமைப்பையும், பொருள் அமைதியையும் வரையறை செய்திட வேண்டி உருவாக்கப்பட்ட ஒரு நூலாகும். இப்படித்தான் தமிழ்மொழியின் கூறுகள் உள்ளன என்று வரையறை (Prescriptive) செய்தாலும் சில இடங்களில் இப்படியும் வழங்கப் படுகிறது என்று விவரிக்கும் போக்கினை (Descriptive) தொல்காப்பியத்தில் காண முடியும்.

ஒரு மொழி நெகிழ்வுத் தன்மை கொண்டிருக்க வேண்டும் (Language is flexible). இந்த நெகிழ்வு மொழியின் அடிப்படைக் கூறுகளைச் சிதைக்காமல் நிகழும்போது மொழி வளர்ச்சியாக அமையும்.

'அகரம் இகரம் ஐகாரமாகும்' (54)

'அகர உகரம் ஔகார மாகும்' (55)

'இகர எகரம் இறுதி விரவும்' (58)

என்பன, வரிவடிவ வேறுபாடுகளை ஏற்றுக்கொள்கின்ற மரபினைச் சுட்டுகின்றன. புணர்ச்சி விதிகளைப் பேசும்போது தொல்காப்பியர் பல்வேறு வேறுபாடுகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. இந்த வேறுபாடுகள் மொழியின் உறழ்ச்சிக் கூறுகளாக (Variable features) கருதப்படும். இது சமூக மொழியியல் நிலையில் கிளைமொழி வழக்குகளாலும், வட்டாரச் சமூக வழக்குகளாலும் விளைவதாகக் கருதப்படும்.

'போய்க் கொண்டு இருக்கிறேன்' எனும் இலக்கிய வழக்கில் உள்ள 'கொண்டு' எனும் சொல் பிராமணப் பேச்சு வழக்கில் 'ண்டு' எனத் திரிவதால் போயிண்டுருக்கேன்' எனவும், இதே 'கொண்டு' எனும் சொல் சென்னை வட்டார வழக்கில் 'கினு' எனத் திரிவதால் 'போய்க்கினு இருக்கேன்' எனவும் வழங்கப்படுவதை உறழ்ச்சி நிலைக்குச் சான்றாகவும், இந்த உறழ்ச்சி நிலைகள் வட்டார வழக்குகளால் ஏற்படுவதாகவும் கருதலாம்.

அதனடிப்படையில் புணர்ச்சி விதிகளில் 'தேன்' எனும் சொல்லும் 'குடம்' எனும் சொல்லும் புணரும்போது 'தேன்குடம், தேற்குடம், தேங்குடம், தேக்குடம்' என வேறுபாடுகளுடன் உறழ்ச்சி நிலையில் விளங்குவதைத் தொல்காப்பிய நூற்பா (341) குறிப்பிடுகிறது. அது போன்றே (இல்கல்) எனும் சொல் 'இல்கல், இல்லைக்கல், இல்லாக்கல்' எனும் உறழ்ச்சியுடன் பெறப்படும். இத்தகைய வேறுபாடுகள் சமூக மொழியியல் கூறுகளைச் சுட்டுவதாகக் கருதலாம்.

மொழி எனப்படுவது 'உயர்ந்தோன் மேற்றே' எனத் தொல்காப்பியர் கூறுவதன் மூலம் உயர் வழக்கு ஒரு மொழியின் வழக்காகக் கருத வேண்டும் எனும் கருத்தினை முன்வைத்திருந்தாலும், ஒரு மொழிக்கான தரவுகளாக 'வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி' என்று பனம்பாரனார் பாயிரம் சொல்வதால் தொல்காப்பியர் தன் மொழி ஆய்வுக்கான தரவுகளாக அக்காலத்தில் நிலவிய பேச்சு வழக்கையும், எழுத்து வழக்கையும் அடிப்படையாகக் கொண்டார் எனலாம்.

செய்யுள் வழக்கு என்பது செய்யப்படும் இலக்கிய வழக்கு. வழக்கு என்பதே பேச்சு வழக்கு. அதுவும் உயர்ந்தோர் வழக்கே வழக்கு எனப்படும். அதனால் தொல்காப்பிய மொழி ஆய்வு கற்றறிந்த மக்களின் பேச்சு எழுத்து வழக்குகளை அடிப்படையாகக் கொண்டது. அந்தக் கற்றறிந்த மக்களின் பேச்சு வழக்குகளிலும் கூட வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்து அவற்றை உறழ்ச்சி விதிகளாய்த் தொல்காப்பியர் குறிப்பிட்டுச் சென்றுள்ளார்.

ஈ, தா, கொடு என்பது மூன்றும் ஒரே பொருளை உடையன. ஆயினும்

'ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே',
'தாவென் கிளவி ஒப்போன் கூற்றே'
'கொடுவென் கிளவி உயர்ந்தோன் கூற்றே'

என்பன பேசுவோனுக்கும் கேட்போனுக்கும் இடையேயுள்ள சமூக அந்தஸ்துகளால் சொற்பயன்பாடு வேறுபடுவதை உணர்த்துகின்றன. அதுபோன்றே ஒரு பொருளுக்குரிய சொல்லைக் கூறாமல் அச்சொல்லிற்குச் சார்பான பிறிதொரு சொல்லைக் கூறி அதன் மூலம் விளங்க வைப்பதைத் தகுதி என்றும், அதற்கான சொல்லைத் தகுதிச்சொல் என்றும் கூறுவர்.

சுடுகாடு என்பதற்குப் பதிலாக 'நன்காடு' என்பது பொருத்தமான சொல்லாகும். அதனால் அது தகுதி வழக்கு. இடக்கரடக்கலும், இடங்கருதிச் சில சொற்களைக் கூறாமல் விடுதல் என்பது மொழி வழக்குச் சார்ந்ததாகும். பொன்னைப் 'பறி' என்பார் பொற்கொல்லர் என்பது குழூஉக் குறியாக உரையாசிரியர் குறிப்பிடுவர். புதுச்சேரியைப் 'புதுவை' என்பது மரூஉ ஆகும். இவ்வாறு தகுதி கருதிச் சிலவற்றைத் தவிர்ப்பதும் சிலவற்றை வழங்குவதும் மொழிப் பயன்பாட்டுப் பண்புக் கூறுகளாகும். காலப்போக்கில் சில சொற்கள் மருவிப் பயன்படும் வழக்கும் உண்டு. இந்த வேறுபாடுகள் எல்லாம் சமூக மொழியியல் நிலையில் பயன்பாட்டுக் கூறுகளாகக் கருதப்படும்.

வினையில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா.........................

மரபு கொண்டவையாக வலியுறுத்தும் தொல்காப்பியர், விரைவு கருதி இறந்த காலத்தை நிகழ்காலத்தில் கூறலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்
மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன'

என்று தொல்காப்பியர் கூறியிருந்தாலும் திணை கலந்து எண்ணப்பட்ட பெயர் செய்யுளில் பெரும்பாலும் அஃறிணைச் சொல்லைக் கொண்டே முடியும் என்று கூறியுள்ளார்.

'தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீரிடத்த'

எனும் நூற்பா இலக்கணக் கட்டுப்பாடு கொண்ட மொழி வழக்கினைக் கூறும். ஆனால், விரைவு கருதி இறந்த காலத்தை நிகழ்காலத்தில் குறிப்பிடலாம் எனும் பயன்பாட்டினைத் – தொல்காப்பியர்

'வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்குங் காலை'

எனக் கூறியுள்ளார்.

வினாவும், விடையும் அதன் பயன்பாடு வழுவாமல் போற்றப்பட்டு வந்தாலும் சில சமயம் பேச்சுச் சூழலில் வினாவே விடையாக அமைவதும் உண்டு. 'பஸ் இந்தப் பக்கம் போகுமா?' என்ற வினாவே விடையாகும். அதுபோன்றே 'துவரம் பருப்பு இருக்கிறதா?' என்று வினவும்போது 'கடலைப் பருப்பு இருக்கு' என்று கூறுவதும் 'இந்தப் பருப்பு தவிர வேறு பருப்பு இல்லை' என்று சுட்டிக் கூறுவதும் வழுவில்லை என்று மொழிப் பயன்பாட்டினைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

மொழியின் வரிவடிவ நிலையிலும் 'ஐ' என ஓரெழுத்தாகவும் எழுதலாம். 'ஆய்' எனவும் எழுதலாம் என்பதும் கூட வழக்கு வேறுபாடுகளாகும். இவ்வாறு வரிவடிவ நிலை மற்றும் புணர்ச்சி விதிகளுக்கிடையே சிற்சில வேறுபாடுகள் ஆகியன மொழியில் நிலவும் வேறுபாடுகளைச் சமூகக் கூறுகளால் ஏற்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வேறுபாடுகளை இலக்கண நூல் ஏற்றுக் கொண்டதற்குச் சான்றுகளாகும்.

தொல்காப்பியரின் புணர்ச்சி விதிகளில் கட்டாய விதிகள் பல உண்டு. நிலைமொழியில் இன்ன எழுத்தும் வருமொழியில் இன்ன எழுத்தும் வந்தால் நிச்சயம் இந்தத் திரிபு ஏற்படும் என்று கூறுவது கட்டாய விதி (Obligatory rule) என்பதாகும்.

லன என வரூஉம் புள்ளி முன்னர்த்
தந எனவரின் றன ஆகும்மே (தொல். 149)

அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும் (தொல். 129)

என்பன கட்டாய விதிகளாகும். இவை போன்று பல சான்றுகளை நாம் தொல்காப்பியத்தில் காணலாம்.

ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மானமில்லை.... (தொல். 199)

எனும் நூற்பாவில் 'ஆன்' எனும் சாரியை வராமலும் இருக்கலாம்; வந்தாலும் தப்பில்லை என்கிறார். அதாவது 'ஆன்' சாரியை இடம்பெறுவது மொழியைப் பயன்படுத்துவோரின் விருப்பமாகும். இத்தகைய விருப்ப விதிகளையும் தொல்காப்பியத்தில் காணமுடியும்.

இதுவன்றிச் சில புணர்ச்சிச் சூழலில் இருநிலைகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே (தொல். 193)

எனும் நூற்பாவும்,

தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகர வொற்றாகலும் உரித்தே (தொல். 214)

வல்லெழுத்து இயற்கை உறழத் தோன்றும் (தொல். 215)

எனும் நூற்பாவும்,

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே (தொல். 245)

வல்லெழுத்து மிகினும் மான மில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான (தொல். 246)

எனும் நூற்பாக்களும் 'இப்படியும் சொல்லலாம் அப்படியும் சொல்லலாம்' எனும் உறழ்ச்சி நிலையினைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு கூறப்படும் உறழ்ச்சி நிலைகளிலும் இப்படி கூறுவதுதான் பெருவழக்கு என்றும் அப்படி கூறினாலும் தவறில்லை என்று சிறுவழக்காக உள்ள நிலையையும் சுட்டிக் காட்டுகிற போக்கினைக் காண முடிகிறது.

தொல்காப்பியர் காலத்தில் இலக்கண உருவாக்கம் ஏற்படும்போதும், மொழியில் அங்கீகரிக்கப்பட்ட வேறுபாடுகளை வட்டார மற்றும் சில சமூகக் கூறுகளால் மொழி வழக்கில் ஏற்பட்ட மாற்றங்களை ஏற்றுக் கொண்டு சமூக மொழியியலார் இன்று கூறுகின்ற வழக்கு வேறுபாடுகளைத் தொல்காப்பியர் அன்றே மனதிற்கொண்டு மொழிக் கட்டமைப்பைக் கட்டிக் காத்திட வரன்முறை இலக்கணமாகத் தொல்காப்பியத்தைப் படைத்துள்ளார் என்பதை நாம் அறியலாம்.

மொழியியல் நோக்கில்
தொல்காப்பியப் புணர்ச்சி விதிகள்

மொழி செயல்படுவதில் உள்ள ஒழுங்குமுறையின் தொகுப்புதான் இலக்கணம். இலக்கணம் விஞ்ஞான நோக்குடையது. ஆக்கத்திறனுடன் மொழி செயல்படுவதற்கான விதிகளைத் தெளிவாகக் கண்டறியும் பெருநோக்குக் கொண்டது இலக்கணம். இலக்கணக் கோட்பாட்டிற்கு வெறும் அகர வரிசை முறையில் விதிகளை வரிசைப்படுத்துவதில் சிறப்பில்லை. விதிகளின் அமைப்பு முறையில் நிலவும் பொதுமையினைக் கண்டறிவதே முக்கியமாகும்.

மொழி பற்றிய சிந்தனை தோன்றும்போதே மொழியின் இலக்கணம் பற்றிய உணர்வும், விதிகள் பற்றிய சிந்தனையும் தோன்றுகின்றன. மொழி அறிஞனின் வேலை, மொழி செயல்படுவதற்கான விதிகளைத் தானே உருவாக்கி விடுவதன்று; இயல்பிலேயே இருக்கும் விதிகளைக் கண்டறிந்து வகுத்தும் தொகுத்தும் அவற்றை விளக்குவதாகும். ஆறு தோன்றும்போதே கரை தோன்றிவிடுவது போல மொழி தோன்றும்போதே இலக்கணமும் தோன்றிவிடுகிறது. தமிழுக்குரிய முதன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம். தமிழின் மிகப்பழைய முதல் நூலும் இதுதான். எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்நூலின் எழுத்ததிகாரம், புணரியல் செய்திகளாக உருபன்கள் மற்றும் சொற்கள் எவ்வாறு இணைகின்றன என்பதை விளக்குகிறது. 21 எழுத்துகள் மொழி முதலிலும் 24 எழுத்துகள் மொழி ஈறாகவும் வருகின்றன. இதில் 33 எழுத்துகள் புணர்ச்சியில் இடம்பெறுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம் தன் 9 இயல்களில் முதல் மூன்று இயல்களைத் தவிர ஏனைய 6 இயல்களில் புணரியல் பாங்கினைப் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தி விளக்கியிருப்பதி லிருந்து மொழியமைப்பில் புணரியலின் முக்கியம் வாய்ந்த பங்கினை உணரலாம். தொல்காப்பியர் புணரியலில் எழுத்துகள் தம்மிற் புணரும் இயல்பினைக் கூறுகிறார். இங்கு எழுத்துகள் என்பன நிலைமொழியிறுதி எழுத்தும் வருமொழி முதல் எழுத்தும் மட்டுமே.

தொல்காப்பியம் நூல் மரபிலும் மொழி மரபிலும் மொழியில் எழுத்துகள் சேர்ந்து வருதல் குறித்துப் பேசுகிறது. இது தமிழ் மொழிக்குரிய எழுத்துகளின் வருகை வரன்முறையைத் தெரிவிப்பதாகும். சொற்களுக்கிடையே வரும் எழுத்துகளின் சேர்க்கை, மயக்கம் என்றும், சொல்லொடு சொல் சேருங்கால் நிலைமொழி ஈற்றெழுத்தும் வருமொழி முதலெழுத்தும் சேர்வது புணர்ச்சி என்றும் கூறப்படுகின்றது.

தொல்காப்பியர் புணர்ச்சி பற்றிய பொதுக்கருத்துக்களைப் புணரியலில் கூறுகிறார். சில பொதுப் பண்புகளின் அடிப்படையில் சொற்களைத் தொகுத்து அவை புணரும் முறையினையும் புணர்ச்சிக்கண் நிகழும் மாற்றங்களையும் தொன்றுதொட்டு வரும் இலக்கண மரபுகளையும் உருபியல் பேசுகிறது. நிலைமொழி ஈறுகளின் உயிரெழுத்துப் புணரும் பாங்கினை உயிர் மயங்கியலும் மெய்யெழுத்துகளின் புணர்முறைகளைப் புள்ளி மயங்கியலும் குற்றியலுகரப் புணர்ச்சியைக் குற்றியலுகரப் புணரியலும் தொல்காப்பியம் புணர்ச்சி விதிகளின் வழியாக விளக்குகின்றது.

நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் சேர்வது இரண்டு நூலின் கயிறு முனைகள் இணைவது போல இருக்கின்றன. பெரும்பாலும் நிலைமொழி இறுதியும் வருமொழியின் முதலும் மட்டுமே புணர்ச்சி எனும் செயலில் பங்கு கொள்கின்றன. விரல்கள் அடியிலிருந்து நுனிவரை சேர்ந்துள்ளது போல இரு சொற்களின் முகப்பகுதிகளும் புணர்ச்சியில் பங்கு பெறுவது இல்லை என்று தெ.பொ.மீ. குறிப்பிடுகிறார் (கே. கிருஷ்ணமூர்த்தி, பக்.126).

அ, இ, உ எனும் சுட்டுச் சொற்களும், 'ஒரு' போன்ற அடை மொழிகளும், 'உம்' போன்ற இடைச்சொற்களும், 'அன்', 'அத்து' போன்ற சாரியைகளும், மரம், குடும்பம் போன்ற பெயர்ச்சொற்களும், பனியத்துக்கொண்டான் போன்ற தொடர்களும் ஒன்றோடொன்று புணரும் பாங்கினைப் பல்வேறு நூற்பாக்களில் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

சார்பு உருபன், தனி உருபன் என உருபனியல் அடிப்படையில் மொழியியலார் வகைப்படுத்தினும் புணர்ச்சி முறையில் நிலைமொழி ஈறும் வருமொழி முதலுமே புணர்ச்சிக்குரிய களம் எனத் தொல்காப்பியர் கூறுகிறார்.

அவற்றுள்,

நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
குறித்துவரு கிளவி முதல் எழுத்து இயையப்
பெயரொடு பெயரைப் புணர்க்கும் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்கும் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்கும் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்கும் காலும்
மூன்றே திரிவுஇடன் ஒன்றே இயல்பு என
ஆங்கு அந்நான்கே மொழிபுணர் இயல்பே (நூற்: 109)

புணர்நிலையில் முதலில் வருவதை நிறுத்த சொல்லாகவும், அதனைத் தொடர்ந்து வருவதைக் குறித்துவரு கிளவியாகவும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

புணரியலின் களம்

நிலைமொழி ஈறும் வருமொழி முதலுமே புணர்நிலைக்குரிய களமாகக் காட்டப் பட்டாலும் சில சமயங்களில் புணரியலில் களம் விரிவடைவதைக் காணமுடிகிறது.

வன்றொடர் மொழியும் மென்தொடர் மொழியும்
வந்த வல்லெழுத்து ஒற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்
வல்லொற்று இறுதி கிளை ஒற்று ஆகும் (நூற் : 415)

எனும் நூற்பாவில் குரங்கு என்பது கால் எனும் சொல்லோடு புணருங்கால் நிலைமொழியில் உள்ள ஈற்றுக்கு அயல் எழுத்து வல்லொற்றாக மாறிக் குரக்குக் கால் என வருகிறது.

தாம் நாம் என்னும் மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோரன்ன
ஆஎ ஆகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும் (நூற் : 189)

எனும் நூற்பாவில் யாம் எனும் நிலைமொழி வேற்றுமை உருபுடன் புணருங்கால் யா எனும் நிலைமொழி முதலெழுத்து ய் + ஆ எனப் பிரிந்து யகரம் கெட்டு ஆ எனும் நெட்டுயிர் எ எனும் உயர்க்குறிலாக ஆகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். ய் எனும் மெய்யொற்று இங்கே கெட்டுப் பின் எ தோன்றுகிறதா அல்லது ய் எனும் மெய்யொற்றே எ எனும் உயிரெழுத்தாகத் திரிகிறதா எனும் ஐயம் ஒருபுறம் இருக்க, புணரியலில் நிலைமொழியின் முதலெழுத்தில் உள்ள யகர மெய் கெடுகிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அதுபோன்றே,

முன்னுயிர் வருமிடத்து ஆய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான

ஏனைமுன் வரினே தானிலை இன்றே (நூற் : 424, 425)

எனும் நூற்பாக்கள்வழி அஃது என்னும் நிலைமொழி, கடிது எனும் சொல்லுடன் புணரும் போது நிலைமொழி ஆய்தம் கெடுகிறது.

ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்த பகரம் கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகார மாகும் (நூற் : 445)

எனும் நூற்பாவில் நிலைமொழியாகிய ஒன்பது வருமொழியாகிய பத்து எனும் சொல்லுடன் புணரும்போது புணர் நிலைக்குரிய மொழி ஈறும் வருமொழி முதலுமாகிய களம் விரிவடைந்து ஒன்பது எனும் சொல்லில் உள்ள னகர ஒற்று ணகரமாகத் திரிந்தும் இரட்டிக்கவும், நிலைமொழிக்கு முன்னர்த் தகர ஒற்றுத் தோன்றவும் செய்கின்றன. அத்துடன் வருமொழியான பஃது எனும் சொல்லின் இறுதியில் உள்ள தகர ஒற்று றகர ஒற்றாக மாறுவதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

புணரியலில் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் மட்டும் இருநூல் இணைவது போல ஒன்றின் முடிவும் மற்றொன்றின் தொடக்கமும் புணர்வது போல நிலைமொழிச் சொற்களும் வருமொழிச் சொற்களும் முழு அளவில் புணரியலில் இடம்பெறுவதையும் காணமுடிகிறது. புணரியலின் களமாகவும், புணரியலில் ஈடுபடும் எழுத்துகளாகவும் கூறப்படும் நிலைமொழி ஈற்றுக்கும் வருமொழி முதலுக்கும் அப்பால் புணர்களம் விரிவடைந்து புணர்ச்சிச் செயல்பாடுகள் நிகழ்வது உண்டு.

புணர்ச்சி விதிகளின் பயன்பாடு

புணரியல் விதிகள் சொற்கட்டுகளை எளிமைப்படுத்தி மொழியின் உச்சரிப்பின் இயைபினை விளக்கவும் துணைபுரிகின்றன. அத்துடன் பொருள் எளிதில் விளங்குமாறும் அமைந்திருப்பதாக இலக்கணிகள் குறிப்பிடுகின்றனர். ஆனால் சில புணரியல் விதிகளைப் பார்க்கும்போது நமக்கு இக்கருத்தில் ஐயம் தோன்றுகிறது.

ழகர உகர நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான (நூற் : 262)

என்பதால் 'பழுஉப்பல்' எனவும்

ஓகார இறுதிக்(கு) ஒன்னே சாரியை (நூற் : 181)

எனும் நூற்பா வழி கோஒனை எனவும் வரும்.

அன்று வருகாலை ஆ ஆகுதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப (நூற் : 259)

எனும் நூற்பாவின் வழி அது + அன்று ==> அதாஅன்று எனவும் பெறப்படுகிறது. மேற்கூறிய 'பழுஉப்பல்', 'கோஒனை', 'அதாஅன்று' ஆகியன உச்சரிப்பு நிலையில் எளிமையுடையதாகக் கருத வாய்ப்பில்லை. அதுபோன்றே புணர் விதிகளால் கஃறீது, கோஃறீது, முட்டாள் எனப் பெறப்படும் சொற்களால் பொருள் தெற்றென விளங்குவதாகவும் கூற முடியாது.

புணர்ச்சி விதிகளில் சில புணரியல் களமின்றிப் பொதுப்படையாகவும் கூறப்பட்டுள்ளது.

பொன் என் கிளவி ஈறுகெட முறையில்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கின் தொடரியலான (நூற் : 357)

எனும் நூற்பாவில் பொன் எனும் சொல் செய்யுள் வழக்கில் பொலம் என வருவது சுட்டப்படுகிறது. செய்யுள் வழக்குக்கும் பிற வழக்குக்கும் உள்ள சொல் வேறுபாடு புணரியலில் அடங்குமா என்று ஐயம் எழுவதில் வியப்பேது மில்லை. அது போன்றே,

வகார மிசையும் மகாரம் குறுகும் (நூற் : 331)

எனும் நூற்பா நிலம் வலிது எனும் தொடரில் மகரம் அரை மாத்திரையிலிருந்து குறுகி ஒலிக்கும் என்று மகரக் குறுக்கம் பேசப்படுகிறது. எழுத்துகள் எவ்வித மாற்றமும் பெறாது இயல்பாக இருக்க ஒலிப்பு நிலையில் நிகழும் குறுக்கம் விளக்கப்படுவது எவ்வாறு புணரியலைச் சாரும் என்ற ஐயம் உள்ளது. தரும் எனும் தனிச்சொல்லில் உள்ள மகர ஒற்று அரைமாத்திரையளவு கொண்டது. ஆனால் அச்சொல் நிலை மொழியாகி வருமொழி முதலில் வகரம் வந்தால் (தரும் + வரை = தரும் வரை) மகரம் கால் மாத்திரை அளவு பெறும். இதன் காரணமாக இது புணரியலில் கூறப்பட்டது எனலாம். ஆனால் புணரியல் என்பது எழுத்துகளின் கூட்டு பற்றியது என்ற முன்பு கூறிய விளக்கத்திற்கு மாறாக எழுத்து மாற்றம் எதுவுமின்றி ஒலியளவுடன் நீட்டல் மற்றும் குறைத்தல் பற்றிப் பேசுவது சரியா எனக் கருதலாம்.

புல புணரியல் விதிகள் சொற்களின் புணர் நிலையினையும் அதன் வழி நிகழும் மாற்றங்களையும் குறிப்பிடுகின்றன என்பதில் ஐயமில்லை.

அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந ஆகும் (நூற்: 130)

எனும் நூற்பாவும்

கச்தப முதலிய மொழிமேல் தோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே
அன்ன மரபின் மொழிவயினான (நூற்: 144)

இங்கு நம் கவனத்திற்கு உரியவையாகும். நூற்பா 144 வழி நிலைமொழி இறுதி மெல்லெழுத்து வருமொழி முதலில் உள்ள வல்லின ஒலியால் அதற்கு இனமான மெல்லெழுத்து ஒலி பெறும் என்பதாகும். மீன் என்பதில் ன் எனும்

மெல்லெழுத்து இறுதியாகும். சுருட்டி எனும் வருமொழியில் சகரம் முதலெழுத்து. இதனால் ன் எனும் மெல்லெழுத்து மாறி மீஞ்சுருட்டி என வருகிறது. (மீஞ்சுருட்டி என்பது கும்பகோணம் அணைக்கரை வழித்தடத்தில் உள்ள ஓர் ஊரின் பெயராகும்). அதுபோன்றே கிண் + கிணி ==> கிங்கிணி எனவரும்.

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது சாரியை இடைவந்து சாரியையின் இறுதி மெல்லெழுத்தாக இருந்து அதைத் தொடர்ந்து வரும் வருமொழியின் முதலெழுத்து வல்லெழுத்தாக இருந்தாலும் மேற்கூறிய விதிப்படியே நடக்கும் என்பதை நூற்பா 130 உறுதி செய்கிறது. சான்று: புளி+ காய் = புளி + அம் + காய் = புளியங்காய். அடுத்தடுத்து வரும் இருவொலிகள் தமது ஒலிப்பு முறையில் இனிமையாக மாறுவது இயல்பன்றோ. இத்தகைய இயல்பு முறையான புணர்ச்சி விதிகளைச் சுட்டிக்காட்டத் தொல்காப்பியம் தவறவில்லை.

இன்னென உரூஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும் (நூற்: 132)

எனும் நூற்பா மொழியின் அசை, கட்டமைப்பு ஆகியவற்றை மனதில் கொண்டு அமைந்துள்ளது.

இதில் 'இன்' எனும் வேற்றுமையுருபிற்குப் பின்னர் 'இன்' என்ற சாரியை வராது என்கிறது. இது ஒரே ஒலிப்புத்தன்மையோடு இரு வேறு பொருள்களும் இலக்கணக் கூறுகளும் உடைய 'இன்' எனும் சொல் இரட்டித்து வராது எனும் வரன்முறையை உணர்த்துகிறது.

ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
வினையோ ரனைய என்மனார் புலவர் (நூற் : 147)

எனும் நூற்பா மூக்கொலிகளான ன, ண முன்னர் யகரம் வினைச்சொல்லில் வரும்போது அதற்கினமாகிய ஞகர மூக்கொலியாக மாறும் பாங்கினைக் கூறுகிறது. சான்றாக மண் + யாத்த எனும் சொல் மண்ஞாத்த என வரும்.

சில புணர்ச்சி விதிகள் சூழல் பற்றிய வரன்முறையின்றி எழுத்துகளின் ஒலிப்புத் தன்மையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் சில விதிகள் சூழல் வழிப் புணர்நிலை மாறுபடுவதையும் சுட்டுகின்றன.

வேற்றுமை அல்வழி, தொழிற் பெயர் போன்ற சொல் வகைக்கு ஏற்பப் புணர்விதிகள் மாறுபடுகின்றன.

இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே (நூற்: 236)

ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே (நூற்: 281)

வேற்றுமைக்கு உக்கெட அகரம் நிலையும் (நூற்: 300)

எனும் நூற்பாக்கள் வேற்றுமைக்கு உரிய புணர்நிலைகளாகும்.

மொழி முதலாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை அல்வழித் திரிபு இடன்இலவே (நூற்: 148)

வேற்றுமை அல்வழி இஐ என்னும்
ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பாகு நவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழாகு நவும் என்மனார் புலவர் (நூற்: 159)

அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றுஇடை மிகுமே (நூற்:204)

எனும் நூற்பாக்கள் அல்வழிக்கான புணர்ச்சி விதிகளாகும்.

வேற்றுமைக் கண்ணும் அதனோர் அற்றே (நூற்:217,226,253)

எனும் நூற்பா பல்வேறு இடங்களில் வேற்றுமைக் கண்ணும் அல்வழிக் கண்ணும் புணர்நிலை ஒத்திருப்பதை உணர்த்துகின்றன.

ஞகாரை ஒற்றிய தொழிற் பெயர் முன்னர்
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவ யினான (நூற்: 297)

தொழிற்பெயர் எல்லாம் தொழிற் பெயரியல (நூற்: 402)

எனும் நூற்பாக்களும்

மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை ஆகும் (நூற்: 276)

எனும் நூற்பாவும் சொல் இலக்கண வகையையொட்டிப் புணர்விதிகள் மாறுபடுவதை நமக்கு உணர்த்துகின்றன. மரம், நாள், திங்கள் எனச் சொற்களின் பொருளுக்கு ஏற்பவும் புணர்விதிகளும் மாறுபடுகின்றன.

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூற்: 218)

ஏயென் இறுதிக்கு எகரம் வருமே (நூற்: 278)

சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே (நூற்: 279)

பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும் (நூற்: 280)

நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே (நூற்: 248)

திங்கள் முன்வரின் இக்கே சாரியை (நூற்: 249)

இன்னும் அளவுப் பெயர்களும் எண்ணுப் பெயர்களும் சுட்ட புணர்விதிகளை மாறுபடச் செய்கின்றன.

அரையென வருஉம் பால்வரைக் கிளவிக்குப்
புரைவ தன்றால் சாரியை இயற்கை (நூற்: 166)

குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை (நூற்: 167)

சில சமயம் வருமொழியின் இறுதி எழுத்துகளை ஒட்டியும் புணர்விதிச் சூழல் அமைக்கப்பட்டுள்ளது.

ஐஅம் பல்லென வருஉம் இறுதி
அல்பெய ரெண்ணினு மாயியல் நிலையும் (நூற்: 394)

எனும் நூற்பா வருமொழி இறுதியில் ஐ, அம், பல் எனும் எழுத்துகள் இடம் பெறுவதைப் புணர் சூழலுக்கு அடிப்படையாக உணர்த்துகிறது. புணர்விதிகளுக்கு இத்தகைய, சூழல் அடிப்படையாக இருக்குமா எனும் ஐயம் எழுகிறது. இருந்தாலும், தொல்காப்பியர் புணர்விதிகளுக்குச் சொல், இலக்கணக்கூறுகள், பொருளமைதி முதலியவற்றைச் சூழல்களாக அமைத்து விளக்கியுள்ள பாங்கினை நாம் உணரலாம்.

விதி எனின் அது பொதுத்தன்மை கொண்டது. புணரியல் விதிகளிலும் பொதுமை உள்ளது என்பதைத் தொல்காப்பியரின் பல்வேறு மாட்டேறு நூற்பாக்கள் உணர்த்துகின்றன.

ஓகார இறுதி ஏகார இயற்றே (நூற்: 290)

ஏகார இறுதி ஊகார இயற்றே (நூற்: 275)

ஊகார இறுதி ஆகார இயற்றே (நூற்: 265)

ஆகார இறுதி அகர இயற்றே (நூற்: 222)

என்ற நெடில் உயிர்களின் புணர்விதிகளைப் பொதுமைப்படுத்த முயன்றுள்ளார். அவ்வாறே,

இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே (நூற்: 314)

விசைமரக் கிளவியு ஞெமையும் நமையும்
அவைமுப் பெயரும் சேமர இயல (நூற்: 283)

சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே (நூற்: 279)

ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே (நூற்: 263)

உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூற்: 244)

என மரப்பெயர்களின் புணர்நிலைக்குரிய மெல்லெழுத்து மிகுதல் எனும் கூறு இங்கே மாட்டேறு உத்தியால் விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறே,

இருளென் கிளவி வெயிலியல் நிலையும் (நூற்: 403)

வெயிலென் கிளவி மழையியல் நிலையும் (நூற்: 378)

மழையென் கிளவி வளியியல் நிலையும் (நூற்: 288)

வளியென வரூஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (நூற்: 243)

பனியென வருஉங் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும் (நூற்: 242)

ஆகிய இயற்கையைக் குறிக்கும் சொற்கள் பல அத்துச் சாரியை பெறுவதாகப் பொதுமைப்படுத்தப்பட்டுள்ளன. தொழிற் பெயர்களுக்குரிய விதிகளும் எண்ணு முறைப் பெயர்களுக்குரிய விதிகளும் சில பொதுமைக் கூறுகளுடன் விளங்குகின்றன. இத்தகைய மாட்டேற்று உத்தி நூற்பா மனப்பாடத்திற்கு எளிதாக உதவுகிறது. எனினும் புணரியல் விதிகள் சில ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டுப் பொதுமைக் கூறுகளைக் கொண்டு செயல்படுவதையே நமக்கு உணர்த்து கின்றன. பொதுமை இயல்பு கொண்ட புணர்விதிகளே ஆக்கத்திறன் (generative capacity) உடையனவாகக் கருதப்படும். இத்தகைய ஆக்கத்திறன் கொண்ட விதிகளால் மொழியமைப்பை எளிதாகவும் சிறப்பாகவும் விளக்க முடியும் என்று மொழியியலாளர்கள் கருதுகிறார்கள்.

விதிகளின் வகைப்பாடு

சொற்கள் புணர்வதற்கான செய்கை இலக்கணம் கூறாமல், அவற்றிற்கு வேண்டிய கருவி இலக்கணத்தைப் புணரியல் தொடர்பான இயல்களில் தொல்காப்பியர் விவரிக்கிறார். இதன் பொருட்டே இளம்பூரணரும் புணருதற்குரிய கருவியின் இயல்பு கூறினமையின் புணரியல் எனப்பட்டது என்று கூறுகிறார். வினையெச்ச வகைகளை விளக்க வந்த தொல்காப்பியர் 'செய்' எனும் ஒரு வினையை அடிப்படையாகக் கொண்டு 'செய' எனும் வாய்பாட்டு வினையெச்சம், 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்று வாய்பாட்டு முறையில்

விளக்கியுள்ளார். செய் என்பது செய என வருவது போல — 'இந்த மாதிரி'யை ஒட்டி வா என்பது வர என்று வரும் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். ஆனால் 'வா' எனும் வினை 'வர' என்று வந்தால் 'படி' என்ற வினை 'படிய' என்று வராது. 'படிக்க' என்று வருவதை நாம் வல்லார் வாய்க் கேட்டுணரத்தான் வேண்டும். மாதிரிகாட்டி விளக்கும்போது ஒரு செயல்முறை வாய்பாடு கூறப் படுகிறது. விதிமுறைகள் பேசப்படவில்லை. ஆனால், புணர்விதிகளைச் சொற் கூட்டுகள் பெறும் முறைக்கு — கருவியாகத் தொல்காப்பியர் அமைத்துள்ளார். இப்புணர்விதிகளை அவற்றின் செயற்பாட்டுத் திறனால் பலவாறாக வகைப்படுத்தலாம்.

"புளி + அம் + காய்" என்ற புணர்நிலையில் புளியம்காய் என்று உச்சரிப்பதைவிடப் புளியங்காய் என்றே உச்சரிப்பது இயல்பாகத் தோன்றும். அது போன்றே மரம் ஐ என்ற புணர்நிலை 'மரமை' என்று இடம்பெறாது. 'மரத்தை' என்றே வரும். அத்துச்சாரியை மகர ஈற்றுச் சொற்களின் வேற்றுமைப் புணர்ச்சியில் தவிர்க்க இயலாததாகும். இதனையே கட்டாய விதிகளாக மொழியியலார் கூறுவர்.

ஒரு விதி — எழுத்துத்திரிபு — அதற்கான சூழல் அமைந்தவிடத்து, தவறாது செயல்படுவதுண்டு. இதனைக் கட்டாய விதி (obligatory rules) என்று கூறுவர். அத்தகைய கட்டாய விதிகளாக, பல தொல்காப்பிய நூற்பாக்களைக் கூற முடியும்.

அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும் *(நூற்: 130)*

எனும் நூற்பாவும்,

லனவென வருஉம் புள்ளி முன்னர்த்
த ந எனவரிற் றனவா கும்மே *(நூற்: 150)*

எனும் நூற்பாவும்,

மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும் *(நூற்: 27)*

எனும் நூற்பாவும் கட்டாய விதிகளுக்குச் சான்றுகளாகும்.

சில சூழல்களில் ஒரு விதி செயல்படும் அல்லது செயல்படாமலும் இருக்கும். இத்தகைய விதிகளை விருப்ப விதிகள் (optional rules) என்று கூறுவர். புணர்நிலையில் கீழ்குளம் என்றும் கீழ்க்குளம் என்றும் வரலாம் என்பதைக்

கீழென் கிளவி உறழத் தோன்றும் *(நூற்: 396)*

என நூற்பா கூறுகிறது. ஓர் எழுத்து வருதல் அல்லது வராமை என்ற நிலையை விருப்ப விதியாகக் கருதலாம்.

சில புணர்நிலைகளில் ஒரு விதியின் செயல்பாட்டால் ஒன்றோ அல்லது வேறொன்றோ நிகழும். அதாவது ஓரிடத்தில் மெல்லெழுத்து வரலாம் அல்லது வல்லெழுத்து வரலாம். இத்தகைய ஒன்று அல்லது மற்றொன்று என்ற நிலையில் செயல்படும் புணர்விதிகளை மாறல் விதிகள் (alternative rules) என்று கூறலாம்.

அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே (நூற்: 194)

எனும் நூற்பா அத்து மற்றும் இன் சாரியைகள் இரண்டும் அழன், புழன் ஆகிய சொற்களுடன் மாறி மாறி வருவதைக் குறிக்கிறது. அதாவது அழத்தை, அழனினை, புழத்தை, புழனினை என வரலாம். பாழ்கிணறு என்றும் பாழ்ங்கிணறு என்றும் இருவகையாலும் புணர்நிலையில் இடம்பெறலாம் எனும் மாற்ற நிலையைக் கீழ்க்காணும் நூற்பா காட்டுகிறது.

பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே (நூற்: 388)

இங்கே விருப்ப விதிகளுக்கும் மாறல் விதிகளுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். விருப்ப விதியின் புணர்நிலையில் ஓர் எழுத்து வரும் அல்லது வராமல் இருக்கும். கீழ் + குளம் எனும்போது வல்லெழுத்து மிகும் அல்லது மிகாது. சான்று: கீழ்க்குளம் / கீழ்குளம். ஆனால் மாறல் விதியின்படி அழன் + ஐ எனும் சொற்களின் புணர்நிலையில் அத்துச்சாரியை வரும் அல்லது இன் சாரியை வரும். சான்று: அழத்தை, அழனினை. இங்கே அத்துச் சாரியை வரும் அல்லது வராது என்றால் அது விருப்ப விதியாகும். அதற்கு மாறாக அத்துச் சாரியை வரும் அல்லது இன் சாரியை வரும் என்று கூறும் போது அது மாறல் விதிகளைச் சார்ந்ததாகக் கருதப்படும். இவ்வாறு அத்துச் சாரியை வருவதற்கும் இன் சாரியை வருவதற்கும் எவ்விதச் சூழல்களும் காரணங்களாக அமையா. எல்லாச் சூழல்களிலும் அத்தும் - இன்னும் வருவதற்குச் சரிசமமான வாய்ப்புடையன.

தொல்காப்பியர் புணர்விதிகளை இயல்பு, திரிபு, உறழ்வு எனும் நிலைகளில் வகைப்படுத்தியுள்ளார். ஒரு விதியின் செயற்பாட்டில் இயல்பாக வருதலும் ஓர் எழுத்து மிகுந்து வருதலும், சில சமயம் இயல்பாகவோ ஓர் எழுத்து மிகுந்தோ வருதலும் ஆகிய மூன்று நிலைகளாகக் குறிப்பிடுகிறார்.

வேற்றுமை அல்வழி இஐ என்னும்
ஈற்றுப் பெயர்க் கிளவி மூவகை நிலைஇய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர் *(நூற்: 159)*

எனும் நூற்பா தொல்காப்பியரின் புணர்விதி வகைப்பாட்டினை உணர்த்தும்.

மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்..... (நூற்: 146)

எனும் நூற்பா கதிர்நெரி என வரும் நிலையைக் குறிக்கிறது. தொல்காப்பியர் விருப்ப விதிகளையும் மாற்று விதிகளையும் உறழ்ச்சி (variable rules) விதிகளாக இணைத்துக் கூறியிருப்பதை உணரலாம்.

சில புணர் விதிகள் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு விதமாகவும் வேறொரு சூழலில் இன்னொரு விதமாகவும் செயல்படும். இதனை உறழ்ச்சி விதிகள் என்று கூறுவர்.

சே என்ற ஒரே பொருளுடைய ஒரே சொல் வெவ்வேறு சூழ்நிலையில் இருவகையாகப் புணரவில்லை. சே – மரப்பெயர் வேறு. சே – விலங்கின் பெயர் வேறு. எழுத்து ஒப்புமை மட்டுமே உண்டு. இது உறழ்ச்சியாகாது.

சே என் மரப்பெயர் ஒடுமர இயற்றே (நூற்: 279)

பெற்றம் ஆயின் முற்ற இன் வேண்டும் (நூற்: 280)

இந்நூற்பாவில் சே + கோடு எனும் சொற்கூட்டில் சே என்பது மரத்தைக் குறித்தால் சேங்கோடு எனவும் சே என்பது பெற்றத்தை உணர்த்துமாயின் சேவின்கோடு எனவும் வரும். இதனை உறழ்ச்சி விதியாகக் கருதலாம். உறழ்ச்சி நிலையில் சில விதிகளில் உறழ்வுப் பெரும்பான்மை வருதற்கும் சிறுபான்மை வருதற்கும் அரிதாக வருதற்கும் வாய்ப்புண்டு. இப்பாகுபாட்டினைத் தொல்காப்பியர் ‘உரிமையுடைத்தே’, ‘பெறுதலும் உரித்தே’, ‘மானமில்லை’, ‘வரைநிலை இன்றே’, ‘வரையார்’ எனும் தொடர்களால் குறிப்பிட்டுள்ளார்.

உறழ்ச்சி விதிகளின்படி புணர்நிலையில் சேங்கோடு சேவின் கோடு என இருநிலைகளில் வரலாம். அதாவது மெல்லெழுத்து மிகுந்தும் வரலாம். இன் சாரியை பெற்றும் வரலாம். ஆனால் சே என்பது மரத்தைக் குறிக்கும்போது மெல்லெழுத்து மிகுதல் மட்டுமே நிகழும். சே என்பது மாட்டைக் குறிக்கும்போது ‘இன்’ சாரியைதான் வரும். இவ்வாறு சூழல் காரணமாக - இரண்டில் எந்த ஒன்று வரும் - செயல்படும் என்பது சூழல் வழித் தீர்மானிக்கும் பண்புக் கூறுகள்தான் உறழ்ச்சி விதிகளை மாறல் விதிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

சான்று:

உரித்து:

ஊ என் ஒருபெயர்ஆவொடு சிவணும் (நூற்: 270)

அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே (நூற்: 271)

பூ என் ஒருபெயர் ஆ இயல் பின்றே
ஆவியின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (நூற்: 269)

மானமில்லை:

யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே (நூற்: 230)

வல்லெழுத்து மிகினு மான மில்லை (நூற்: 231)

ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே (நூற்: 246)

வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை (நூற்: 247)

வரையார்:

பெண்டென் கிளவிக் கன்னும் வரையார் (நூற்: 422)

அத்தவண் வருதலும் வரைநிலை இன்றே..... (நூற்: 220)

இவ்வாறு புணர்விதிகளைக் கட்டாய விதிகள், விருப்ப விதிகள், உறழ் விதிகள் என வகைப்படுத்தலாம். விதிகளை வகைப்படுத்தி நிரல் படுத்தினால்தான் மொழிக்கு எத்தகைய விதிகள் இன்றியமையாதன என்றும் விதிகளின் செயல்பாட்டில் நிரல்முறை உள்ளதா என்றும் அறிந்து எழுத்து முறைக்கும் பேச்சு முறைக்கும் புணர்விதிகள் பயன்படுவதில் உள்ள வேறுபாடுகளை வகைப்படுத்துவது எளிதாக இருக்கும்.

வட்டார விதிகள்

சில சொற்கள் பல்வேறு நிலைகளில் புணருவதை உறழ்ச்சிகளாகத் தொல்காப்பியம் காட்டுகிறது. இதனை மாறல் விதியாகக் கருதலாம்.

தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை (நூற்: 341)

எனும் நூற்பாவின் வழி தேன்குடம், தேற்குடம், தேங்குடம், தேக்குடம் எனும் வேறுபாடுகளுடன் சொற்கள் பெறப்படுவதை உணரலாம். அவ்வாறே

இல்லென் கிளவி யின்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிடன் உடைத்தே (நூற்: 373)

எனும் நூற்பாவின் வழி இல்கல், இல்லைக்கல், இல்லாக்கல் என வேறுபாடுகளுடன் சொற்கள் பெறப்படுகின்றன. இவ்வேறுபாடுகள் வட்டார வேறுபாடுகளை உணர்த்துவதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.

உறழ்ச்சி விதிகளின் செயல்பாட்டினைச் சூழல்களே நிர்ணயிக்கின்றன. ஒரு குறிப்பிட்ட வட்டாரப் பகுதியில் ஒரு விதமாகவும் இன்னொரு பகுதியில் இன்னொரு விதமாகவும் சொற்களின் புணர்முறை அமையும் என்று கூறும்போது இவ் உறழ்ச்சி விதிகளை வட்டார விதிகள் என்று கூறலாம். தேன் குடம், தேங்குடம் எனும் சொற்கள் எல்லாம் ஒவ்வொரு வட்டாரத்திற்கு உரியதாகக் கருதும்போது இப் புணர்நிலையை உணர்த்தும் விதிகளை வட்டார விதிகளாகக் (regional rules) கூறலாம். சில விதிகள் நாகரீகம், கல்விநிலை இவற்றின் அடிப்படையில் உறழ்ச்சி பெறும். இத்தகைய விதிகளைச் சமூக விதிகள் (social rules) எனவும் குறிப்பிடலாம்.

ஆன்முன் வருஉம் ஈகாரப் பகரம்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே (நூற்: 234)

எனும் நூற்பா ஆன் + பீ எனும் சொற்கூட்டு ஆன்பீ என வராமல் ஆப்பி என இடம்பெறுகிறது. இது இடக்கரடக்கல் காரணமாக அமைந்துள்ள சமூக விதியாகக் கருதலாம்.

நிரல்முறை

நிரல்முறை இல்லாவிடில் புணர்முறை ஒழுங்கற்றுக் குழப்பமாக அமையும்.

அல்லதன் மருங்கின் சொல்லும் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயின் இயற்கை ஆகும் (நூற்: 327)

எனும் நூற்பாவில் நும் எனும் சொல்லின் மேல் நின்ற உகரம் கெடுதல், அவ்விடத்து ஈகாரம் வருதல், பின்னர் மகர ஒற்றுக் கெடுதல், அவ்விடத்து ரகர ஒற்று வருதல் ஆகிய புணர்விதிகளால் நும் என்னும் சொல்லிலிருந்து நீயிர் என்னும் சொல் பெறப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. இங்கே ஒன்றன் பின் ஒன்றாக நிரல் முறையில் விதிகள் செயல்படுவதை நாம் காணலாம். ஒரு புணர்நிலையில் இடம்பெறும் விதிகள் தங்களுக்குள் நிரல்முறையாகச் செயல் படுவதை அகநிரல் முறை (internal ordering) என்று கூறுவர். சில சமயங்களில் சொற்களின் புணர்நிலையில் வேறொரு இடத்துக் கூறப்பட்டுள்ள விதியும் செயல்பட வேண்டி வரலாம். சான்றாகப் பனை எனும் நிலைமொழி காய் எனும் வருமொழி யுடன் இணையும்போது ‘அம்’ சாரியை வருவது விதியாகக் கூறப்பட்டுள்ளது.

பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்அவண் ஒழிய என்மனார் புலவர் (நூற்: 284)

அம் வருவதோடு புணர்நிலை பனை + அம் + காய் என்று வந்த பின்னர் நிலைமொழியான பனையின் இறுதி உயிர் 'ஐ' கெடும் என்பதோடு நூற்பா முடிகிறது. ஆனால்,

புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே (நூற்: 139)

எனும் நூற்பாவின்படி பன் + அம் + காய் என்பதில் உள்ள மெய் ஒற்று 'ன்' னும் அகரமும் இணைந்து பனம் காய் என வரும். அதற்குப் பின்னர்

அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும் (நூற்: 130)

எனும் நூற்பாவின்படி அம்மின் இறுதி மகரம், வருமொழி முதலில் உள்ள ககரத்திற்கு ஏற்ப ஙகரமாக மாறும். அதன் பின்னரே 'பனங்காய்' எனும் சொற்றொடர் பெறப்பட்டுப் புணர்ச்சி நிறைவுறுகிறது. இங்கே நூற்பாவில் புணர் முறைக்குக் காட்டப்பட்ட விதிகளுக்கு அப்பால் பல விதிகள் நிரலாக இடம்பெற வேண்டியிருப்பதை நாம் உணரலாம். இவ்விதிகள் செயல்படும் முறையினைப் புறநிரல் முறை (external ordering) என்று கூறலாம். தொல்காப்பியர் விதிகளின் இத்தகைய புறநிரல் முறை குறித்துத் தெளிவான சிந்தனை பெற்றிருந்தாரா என்பது ஐயமாக உள்ளது. ஆய்விற்கு உரியது.

'நீ' என்பது இரண்டாம் வேற்றுமை உருபுடன் சேரும் போது நெடுமுதல் குறுகிப் பின்னர் னகர ஒற்றுப் பெற்று 'நின்' என மாறும் (180). இவ்வாறு பெறப்பட்ட னகரம் வருமொழி ஐகாரத்துடன் சேரும்.

நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்........ (நூற்: 160)

எனும் விதியினால்தான் 'நின்னை' எனவரும்.

இல்லையெனில் நின் + ஐ = நினை எனவாகும். ஒருவேளை 'நீ' என்பதுடன் னகர ஒற்று முதலில் இடம்பெற்று ஐகார வருமொழியுடன் புணர்ந்தால் 'நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதல்' எனும் விதியினால் நீன் + ஐ = நீயை என மாறும். புணர் நிலைக்குப் பின்னர் 'நின்னை' எனும் சொல்லினைப் பெற நெடில் குறுகல், னகர ஒற்று வருதல், பின்னர் னகர ஒற்று இரட்டித்தல் ஆகியன ஒன்றன் பின் ஒன்றாக நிரலாக இடம்பெற வேண்டியுள்ளன.

கல் + நன்று எனும் சொற்கள் புணரும்போது நிலைமொழி லகர ஒற்று மெல்லெழுத்து முன்னர் னகரமாகும். இதற்குக் கீழ்க்காணும் நூற்பா சான்றாகும்.

மெல்லெழுத் தியையின் னகாரம் ஆகும் (நூற்: 368)

பின்னர், கன் + நன்று எனப் பெறப்பட்ட நிலையில்,

லனவென வருஉம் புள்ளி முன்னர்த்
தந எனவரிற் றனவா கும்மே (நூற்: 150)

எனும் விதியின்படி கன் + நன்று → கன் + னன்று என மாறிக் கன்னன்று என வழங்கப்படும். இங்கே விதிகள் நிரலாக வராவிட்டால் புணர்நிலையில் கன்னன்று எனும் சொல்லைப் பெற இயலாது. ஆகையால் விதிகள் நிரலாக இடம்பெற வேண்டியது அவசியமாகும்.

ஆறாம் வேற்றுமை உருபாகிய அது எனும் வருமொழி புணர்வதைக் கீழ்க்காணும் நூற்பா குறிக்கிறது.

ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும் (நூற்: 116)

நாம் எனும் நிலைமொழியுடன் அது வருமொழியாகப் புணருவதை உரையாசிரியர்கள் சான்று காட்டியுள்ளனர். நாம் என்பது குறுகி நம் என மாறிப் பின்னர் வருமொழி அது எனும் சொல்லுடன் அகரம் கெட 'நமது' என வருகிறது. நாம் எனும் சொல் அது எனும் சொல்லுடன் புணருங்காலை நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதல் எனும் விதி (நூற்பா. 161) பிற விதிகளோடு அதற்குள்ள முறையால் இங்கே செயல்பட இயலாது.

வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை (நூற்: 330)

எனும் நூற்பாவில் 'ஈம்' எனும் நிலைமொழி 'அம்' எனும் வருமொழியுடன் புணருங்காலை 'நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடும்' (நூற்: 161) என்ற புணர்விதி செயல்படாது தவிர்க்கப்படுகிறது. ஈம் + அக்கு + குடம் → ஈமக்கு + குடம் → ஈமக்குடம் எனப் புணர்விதி செயல்படுகிறது.

லனவென வருஉம் புள்ளி முன்னர்த்
தந எனவரிற் றனவா கும்மே (நூற்: 150)

எனும் நூற்பாவையும்,

தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின்று என்மனார் புலமை யோரே (நூற்: 370)

எனும் நூற்பாவையும் தற்போது நாம் கவனத்தில் கொள்வோம்.

கல் + தீது எனும் சொற்களின் புணர்ச்சி மேற்கூறிய நூற்பா விதிகளின் துணையுடன் கஃறீது என இடம்பெறுவதாக உரையாசிரியர்கள் சான்று காட்டி யுள்ளனர். இப்போது கல் + தீது எனும் சொற்கள் புணரும்போது வருமொழி முதலிலுள்ள தகரம் நிலைமொழியீற்று லகரம் வருவதால் றகரமாக மாறுகிறது. அதனால் கல் + றீது என்பது பெறப்படும். இப்போது வருமொழி முதலில்

றகரம் ஆய்தமாக மாற வழியில்லை. இவ்விரு விதிகளையும் முறைமாற்றிச் செயல்படுத்தினால் என்ன எனும் ஐயம் எழலாம். வருமொழியில் தகரம் இருப்பதால் ஆய்தம் தோன்ற கஃதீது என மாறும். ஆனால் அதற்குப் பின்னர்த் தகரம் றகரமாக மாற வாய்ப்பில்லை.

இவ்விரு விதிகளையும் ஒன்றன்பின் ஒன்றாக எந்த முறையில் செயற்படுத்தினாலும் கஃறீது எனும் சொல் வராது. எனவே, ஒரே நேரத்தில் இரு விதிகளையும் செயல்படுத்தினால்தான் கஃறீது எனும் சொல் பெறப்படும்.

புணர்விதிகளை நிரலாக அமைத்துக் கொண்டு ஒன்றன்பின் ஒன்றாகச் செயல்படுவதாகக் கருதினால் கஃறீது எனும் சொற்கூட்டினைப் பெற இயலாது.

விகாரப்பட்டதின் விகாரத்தை விகார எழுத்தாகக் கொள்ளாமல் மூல எழுத்தாகக் கொள்ளவேண்டும் என்றும் இதனைத் 'திரிந்ததன் திரிபு' எனும் உத்தியாகக் கருத வேண்டும்

என்றும் சிவலிங்கனார் (புணரியல், பக்கம் 146) உரை விளக்கம் தந்துள்ளார். அதாவது, கல் + தீது = கஃ + தீது என்று முதல் விதியின்படி மாற்றம் நிகழ்ந்த பிறகு, நிலைமொழி லகரத் திரிபாகிய ஆய்தத்தை வருமொழித் தகரமானது ஆய்தமாகவே கருதாது அதன் முந்தைய வடிவமாகிய லகர ஒலியாகக் கருதித் தகரம் றகரமாக மாற அதன் முன்னுள்ள லகர ஒலியியல் கூறுகளே காரணமாக இருக்கும் நிலையில் ஆய்த எழுத்து தோன்றிய பின்னர்த் தகர ஒலி மாற்றத்திற்கான ஒலியியல் சூழல் அங்கேயில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

தொல்காப்பியர் சில புணர்விதிகளை நிரல்முறையோடும் சில விதிகளை ஒட்டுமொத்த செயற்பாட்டுடனும் அமைத்துள்ளார். இதனால் விதிகளின் செயற் பாட்டில் முன்பின் ஒழுங்கு முறையினைக் காண முடியவில்லை. புணர்விதிகள் அவ்வப்போது அந்தந்தச் சொற்களுக்கேற்ப அமைக்கப்பட்டிருப்பதால் இப்புணர் விதிகள் பெரும்பாலும் சொற்களைப் பெறுவதற்கான வழிமுறையாகக் கருத முடிகிறதே தவிரப் பொதுமைக் கூறுகளின் அடிப்படையில் ஒழுங்கு முறையோடு அமைந்திருப்பதாகவும், ஒரு மொழிக்குரிய பொது விதிகளாகவும் கருத இயலவில்லை. புணர்ச்சி விதிகளின் சில சொற்களுக்கான வழிமுறைகளே என்பதற்குச் சான்றாகப் பல நூற்பாக்கள் உள்ளன. அவை குறிப்பிட்ட சொற்களின் புணர்ச்சிக்கான விதிகளாக மட்டுமே அமைந்துள்ளன.

சான்று:

சார் எனும் கிளவி காழ்வயின் வலிக்கும் *(நூற்: 365)*

பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே *(நூற்: 240)*

இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலும் உரித்தே செய்யு ளான (நூற்: 317)

சிறப்புக்கூறு காட்டல்

பனியென வருஉங் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும் (நூற்: 242)

மேற்கூறிய நூற்பாவிலும் அத்துச் சாரியை வருவது மட்டுமே கூறப்படுகிறது. அத்துச் சாரியை வந்து வருமொழி வல்லெழுத்தாயின் வல்லொற்றுமாகும் என்பதை நாம் கொண்டு கூட்டி உணர்ந்திட வேண்டும். அதுபோன்றே விண் எனும் சொல்லுடன் அத்துச் சாரியை வருவது மட்டுமே காணப்படுகிறது.

விண்ணென வருஉம் காயப் பெயர் வயின்
உண்மையும் உரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை (நூற்: 306)

அத்து வருவதோடு விண் என்பது குறில் ஒற்றாகையால் ஒற்று இரட்டிக்கிறது.

நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்
குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்
அறியத் தோன்றிய நெறியில் லென்ப (நூற்: 161)

இதற்குப் பிறகு வல்லினம் வருமொழி முதலில் வந்தால் வல்லெழுத்து மிகும் எனும் விதிப்படி 'விண்ணத்துக் கொண்டான்' என்றமையும். இவ்விரு புணர் விதிகளும் முன்னரே கூறப்பட்டதால் இதனையும் இணைத்து 'விண்ணத்துக் கொண்டான்' எனும் தொடரைப் பெற வேண்டியுள்ளது. இவ்வாறு சில விதிகளின் சிறப்புக் கூறுகளைக் காட்டிச் சொல்வது தொல்காப்பியரின் முறையாக உள்ளது.

புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (நூற்: 245)

எனும் நூற்பாவில் அம் சாரியை இடம்பெற்ற பின்னரே மகர ஈறு வருமொழி முதலெழுத்துக்கு ஏற்பப் புளியஞ்சோறு, புளியங்கோடு என வருகிறது.

நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே (நூற்: 248)

மேற்கூறிய நூற்பா சுட்டும் விதிமுறைகளின்படி, பரணி என்னும் நாட்பெயருடன் ஆன் சாரியை இடம்பெற்ற பின்னர், வல்லெழுத்து வருமொழி முதலாக இருப்பதால் னகர ஒற்று றகரமாகத் திரிகிறது. இத்திரிபு மேற்கூறிய நூற்பாவில் சுட்டப்பட வில்லை. இவற்றையெல்லாம் நாம் 'நிரல்' செய்யவேண்டும். அத்துடன் இவ் விதிகளின் செயற்பாடுகள் நிரலாக இருக்கும் வண்ணம் அமைத்தும் கொள்ள வேண்டியுள்ளது.

புணர்சொற்கள்

புணர்நிலையில் சொற்கள் தனி உருபன், கூட்டுருபன் ஆகிய இருவகை உருபன்களின் புணர்ச்சிகளையும் தொல்காப்பியர் குறிப்பிடுவதாகக் கூறலாம். அதாவது புணர்நிலையில் சொற்கள், அடைகள் முதலியன பற்றிப் பேசப்படுகின்றன.

ஆ + ஞாலம் எனும் சொற்கூட்டுப் புணர்ச்சியில் நிலைமொழிச் சொல்லாகிய 'அ' சுட்டுப் பொருளில் வரும் கட்டுருபன் (bound morph) அதாவது தனித்து வர இயலாத அடைமொழியாகும். நீ + ஐ என்பதில் வருமொழி 'ஐ' இரண்டாம் வேற்றுமை உருபு கட்டுருபனாகும். பல + பல எனும் சொற்கூட்டில் பல என்பது அடைமொழி. சாத்தன் தந்தை என்பதில் இரண்டும் தனித்து வரும் சொற்களாகும். புணரியலின் பிற்பகுதியிலும், உருபனியலிலும் முறையே சாரியை வேற்றுமை உருபுகள் ஆகிய கட்டுருபன்களின் புணர்ச்சிகள் சொல்லப்பட்டுள்ளன. பெரும்பாலும் ஏனையிடங்களில் தனியுருபன்களின் (free morph) புணர்ச்சிகள் கூறுப்பட்டுள்ளன. தொல்காப்பியர் புணர் நிலையில் நிலைமொழி, வருமொழிகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட முறை நமக்குத் தெளிவாகப் புலப்படவில்லை.

சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும் (நூற்: 206)

யவமுன் வரினே வகரம் ஒற்றும் (நூற்: 207)

எனும் நூற்பாக்கள் வழி அகரச் சுட்டு நிலைமொழியாயிருக்க வருமொழி முதலில் 'ய, வ' கரங்கள் வந்தால் வகரம் ஒற்றும் என்று கூறப்படுகிறது. அதாவது அ + யாழ் → அவ்யாழ் எனவும் அ + வற்று → அவ்வற்று எனவும் வரும். அவ்வாறு இருக்க, திரும்பவும் 'அவ்' என்பதனைச் சுட்டி நிலைமொழிச் சொல்லாகக் கருதி வற்று எனும் சாரியையுடன் புணர்வதைக் கூறுவது விளங்க வில்லை. அவ் + வற்றுக் கோடு → அவ்வற்றுக் கோடு என்பது முற்கூறப்பட்ட விதிகளால் பெறப்படும். ஓரிடத்தில் நிலைமொழியாக அகரத்தையும் பிறிதோரிடத்தில் 'அவ்' (காண்க: நூற்பா: 178, 184) என்பதை நிலைமொழியாகவும் இன்னுமோரிடத்தில் அவை என்பதை நிலைமொழியாகவும் கருதிப் புணர் நிலையினை விளக்கியுள்ளார்.

'அவை', 'அவ்' ஆகியன பன்மைக்குரிய சொற்களாகக் கருதப் படலாம். (அ என்பது ஒருமைக்குரிய சுட்டாக வருவது போல) இருந்தாலும் 'அ' என்பதே சுட்டுப் பொருளில் அமைந்த வேர்ச் சொல்லாகும்.

பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான (நூற்: 214)

எனும் நூற்பாவில் பல என்பது நிலைமொழிச் சொல்லாகும்.

பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்றோடு சிவணல் எச்ச மின்றே (நூற்: 175)

எனும்போது 'பல்ல' என்பது அடிச்சொல்லாக அமைகிறது. பல்லவற்றை எனும் புணர்நிலைச் சொல்லைப் பெறவேண்டிப் 'பல்ல' என்ற நிலைமொழியை 'வற்று' எனும் சாரியையோடும் இரண்டாம் வேற்றுமை உருபோடும் புணரும் வண்ணம் விதி அமைத்துள்ளார்.

வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே (நூற்: 374)

நாயும் பலகையும் வருஉங் காலை
ஆவயின் உகரங் கெடுதலும் உரித்தே
உகரம் கெடுவழி அகரம் நிலையும் (நூற்: 375)

என்று கூறும்போது 'வல்' என்பது தொழிற்பெயர் போலப் புணருமென்று கூறி முதல் நூற்பாவால் 'வல்லு' எனும் சொல் பெறுவதற்கான விதிகளை அமைத்துள்ளார். பிறகு வருமொழிகளாக நாய், பலகை ஆகியவை வரும்போது முதல் நூற்பாவில் பெறப்பட்ட சொல்லாகிய 'வல்லு' என்பதையே அடிச்சொல்லாகக் கொண்டு விதிகளை அமைத்துள்ளார். வல் + நாய் எனும் சொற்கள் புணரும்போது அகரம் தோன்றினாலே முடிவானது என்பதும், வல் என்பதிலிருந்து வல்லு பெறப்பட்டுப் பின்னர் அது புணர்நிலையில் வல்ல என்று அமைவதாகக் காட்டுவது அவசியமாகத் தெரியவில்லை.

ஏழென் கிளவி உருபியல் நிலையும் (நூற்: 389)

எனும்போது 'ஏழ்' என்பது வேர்ச் சொல்லாக அமைகிறது.

அளவும் நிறையும் எண்ணும் வருவழி
நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்
கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க (நூற்: 390)

எனும்போது ஏழ் என்பதன் நெடில் குறுகி உகரம் வந்தும் எழு என மாறுவதாகக் கூறுகிறார். பத்து வருமொழியாக வந்தால் எழுபஃது என்று தோன்றுகிறது. ஆனால் ஆயிரம் வரும்போது 'எழு' என்பதனை நிலை மொழியாகக் கருதி அதன் இறுதியில் உள்ள உகரம் கெடும் என்று மட்டும் கூறுகிறார்.

ஆயிரம் வருவழி உகரங் கெடுமே (நூற்: 392)

அவ்வாறு எழு என்பதன் உகரம் கெட்டால் 'எழ்' என்பது மட்டுமே நிற்கும். இதனுடன் ஆயிரம் சேரும்போது எழாயிரம் என்றே வரவேண்டும். ஆனால் ஏழாயிரம் என்று வரவேண்டுமானால் 'ஏழ்' என்பது நிலைமொழியாக வேண்டும். ஏழ் எனும் நிலைமொழி பத்து எனும் வருமொழிக்காக எழு என மாறுகிறது.

பின் இதனையே ஆயிரம் எனும் வருமொழிக்கு நிலைமொழியாக – அடிநிலைக் கிளவியாக ஏன் தொல்காப்பியர் கொள்ள வேண்டும்?

இடப்பொருளில் வரும்போது சொற்கள் 4ஆம் வேற்றுமை உருபு பெற்ற பின்னரே 7ஆம் வேற்றுமை உருபினைக்கொள்ளும். சான்றாக எனக்கு மேலே, பள்ளிக்கு எதிரே, வீட்டுக்குள்ளே. இந்நிலையில் திசைகளைக் குறிக்கப் பயன்படும் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, எனும் சொற்கள் கீழ், மேல், தென், வட எனும் வேர்ச்சொற்களுடன் 4ஆம் வேற்றுமை உருபு 'கு' புணர அமைந்திருப்பதாகக் கருதலாம். வட + கு → வடக்கு, தெ + கு → தெற்கு, மேல் + கு → மேற்கு, கீழ் + கு → கிழக்கு. எவ்வாறாயினும் திசைச்சொல் வேர்ச்சொல்லாக நிலவும். இதற்கு வடமேற்கு, தென்கிழக்கு, என்பனவற்றைச் சான்றாகக் காட்டலாம். அவ்வாறாயின் கீழ், மேல், தென், வட ஆகியவற்றை விடுத்து, புணர்ந்த சொல்லை மீண்டும் புணர்ச்சிக்குரிய சொல்லாக எடுத்துக்கொண்டு பின் அவற்றைப் புணர்ச்சி விதிகளின் மூலம் வேர்ச்சொல்லாகப் பழையபடி மாற்றுவது சிரமமான செயலென்றே துணிந்து கூறலாம்.

உறழ்ச்சியும் பொருள் வேறுபாடுகளும்

சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் என உறழ்வாக வருவதை,

புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை இரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும் (நூற்: 157)

எனும் நூற்பா கூறுகிறது. உறழ்ச்சி நிலையில் புணர்விதிகளால் பெறப்படும் சொற்களுக்குப் பின்னர் வந்த உரையாசிரியர்கள் வெவ்வேறு பொருள்களாகக் குறிப்பிடுகிறார்கள். 'சூரால் கோட்பட்டான்' என்று 3ஆம் வேற்றுமை உருபு ஏற்றும் 'சூரது கோட்பட்டான்' என்று 6ஆம் வேற்றுமை உருபு ஏற்றும் சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான் எனும் சொற்கள் புணர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. அவ்வாறே தொல்காப்பியர் குறிப்பிடும் தமிழ்க்கூத்து, தமிழக்கூத்து ஆகிய இரண்டும் உறழ்ச்சியாக வருகின்றன என்று கூறப்படுகிறது. ஆயினும் இவ்விரு சொற்களும் வெவ்வேறு பொருள்கொண்டிருப்பதாகவும் விளக்கப்படு கின்றன. இவ்வாறே தாய் என்னும் நிலைமொழி இயல்பாகப் புணரும் பாங்கினைத் (நூற்: 359) தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தாய்கை, தாய் செவி என வருவதாகச் சான்று கூறப்படுகிறது. ஆனால் தாய்ப்பால் என்பது புறநடையாக அமைகிறது என்றும் தாய்பால் என்பதற்கும் தாய்ப்பால் என்பதற்கும் பொருள் வேறுபாடு இருக்கிறது என்றும் விளக்கப்படுகிறது. உறழ்ச்சி விதிகளால் பெறப்படும் புணர்

சொற்களில் சில இத்தகைய பொருள் வேறுபாட்டினைக் கொண்டிருப்பது அவற்றின் சிறப்பான பயன்பாட்டினையே சுட்டுவதாகும்.

வீட்டுக்கு மேலே, அவனுக்கு எதிரே போன்ற சொற்களில் 7ஆம் வேற்றுமை வரும்போது 4ஆம் வேற்றுமை உருபு நடுவில் தோன்றுகிறது. வடமேற்கு, தென்மேற்கு, எனும்போது வட, தென், மேல், கீழ் ஆகியன திசைச் சொற்களின் வேர்ச் சொல்லாகவும், 4ஆம் வேற்றுமை உருபு பெற்று வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு எனும் திசைச் சொற்களாகவும் அமைகின்றன. இவ்விரு புணர்முறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட இடத்தையோ, திசையையோ சுட்டும்போது 'க்கு' எனும் 4ஆம் வேற்றுமை உருபு இடம்பெறுகிறது. அவ்வாறாயின் வட, தென், மேல், கீழ் ஆகியன வேர்ச்சொற்களாகக் கருதப்படும். இவ்வேர்ச்சொற்கள் தனித்து வரும்போது (வடக்கு, கிழக்கு) 4ஆம் வேற்றுமை உருபுடனும் அடைச்சொற்களாகப் பிற திசைச் சொற்களுடனும் இணையும்போது தனித்தும் (வடமேற்கு, தென்மேற்கு) இடம்பெறுகின்றன. 5 கோடியே 50 இலட்சம், நாலேகால் என எண்ணுப்பெயர்கள் வருவது போல வடக்கே மேற்கு, கிழக்கே தெற்கு என முன்பு கூறப்பட்டன. தற்போது 5 கோடி 50 இலட்சம் எனக் கூறுவது போலத் தெற்கு வடக்கு, கிழக்கு மேற்கு எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தொல்காப்பியரின் திசைப்பெயர் புணர்விதிகளை மீள் ஆய்வு செய்திட வேண்டும்.

இருதிசை புணரின் ஏயிடை வருமே (நூற். 431)

திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் உகரமும்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகாரமாகும்
தெற்கொடு புணரும் காலை யான (நூற்: 432)

எனும் இரு நூற்பாக்களும் இன்றைய சூழலில் எவ்வளவு பொருந்தும் என்றும், பயனுள்ளதா என்றும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

விதிகளின் சிக்கல் நிலை

செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும் (நூற்: 289)

இங்கு 'வேட்கை' எனும் சொல் 'அவா' எனும் சொல்லுடன் புணருவது பேசப்படுகிறது. வேட்கை என்பது விருப்பத்தைக் குறிப்பிடும் பொருளிலுள்ள 'வேண்' என்னும் வேர்ச்சொல் அடிப்படையில் பிறந்தது. தொல்காப்பிய நூற்பாவின்படி னகார இறுதி (நூற்பா. 303) டகாரமாகும்.

வாழ்க்கை, சேர்க்கை, படுக்கை போன்ற சொற்களின் அடிப்படையில் 'கை' என்பது பெயர்ச்சொல்லாக்க விகுதியாகக் கருதலாம். அவ்வாறாயின் வேண் + கை என்பதிலுள்ள நிலைமொழி ணகர ஒற்று டகர ஒற்றாக மாறி வேட்கை என மாறும். அவா எனும் வருமொழியுடன் நிலைமொழியாகப் புணர்நிலையில் பெறப்பட்ட வேட்கை எனும் சொல்லைவிட வேர்ச்சொல்லாகிய 'வேண்' எனும் சொல் புணருவதாகக் காட்டியிருந்தால் (வேண் + அவா → வேணவா) எனும் புணர்நிலைச் சொல் எளிதாகப் பெறப்பட்டிருக்கும். தொல்காப்பியர் 'வேண்' எனும் வேர்ச் சொல்லைவிடுத்து வேட்கை எனும் பெறப்பட்ட பெயர்ச் சொல்லை நிலை மொழியாகக் கருதுவது வியப்பாக உள்ளது.

அவ்வாறே 'உள்' எனும் சொல் அடிப்படையில் 'உண்டு' எனும் சொல் பெறப்படுகிறது. களிறு என்னும் வருமொழிக்கு உள் என்பது நிலைமொழியாக அமைந்தால் உள் + களிறு இயல்பாகப் பெறப்படும். அதனை விடுத்து 'உண்டு' என்பதை நிலைமொழியாகக் கொண்டு 'களிறு' எனும் வருமொழியுடன் புணர்ந்தால் புணர்விதிகள் இயல்பின்றிச் சிக்கலடைகின்றன.

'உண்டு' எனும் சொல் 'களிறு' எனும் சொல்லுடன் புணரும்போது நிலைமொழி இறுதி முற்றிலும் கெடப் பின்னர் ணகர ஒற்று ளகர ஒற்றாகத் திரிவதாகவும் குறிப்பிட வேண்டியுள்ளது. இத்திரிபு இயல்பான ஒலிப்பு முறைக்கு முற்றிலும் மாறானதாகும்.

உண்டென் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை யொற்றே ளகாரம் ஆதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான *(நூற்: 431)*

உண்டு எனும் சொல்லின் இறுதி கெட்டால் உண் களிறு எனப் பெறப்படும். அப்போது

'ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கே' *(நூற்: 303)*

எனும் நூற்பாவினாலும்,

வேற்றுமை அல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே *(நூற்: 309)*

எனும் நூற்பாவினாலும் உண் என்பதன் ணகர ஒற்று டகர ஒற்றாக வேண்டும். மாறாக 'உண்டு' என்பதில் முதலில் ண் + ட் ஆக மாறிய பின் வருமொழி இறுதி கெட்டால் 'உள் களிறு' எனும் சொல் பெறப்படும். தொல்காப்பியர்

மகர இறுதி கெட்ட பின்னரே ணகர ஒற்று, னகர ஒற்றாக மாறுகிறது என்று கூறுகிறார். ஆகையால் இப்புணர் விதியை 'உண்டு களிறு' என்பதற்கு மட்டுமே உரியதாக இங்கே கருதினால்தான் இப்புணர்ச்சி விதி நியாயப்படுத்தப்படும். புணர்நிலைகளில் நிலைமொழிச் சொல்லைச் சரியாகத் தீர்மானிக்காமல் புணர்ச்சியால் பெறப்பட்ட சொல்லை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு விதி படைக்க முற்படுவது சிக்கலை உருவாக்கும்.

ஈமும் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன (நூற்: 325)

வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும் சாரியை (நூற்: 330)

எனும் நூற்பா வேற்றுமையில் ஈம் எனும் நிலைமொழிக்கு, அக்கு எனும் சாரியை வருவதை உணர்த்துகிறது. இதனால் ஈம் + அக்கு + கொண்டான் எனும் தொடர் ஈமக்குக் கொண்டான் எனப் புணர்நிலையில் அமையும். பின்னர்க் 'குக்' எனும் அசை கெடுதல் நிகழ ஈமக் + கொண்டான் எனும் தொடர் பெறப்படும். இந்த அசை கெடலைத் தொல்காப்பியர் இங்கே விதியாகக் குறிப்பிடவில்லை என்றாலும் பிறிதோரிடத்தில் கூறியுள்ளார்.

அக்கின் இறுதிமெய்ம் மிகையொடும் கெடுமே (நூற்: 129)

என இதற்கு விதி புணரியலில் சொல்லப்பட்டுவிட்டது.

ஏனை எகினே அகரம் வருமே
வல்லெழுத்து இயற்கை மிகுதல் வேண்டும் (நூற்: 338)

எனும் நூற்பா "எகின்" எனும் நிலைமொழிச் சொல்லுடன் 'கால்' எனும் வருமொழிச் சொல் புணரும்போது அகரம் வருவதாகக் குறிப்பிடுகிறது. எகினக்கால் எனப் புணர்நிலை நிறைவாகும். அவ்வாறே அகரம் பெற்றுக் 'கன்' என நிலைமொழிச் சொல்லும், 'குடம்' எனும் வருமொழிச் சொல்லும் புணரும்போது 'கன்னக்குடம்' என வரும். மேற்கூறிய இவ்விரு புணர்முறைகளை மனதிற்கொண்டால் 'ஈம்' என்பது கொண்டான் எனும் வருமொழியுடன் புணரும் போது அக்குச் சாரியை வருவதற்குப் பதிலாக அகரமே தோன்றுவதாகக் கூறினால் 'ஈமக்கொண்டான்' என எளிதாக ஒரே விதி செயற்பாட்டுடன் புணர்நிலை நிறைவு பெறும். நன்னூலார் அக்கு என்பதை விலக்கி 'அ' சாரியை என்று இவ்விடங்களில் கூறுவதை இங்கே நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

திரிதல் கெடுதல் ஒற்றுதல்

திரிதல் என்பது ஓர் எழுத்து வேறொன்றாக மாறுவதைக் குறிப்பதாகும்.

அம்மி னிறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஙஞந வாகும் (நூற்: 130)

எனும் நூற்பா திரிதலுக்குச் சான்றாகும். இதனையே 'மகரம்' கெடுகிறது. பிறகு அவ்விடத்தில் 'ஙகரம்' வருகிறது எனக் 'கெடுதல்', 'மிகுதல்' என்று இரு கூறாகவும் காணலாம். விதி சிக்கனம் கருதியும் எளிமை கருதியும் ஒரு விதியாகத் திரிதலைக் கூறுதல் சிறப்பாக அமையும்.

வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை (நூற்: 301)

எனும் நூற்பாவில் தொல்காப்பியர் நிலைமொழி இறுதி 'ந்' எனும் மெய்யொற்று முழுதும் கெடுகிறது என்றும் பின்னர் அவ்விடத்தில் மெல்லெழுத்து வருகிறது என்றும் கூறுகிறார். 'ந்' எனும் மெய்யொற்று வருமொழி முதலெழுத்திற்கு இனமான மெல்லெழுத்தாக மாறுகிறது என்று ஒரு விதியாகக் கூறிவிடலாம். (வெரிந் + குறை → வெரிங்குறை)

ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே (நூற்: 303)

எனும் நூற்பாவில் ணகரம் டகரமாகத் திரிவதைக் குறிப்பிடுகிறார். ஆனால்,

உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகர மொற்றும் ஆவயி னான (நூற்: 241)

எனும் நூற்பாவில் ழகரம் உயிரொடும் கெட அவ்விடத்தில் டகரம் தோன்றும் என இரு விதிகளால் குறிப்பிடுகிறார். ணகரம் டகரமாகத் திரியும் என்று கூறிய தொல்காப்பியர் ழகரம் டகரமாகத் திரிவதை மட்டும் ழகரம் கெட்டு அவ்விடத்தில் டகரம் ஒன்றுவதாகக் கூறுதல் ஏன் என்று விளங்கவில்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் திரிதல் விதிகள் நமது தெளிவான ஆய்வுக்குரியன.

உயிர்கெடல்

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் உயிரெழுத்துகளாக இருக்கும் போது சில புணர்நிலைகளில் நிலைமொழி ஈறு கெடுவதாகவும் வேறு சில புணர்நிலைகளில் வருமொழி முதல் கெடுவதாகவும் கூறுகிறார்.

ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறா ககரமுனைக் கெடுதல் வேண்டும் (நூற்: 116)

....

இன்னி னிகர மாவின் இறுதி
முன்னர்க் கெடுத லுரித்து மாகும் (நூற்: 121)

அத்தி னகரம் அகரமுனை யில்லை (நூற்: 126)

போன்றவை வருமொழி முதல் உயிர் கெடுவதைக் குறிக்கும்.

......
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப (நூற்: 259)

போன்ற நூற்பாக்கள் நிலைமொழி ஈறு கெடுவதைக் குறிக்கும்.

மெய்யெழுத்து உயிரெழுத்தாகத் திரிகிறது எனத் தொல்காப்பியர் காட்டியிருப்பது இயல்பான ஒலியியல் திரிபிற்குச் சற்று முரணாகப்படுகிறது. 'யாம்' எனும் நிலை மொழியின் முதலெழுத்து ய் + ஆ எனப் பிரிக்கப்பட்டு ஆகாரம் கெட யகர மெய்யொற்று எகர உயிராகத் திரிந்து 'எம்' என மாறுவதாகக் காட்டப்படுகிறது. இவ்வாறு மெய்யொலி உயிரொலியாகும் இம் மாற்றம் வலிந்து மேற்கொள்ளும் ஒலித் திரிபாகக் கருதப்படும். ஆனால் யாப்பிலக்கணத்தில் 'ய்' எனும் மெய் ஒலிக்கு 'இ' எனும் உயிரொலி மோனையாகக் கருதப்படுகிறது.

செய்யுள் வழக்கிற்காகப் 'பொன்' எனும் சொல் 'பொலம்' என மாற்று வடிவம் பெறும் என்றும் பல, சில என்பவை பலாஅம், சிலாஅம் என்று வழங்கப்படும் (நூற்பா.214) என்றும் மாற்று வடிவங்களை ஏற்கும் தொல்காப்பியர் நீ என்பதற்கு 'என்' என்பதனையும் 'பத்து' என்பதற்குப் 'பதி' என்பதையும் மாற்று வடிவங்களாக ஏற்றுக் கொள்வதில் கோட்பாடு அடிப்படையில் சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை.

இயல்புப் புணர்ச்சி

புள்ளி ஈற்றுமுன் உயிர் தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே (நூற்: 139)

எனும் நூற்பா ஆல் + இலை எனும் சொற்கூட்டில் நிலைமொழி ஈற்று மெய்யும் வருமொழி முதலான உயிரும் புணரும் பாங்கினைச் சுட்டுகிறது (இதனை இயல்புப் புணர்ச்சி என்று இளம்பூரணர் சுட்டுகிறார்). ஆனால் இதனை இயல்புப் புணர்ச்சியாகக் கருத முடியாது. 'எலி + வலை' எனும் சொற்கூட்டு எவ்விதத் திரிதலும், கெடுதலும், மிகுதலுமின்றி இருத்தலையே இயல்புப் புணர்ச்சியாகக் கருதுவர். ஆனால் தொல்காப்பியர் தேன் என்னும் நிலைமொழி இறாஅல் வருமொழியுடன் புணரும்போது

இறாஅல் தோற்றம் இயற்கை யாகும் (நூற்: 344)

என்று குறிப்பிடுகிறார். இங்கே தேன் + இறாஅல் என்பது தேனிறாஅல் என வருகிறது.

இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும் (நூற்: 294)

எனும் நூற்பாவில் 'கோ' எனும் நிலைமொழி 'இல்' எனும் வருமொழியுடன் புணரும் முறை உணர்த்தப்படுகிறது. இங்கே 'கோஇல்' என்றே தொல்காப்பியர் காலத்தில் புணர்நிலையில் இருந்திருக்கலாம். ஆனால் 'தேன்இறாஅல்' என்பது 'தேனிறாஅல்' என்று அமைந்திருக்க வேண்டும். இதனை இயற்கையாகும் என்று கூறுவது சரியாகத் தோன்றவில்லை.

அதனோரற்றே

தொல்காப்பிய நூற்பாக்களில் கூறப்படும் வழிமுறைகள் எளிதில் புரிந்துகொள்ளுமாறும் மொழி அறியாதவர் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவும் அமைந்திருப்பதாகக் கருத வாய்ப்பில்லை.

'பல' என்னும் சொல்லின் அல்வழிப் புணர்ச்சியினைக் குறிப்பிட்டு,

'செய்யுள் கண்ணிய தொடர் மொழியில்'
பலநீட்டம் பெறுவதையும் (நூற்: 214)

'தொடர் இறுதியின் தம்முன் தாம்வரின்
லகரம் றகரமாக மாறுவதையும்' (நூற்: 215)

'வல்லெழுத்து வரும்போது இயற்கை உறழத் தோன்றும்' (நூற்: 216)

எனவும் குறிப்பிட்டுவிட்டு,

'வேற்றுமைக் கண்ணும் அதனோரற்றே' (நூற்: 217)

என்று குறிப்பிடுகிறார். இதற்கு முன்கூறிய நான்கு நூற்பாக்களைத் தொடர்பு படுத்தாது, 13 நூற்பாக்களுக்கு முன்புள்ள உயிர் மயங்கியலின் முதல் விதியினை யொட்டி 'அதனோரற்றே' என்பதைத் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது. அல்வழி பற்றிப் பேசிவிட்டுப் பின்னர் வேற்றுமை பற்றிப் பேசுவதால் வேற்றுமையின் முதல் நூற்பாவில் காணும் அதனோரற்றே என்பதை அல்வழிப் புணர்ச்சியின் முதல் நூற்பாவுடன் தொடர்புபடுத்த வேண்டும் என இலக்கணிகள் கூறலாம்.

உகர இறுதி பற்றிப் பேசிவிட்டு (நூற்: 255) பின் ஞநமவ இயையினும் உகரம் நிலையும் என்று (நூற்: 298) கூறியவுடன் நகர இறுதியாக இந்நூற்பாவிற்கு அடுத்து மேலுள்ள விதியோடு தொடர்புபடுத்தாது ஞகாரம் ஒற்றிய தொழிற்பெயர் நூற்பாவுடன் தொடர்புபடுத்துகின்றார். அதுவுமின்றி முதலில் வல்லெழுத்தும் ஞநமவ இவையும் வருமிடத்து அல்வழி வேற்றுமை ஆகிய இருவழியிலும் ஞகார ஈற்றுப்பெயரினைப் போன்று மேலே கூறிய இரு நூற்பாவுடன் தொடர்புபடுத்தி உரிஞுக்கடிது என்பது போல நகர இறுதிச் சொல்லான 'பொருநு' என்பது பொருநுக் கடிது எனவும், பொருநு ஞான்றது எனவும் வருமென விளக்கியுள்ளார். ஐகார ஈற்றுப் புணர்ச்சியில்,

திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன (நூற்: 287)

என்று குறிப்பிடுகிறார். ஐகார ஈற்றில் கூறப்பட்டுள்ள எந்த விதியையும் முந்து கிளந்தன்ன எனும் தொடரோடு இலக்கணிகள் தொடர்புபடுத்தவில்லை. மாறாக ஈற்றில் கூறப்படும்,

நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐயம் இன்றே (நூற்: 248)

திங்கள் முன்வரின் இக்கே சாரியை (நூற்: 249)

ஆகிய நூற்பாக்களுடன் 'முந்து கிளந்தன்ன' எனும் தொடரைத் தொடர்புபடுத்தி யுள்ளார். மகர ஈற்று நாட் பெயரும் 'அத்து', 'ஆன்' ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. (திங்கள் நாட்பெயர் புணர்ச்சிகளில் அத்து ஆன் சாரியை வருகிற பொதுமைக் கூறுகளை நாம் உணர்தல் வேண்டும்).

தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும் (நூற்: 385)

என்று கூறிவிட்டு,

தமிழென் கிளவியும் அதனோ ரற்றே (நூற்: 386)

எனும் போது தமிழ் என்னும் சொல்லும் முன்கூறியது போல அக்குச் சாரியை பெறும் என்று மேல் உள்ள நூற்பாவினைச் சான்று காட்டியுள்ளார். அதனோரற்றே என்பது ஓரிடத்து மேல் உள்ளதையும் வேறோரிடத்தில் பல நூற்பாக்களுக்கு மேலுள்ளதையும் இன்னொரு இடத்தில் மேலே உள்ள இரண்டு நூற்பாக்களை உள்ளடக்கியதாகவும் வந்திருக்கிறது. இத்தகைய மருட்கைதான் 'அவற்றோரற்றே, அவற்றோரன்ன என அமைந்துள்ள பார்வை நூற்பாக்கள் இலக்கணமறிந்தவர்க்கே புலப்படுமேயன்றி மொழி கற்க முற்படுவோருக்கு எளிதில் தெளிவாகா.

கூறியது கூறல்

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூற்: 218)

எனும் நூற்பா மரப்பெயர்களில் புணர்நிலைக்குப் பொதுவிதியாக அமைந்த பின்பு அதற்கு முரணின்றி ஒத்துப் போவதை மீண்டும் கூறுதல் தேவையற்றதாகும். கூறியது கூறல் எனும் முறையில்,

உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூற்: 244)

எனும் நூற்பா அமைந்துள்ளது. அவ்வாறே,

ரகார இறுதி யகார இயற்றே (நூற்: 363)

என்று கூறிவிட்டு யகர இறுதி வேற்றுமை,

மெல்லெழுத் தியையின் னகாரம் ஆகும் (நூற்: 368)

எனும் விதியமைத்தலின்,

சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும் (நூற்: 365)

என்பதைக் கூறியது கூறலாகக் கூறலாம்.

அசைகெடல்

ஆதன் என்னும் நிலைமொழி தந்தை எனும் வருமொழியுடன் புணரும் போது நிலைமொழியின் 'ஆ' காரம் தவிர னகர மெய்யொற்று தகரத்துடன் கெடுவதாகக் கூறப்படுகிறது.

ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரந் துவரக் கெடுமே (நூற்: 347)

எனும் நூற்பா ஆதன் தந்தை எனும் சொற்கூட்டு 'ஆதந்தை' என வருவதாக உணர்த்துகிறது. ஆதன் தந்தை என்பதில் நிலைமொழி ஈறாகிய யகரம் வருமொழி முதலாகிய தகரத்திற்கு ஏற்ப 'ந்' எனும் மென்கணமாக மாறுவது இயல்பு. அதனால் ஆதந்தந்தை என வரும் இச்சொற்றொடரில் 'தந்' எனும் அசை மூன்றாம் அசையாக உள்ளது. மேலும் முதலாவதாக உள்ள 'தந்' எனும் வேற்றுமை உருபுடன் வருவதில்லை. இதற்கு,

இன்னென வருஉம் வேற்றுமை உருபிற்கு
இன்னென் சாரியை இன்மை வேண்டும் (நூற்: 132)

எனும் நூற்பாவில் விதி கூறப்பட்டுள்ளது. அவ்வாறே வலுவின்றி ஒலிக்கப்பட்டு ஓரிசை இருமுறை தம்முன் தாம் வருகிறது எனும் அடிப்படையில் ஆதந்தந்தை → ஆதந்தை என வருவது முறையாகும். அது போன்றே சாத்தன் தந்தை என்பதும் சாத்தந்தை எனவரும். ஆனால் சிறப்புப் பெயர் முதலில் வரும்போது அத்தொடரின் (பெருஞ்சாத்தன் தந்தை) அசையழுத்தம் மாறுபடுகிறது. அதன் காரணமாக அசையழுத்தம் தெளிவாக அமைவதால் அசை கெடல் நிகழாது தடுக்கப்படுகிறது. இவ்வாறே ஈம் + அக்கு + குடம் என்பதிலும் ஈமக்குக் குடம் என்று திரிவதாக அமைதி கூற இயலும். யாப்பு மாத்திரை அளவு இவை பற்றித் தெளிவாகவும் நுண்மையாகவும் ஆராய்ந்துள்ள தொல்காப்பியர் அசை கெடல் எனும் ஒலிமாற்றத்தைக் கணக்கிடாது போனது ஏன் என்று விளங்கவில்லை.

அமைதி காணல்

தொல்காப்பிய நூற்பா சில சொற்களின் புணர்நிலைகளுக்கு விலக்காக இருப்பதை உணர்ந்து அச்சொற்களையும் நூற்பாவிற்குள் வலிந்து அடக்க முயற்சிக்கும் போக்கினை உரையாசிரியர்களிடம் காணலாம். 'அவன் வருவதற்கும் உரியன்' என்னுமிடத்து 'அவன் வராமைக்கும் உரியன்' என்று வினைச்சொல்லை விரித்து உரையாசிரியர்கள் பொருள் கூறியிருப்பதை நாம் அறிவோம்.

பூ என் ஒருபெயர் ஆஇயல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே (நூற்: 269)

எனும் நூற்பாவில் மிகுதலும் உரித்தே என்பதற்கு மிகையும் உரித்தே என உரை விளக்கம் தராது, பெயர்ச்சொல்லாகிய வல்லெழுத்து என்பதை

மனதிற்கொண்டு வல்லெழுத்து மிகுதலும் உரித்து என்பதற்கு மெல்லெழுத்து மிகுதலும் உரித்து என்று விளக்கம் தந்துள்ளனர். பூங்கொடி, பூக்கொடி எனப் புணர் சொற்கள் தமிழில் இருப்பதை உணர்ந்திருப்பதாலும் பூகொடி என வராது என்பதை உணர்ந்திருப்பதாலும் இவ்வுறழ்ச்சியினை மேற்கூறிய நூற்பாவிற்குள் அடக்க, உரையாசிரியர்கள் வல்லெழுத்து மிகுதலும் உரித்து என்பதற்கு மெல்லெழுத்து மிகுதலும் உரித்து எனக்கூறி அமைதி கண்டுள்ளனர். ஆனால் அதே நேரத்தில்,

> அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
> தக்கவழி அறிதல் வழக்கத் தான (நூற்: 271)

எனும் நூற்பாவிற்குத் தக்க வழி அறிந்த உரையாசிரியர்கள் 'பெறுதலும் உரித்தே' எனும் தொடருக்குப் 'பெறாமையும் உரித்தே' என்று விளக்கம் கூறவில்லை. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே என்பதற்குப் பிரிதொரு சாரியை பெறுதலும் உரித்துமாகும் என்றும் உரை காணவில்லை. 'ஊனக்குறை' என்றே சொற்கள் புணரும் என்பதை உணர்ந்திருந்ததால், அதற்கேற்ப இங்கே உரைவிளக்கம் அமைக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் புணர்முறைக்கான நூற்பாக்கள் பல பொதுமைக் கூறுகளைக் கொண்டு ஆக்கத்திறனுடைய விதிகளாக இருப்பதில் ஐயமில்லை. மொழியின் ஒலி, பொருள், தொடர் பற்றிய ஆழ்ந்த சிந்தனையுடனும் ஆய்வு நோக்குடனும் புணரியல் விதிகள் நுண்மையாக அமைந்துள்ளன. இருந்தாலும் அக்காலத்தில் வழக்கிலிருந்த பல சொற்களின் புணர்நிலைக்கு அமைதிகாணும் முகத்தான் கூறப்பட்டுள்ள வழிமுறைகளாகப் பல நூற்பாக்கள் உள்ளன. இதனால் விதிகளுடைய இயைபும், பொதுமைக் கூறுகளும், நிரலமைப்பும், ஆக்கத்திறனும் குன்றிப்போவதைத் தவிர்க்க இயலாது போய்விடுகிறது. மாற்றுருபன்களை ஏற்காது ஒன்றிலிருந்து ஒன்றினைப் பெறும் முயற்சியில் பல விதிகள் இயல்பு முறைக்கு மாறாக அமைகின்றன. புதிய சொல்லாக்கங்களை உள்ளடக்கிச் சொல்வளம் மிக்கதாய் தமிழ்மொழி விளங்கவேண்டும். அவ்வாறாயின் சொல்புணர் விதிகளும் பெருமளவு பொதுமைக் கூறுகளை உடையதாகவும் ஆக்கத்திறன் பெற்றதாகவும் இருப்பது அவசியமாகும். இந்நிலையில் தொல்காப்பியப் புணர்விதிகளையும் அவற்றின் செயல்திறன் குறித்தும் மறுபரிசீலனை செய்வது இன்றியமையாத ஆய்வாகும்.

தொல்காப்பியத்தில் உவம உத்தி வளர்ச்சி

இலக்கியத்தில் உவமையின் பயன்பாடு இரண்டு வகையில் அமைந்திருக்கின்றது. அறியாத ஒன்றைச் சற்றுத் தெளிவாக அறிந்து கொள்வதும், அறிந்திருக்கும் ஒன்றை உவமையாகச் சொல்வதுமாகும். சான்றாக, நரி எவ்வாறிருக்கும் எனும் போது 'அது நாயைப் போல இருக்கும்' என்று சொல்வது புலனல்லாத ஒன்று புலனாகும்.

அத்துடன், அலங்காரமாயிருந்து கேட்பவருக்கு இன்பம் பயக்கவும் உவமை பயன்படுகிறது. சான்றாக, முழு நிலவை வர்ணிக்கும் போது வீட்டு இட்டிலியை யாரோ வீசி எறிந்ததைப் போல் வானத்தில் நிலா இருக்கிறது எனும்போது இந்த உவமை கேட்பதற்குச் சற்று நயமாக இருக்கிறது; அப்படி இருப்பதாகப் படைப்பாளர் நினைக்கிறார். உவமை படைப்பாளனால் புலனல்லாதன புலனாகவும் அலங்காரமாய்க் கேட்போர்க்கு இன்பம் பயக்கவும் இலக்கியத்தில் அமைக்கப்படுகிறது.

சொல்லும் அதற்கான பருப்பொருளும் (Object) மொழியில் இணைந்து இடம்பெறுகின்றன. தாமரை போன்ற முகம் எனும்போது தாமரை என்ற சொல்லின் வழியாக அது குறிக்கும் பூ எனும் பருப்பொருளோடு முகம் என்றதொரு பருப்பொருள் ஒப்பாக்கப்படுகிறது எனலாம். இதில் 'போன்ற' என்ற உவம உருபு இல்லாமலும் 'தாமரை முகம்' எனலாம். உவமானம் உவமேயமாய் வரும் போதும் 'முகத்தாமரை' எனக் கூறப்படும். இது உருவகமாகும்.

சில சமயம், ஒரு சொல் தனக்குரிய பருப்பொருளைக் குறிக்காது அதனோடு தொடர்புடைய பிறிதொரு பருப்பொருளை விட்டுப் பிறிதொரு பருப்பொருளுக்கு ஆகி வருதல் உண்டு. அதனால் இதனை ஆகுபெயர் என்பர். நரி எனும் சொல் நரியாகிய விலங்கினைக் குறிக்காமல் நரி போன்ற குணமுடைய ஒரு மனிதனைக் குறிப்பதால் இது ஆகுபெயராகும். அதுபோன்றே கம்பன் எனும் சொல் கம்பன் எனும் பெயருடைய மனிதனைக் குறிக்காமல் அவன் படைத்த காவியத்திற்கு ஆகி வருவதுண்டு.

1. நரி வந்தான்
2. கம்பனைப் படித்தேன்



(வரைபடம் : 1)

இங்கே, நரி ஒரு மனிதனுக்கு ஆகி வந்தது. சில சமயம் ஒரு சொல் பிறிதொரு பொருளுக்கு ஆகிவரும்போது அந்தப் பிறிதொரு பொருளுக்கென்று ஒரு தனிச்சொல் இல்லாமலும் இருக்கலாம். சான்றாக,

3. வற்றல் உண்டான்
4. அவர் இனிப்பு வழங்கினார்.



(வரைபடம் : 2)

தொல்காப்பியர் ஒரு வேற்றுமை உருபு வேறொரு வேற்றுமைக்குரிய உருபாக மயங்கி வருவதை வேற்றுமை மயங்கியல் எனும் இயலில் குறிப்பிடுகிறார். ஒரு சொல் பிறிதொரு சொல்லுக்கு மயங்கி வருவதை ஒருவித மயக்கமாகப் பொருண்மை நிலையில் கொண்டு தொல்காப்பியர் இதனை வேற்றுமை மயங்கியலின் இறுதியில் விவரித்துள்ளார் எனலாம்.

ஒரு சொல் பிறிதொரு பருப்பொருளுக்கு ஆகிவரும்போது இரு பருப் பொருள்களுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு இருக்கலாம்; இல்லாமலும் இருக்கலாம்.

5. அவன் படத்தை உடைத்தான்
6. சீர்காழி பாடினார்

வாக்கியம் (5)இல் படம் என்பது படத்தோடு நேரடித் தொடர்புடைய கண்ணாடியைக் குறிக்கும். ஆனால் வாக்கியம் (6)இல் சீர்காழி என்பது கோவிந்தராசன் எனும் இசைக் கலைஞரைக் குறிக்கும். சீர்காழி அவர் பிறந்த ஊர் என்பது தவிர அவரோடு சீர்காழிக்கு வேறு எவ்வித நேரடித் தொடர்புமில்லை. நேரடித் தொடர்புடையதைப் பொருளோடு ஒட்ட வருதல் என்றும் நேரடித் தொடர்பற்றதைப் பொருளோடு ஒட்டாமல் வருதல் என்றும் வகைப்படுத்துவர்.

ஒரு சொல்லுக்கும் அது சுட்டும் பொருளுக்கும் உள்ள தொடர்புத் தூரத்தை இலக்கணிகள் வகைப்படுத்தியுள்ளனர். ஒரு சொல் பிறிதொரு பொருளுக்கு ஆகிவருதல் ஆகுபெயர்; ஒரு சொல் பிறிதொரு பொருளோடு தொடர்புடைய இன்னொரு பொருளைக் குறித்தால் அது இருமடி ஆகுபெயர். இச்சொல் இன்னொரு பொருளோடு தொடர்புடைய வேறொரு பொருளைக் குறிக்கும்போது இது மும்மடி ஆகுபெயராகும். இதுபோன்று நான்கு மடி ஆகுபெயரும் தமிழில் உண்டு. அதற்கு மேல் இருப்பதற்குச் சான்றுகள் கிடைத்தில.

ஆகுபெயர்

7. புளி சாப்பிட்டான்

பருப்பொருள் □ □

சொல் X X_1

Y Y_1

இருமடி ஆகுபெயர்

□ = □ = □

X X_1 X_2

புளிச்சுவை → புளி; பழம்; மரம்

8. புளி நட்டான்

மும்மடி ஆகுபெயர்

□ □ □ □

X → Y; X_1; X_2; X_3

9. கார் விளைந்தது

மேகம் → கார்; மழை; காலம்; நெல்

மும்மடி ஆகுபெயர்

□ = □ = □ = □ = □

X → Y; X_1; X_2; X_3; X_4

மேகம் = மழை = காலம் = நெல் = சாதம்

கார்

10. கார் உண்டான்

ஆகுபெயர் (மேகம்)

(அ) ஒருமடி	கார் பெய்தது	(மழை)
(ஆ) இருமடி காரில்	பூத்த கவின் மலர்	(காலம்)
(இ) மூன்றுமடி	கார் விளைந்தது	(நெல்)
(ஈ) நான்கு மடி	கார் உண்டான்	(சாதம்)

ஒன்றின் வாக்கிய அமைப்பே குறிப்பாகச் சொல்லைத் தொடர்ந்துவரும் வினைச்சொல்லே அதனை ஆகுபெயராகவும் அதன் மடித் தன்மை களையும் தீர்மானிக்கின்றது. கார் எனும் சொல்லுடன் உண்டான் எனும் வினைச்சொல் இடம்பெறும்போது கார் நான்குமடியாகவும், விளைந்தது எனும்போது கார் மும்மடி ஆகுபெயராகவும் வருகிறது. ஆனால் வற்றல், இனிப்பு எனும்போது அவற்றுடன் இயைந்துவரும் வினைச்சொல்லையோ தொடரியல் அமைப்பையோ பொறுத்து அவை தன்னியல்பாய் மாற்று ஆகுபெயர்களாக விளங்குகின்றன. வற்றல், இனிப்பு ஆகியன சொல் நிலையில் ஆகுபெயர்களாகும். ஆனால் படம், கார் ஆகியன தொடரியல் நிலையில் ஆகுபெயர்களாகும். இது முக்கிய வேறுபாடாகக் கருத வேண்டும்.

(அ) அவன் படத்தைப் பார்த்தான்

(ஆ) அவன் படத்தை உடைத்தான்

மேலும் இந்த ஆகுபெயர்கள் எல்லாம் தாம் ஆகிவரும் இன்னொரு பருப்பொருளோடு அடையாக வரும் தகுதியுடையன.

1. (ஆ) நரிப்பயல் வந்தான்
2. (ஆ) கம்பராமாயணம் படித்தேன்
3. (ஆ) அவன் படக் கண்ணாடியை உடைத்தான்
4. (ஆ) சீர்காழி கோவிந்தராசன் பாடினார்
5. (ஆ) புளிப்பழம் சாப்பிட்டான்
6. (ஆ) புளியஞ்செடி நட்டான்
7. (ஆ) கார் நெல் விளைந்தது
8. (ஆ) கார் சாதம் உண்டான்.

மேற்கூறிய வாக்கியங்களில் காணும் பெயரோடு கூடிய அடைச்சொற்கள் யாவும் பெயரை ஒழித்துத் தாமே தனித்து வந்து அப்பெயருக்கு ஆகிவரும் தகுதி

பெற்றவை. இவ்வாறு அடை ஒன்று பெயருக்கு (அது குறிக்கும் பருப்பொருளுக்கு) ஆகி வருவது ஆகுபெயராகும். இந்த ஆகிவரும் முறை பல்வகைப் படலாம். முன் சினைக்கும், சினை முதலுக்குமாக ஏழு வகைத் தோற்றுவாயில்களைத் தொல்காப்பியர் ஆகுபெயருக்குக் குறிப்பிட்டுள்ளார்.

சில சமயம் அடையோடு தலைச்சொல் இணைந்து இந்த இரு சொற்களும் ஒரு சொல் நீர்மை பெறுவதுண்டு. இரு சொற்கள் இணைந்த வழியும் ஆகுபெயர் தோன்றலாம்.

11. ஐந்திணை படித்தான்

இங்கே ஐந்து திணைகளைப் பற்றிப் பேசும் இலக்கிய நூலுக்கு ஐந்திணை ஆகி வருவதால் இதுவும் ஆகுபெயராகும். இதனை அடையடுத்த ஆகுபெயர் என்பர்.

ஆகுபெயர் எனும் சொல் ஆகு+பெயர் எனப் பிரிக்கப்படும். பெயர் எனும் சொல்லடியாக ஆகுபெயர் எனும் உவம உத்தி இலக்கணக் கலைச் சொல்லாக உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் ஆகுபெயர் எனும் உவம உத்தி சொல் தளத்தில் செயல்படுவதை உணரலாம். ஒரு சொல் தன்னியல்பாய் இன்னொரு பொருளுக்கு ஆகிவருவதும், ஒரு சொல், தொடரியல் சூழல் வழி இன்னொரு பொருளுக்கு ஆகிவருவதும் இரு சொற்கள் இணைந்து ஒரு சொல் போல இன்னொரு பொருளுக்கு ஆகிவருவதும் ஆகுபெயரின் தொடரியல் அமைப்புமுறை வகைப்பாடுகளாகும். பொருண்மை நிலையில், ஒரு சொல்லும் அது குறித்து இன்னொரு பருப்பொருளும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான், அச்சொல் அந்தப் பொருளின் (Object) பொருளில் (Meaning) ஏதாவது ஒரு கூறுக்கு ஆகி வரமுடியும்.



இரு சொற்கள் இணைந்து ஒரு நீர்மைத்தாகி இன்னொரு பொருளைக் குறிக்கும்போது, இரு சொற்களுக்குரிய பொருளுக்கும் அவை ஆகிவரும் பொருளுக்கும் நேரடித் தொடர்பின்றியும் அமையலாம். இவ்வாறு தொகை நிலையில் இரு சொற்களும் தாம் உணர்த்தும் பொருளுக்குத் தொடர்பில்லாத— அப்பாற்பட்ட — ஒன்றிற்கு ஆகிவருமாயின் அதனை அன்மொழித்தொகை எனக் குறிப்பிடுவர். அன்மொழித்தொகை எனும் சொல்லே இது பெயர் தளத்திலிருந்து விலகித் தொகைநிலையில் அமைகிற இலக்கணக் கூறு என்பதைத்

தெளிவுபடுத்துகிறது. மேலும் தொகை எனும்போது இரு சொற்கள் இருக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்படுகிறது. அன்மொழி என்பதால் ஒரு பொருளுக்குரிய சொல் அப்பொருளுக்கு அப்பாற்பட்ட அதாவது தொடர்பில்லாத பிறிதொரு பொருளுக்கு ஆகி வருகிற நிலையாகும். இது குறியீட்டு நிலை போன்றது.

12. பொற்றொடி வந்தாள்

இதில் (12இல்) பொற்றொடி என்பது பொன்னாலாகிய தொடியை அணிந்திருக்கிற குறிப்பிட்ட ஒரு பெண்ணைக் குறிக்குமானால் அது ஆகுபெயராகும். ஆனால் பொற்றொடி எனும் சொல் எந்தவொரு பெண்ணையும் குறிக்கும் என்ற முறையில் வந்தால் அது அன்மொழித் தொகையாகும். இந்த வேறுபாட்டினை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

13. மரக்காலால் நெல்லை அளந்தான்

சான்றாக மேற்கூறிய வாக்கியத்தில் மரக்கால் என்பது மரத்தால் ஆன ஒரு அளவுக் கருவி. இது குறிப்பிட்ட கொள்ளளவுக்கு ஆகி வருகிறது. இப்போது இந்த அளவுக் கருவி மரத்தால் செய்யப்படாமல் இரும்பால் தயாரிக்கப்படுகிறது. எனினும் இந்த அளவுக்கருவி இன்னும் மரக்கால் என்றே அழைக்கப்படுகிறது. இச்சூழலில் இரும்பால் ஆகிய அளவுக் கருவியைக் குறிக்கும்போது மரக்கால் எனும் சொல் அன்மொழித்தொகையாகும்.

ஆறுகால் வண்டு என்பதில் அடையோடு சொல் வருகிறது. இது வண்டினை மட்டும் குறிக்கிறது. அதுவும் ஆறு கால்களையுடைய வண்டினை மட்டுமே குறிக்கிறது. 4, 5 கால்களை உடைய வண்டுகளையோ அல்லது பறவைகளையோ குறிக்காததால் இதனை அன்மொழித் தொகையாகக் கருத முடியாது.

இளம்பூரணர் இரு பெயரொட்டு என்பதே அன்மொழித் தொகை என்று கூறுகிறார். சேனாவரையரும் கல்லாடனாரும் இளம்பூரணரைப் போன்ற கருத்துடையவர்களே. நச்சினார்க்கினியர் இருபெயரொட்டு என்பது வேறு அன்மொழித்தொகை என்பது வேறு என மிகத் தெளிவாகக் கூறுகிறார். இரு பெயருக்கும் அப்பாற்பட்ட பொருளைக் குறிக்காது அவற்றுள் இருப்பதொன்றையே குறிக்கும் ஆகுபெயர் என்று கூறி மக்கள் சுட்டு என்பது மக்களாகிய சுட்டு என்றாகி வருவதைச் சான்று காட்டி விளக்கியுள்ளார். அன்மொழித் தொகை இரு சொற்களுக்கும் அப்பாற்பட்டதொரு பொருளைக் குறிப்பது எனச் சிவஞானமுனிவரும் கூறுகிறார். கல்லாடனாரோ இந்த இருவேறு கருத்துக்களுக்கும் ஒவ்வாது படுத்தலோசை பட்டவழி அன்மொழித் தொகை என்றும் எடுத்தலோசை பட்டவழி ஆகுபெயரென்றும் ஏற்க இயலாப் புதியதொரு விளக்கத்தினை நல்கியுள்ளார்.

இது இதற்கு உவமை எனச் சொல் அளவில் பொருட்களைக் குறிப்பிட்டு ஒப்புமை காட்டிய நிலையிலிருந்து ஒரு செய்தியையே இன்னொரு நிகழ்வுக்குப் பிரதியாகக் கூறும் கருத்து நிலைக்கு உவமை உத்தி விரிவடையலாம். கருத்தாடல் (Discourse) நிலையில் கவிதையில் ஒரு இயற்கை நிகழ்ச்சியை வருணித்தல் மூலமாக வேறொரு செய்தியைத் தெரிவிக்க முடியும். இந்த உத்தி உள்ளுறை உவமமாகக் கருதப்படும். உள்ளுறையைத் தொடர் உருவகம் என்பார் தெ.பொ.மீ. செய்யுளில் தொடர் உருவகமாக வரும் இயற்கை வருணனை பாடலுக்கு உயிரூட்டிக் கவிதை நயத்திற்கு மெருகேற்றுகிறது. எனினும், நோக்கம் வருணனையில் இல்லை. அதன்வழி உள்ளுறைப் பொருள் ஒன்றினைக் கூறுவதாகும் (சிவலிங்கனார், ப.72).

கருத்தாடல் நிலையில், ஒரு நிகழ்ச்சி வருணிக்கப்படும்போது இந்த நிகழ்ச்சிக் கூறுகளோடும் செயல்களோடும் நாம் சொல்ல நினைத்தவை நேரிடையாக வெளிப்படுத்தும்படியும் எச்சம் எதுவுமின்றி அத்துடன் முற்றுப் பெறும்படியும் உள்ளுறை உவமம் அமைகிறது. சங்கப்பாடல்கள் பெரும்பாலும் தலைவன் தலைவி ஆகிய கதை மாந்தர்களின் கூற்றாகவே உள்ளன. ஆனால், இதில் வரும் இயற்கை வருணனைகளும் அப்பாத்திரங்களின் கூற்றுகளாகவே அமைகின்றன. இதனால் தலைவியின் கூற்றுச் செய்தி அவளறி கிளவியாகவும், தோழியின் கூற்று அவள் வாழும் நிலத்தைச் சார்ந்ததாகவும், தலைவர்களின் கூற்று அவர்களது நிலத்திற்குரியதாகவும் அமையலாம் என்று கூற்றினை வரன்முறைப்படுத்தியுள்ளனர்.

சங்கப்பாடல்களில் அந்தந்த நிலத்திற்குரிய முதல், கரு, உரிப்பொருளைக் கொண்டு திணை, துறை ஆகியன கருப்பொருளுக்கு முன் இயங்குகின்றன. இதனால் பாடல்களில் காணும் இயற்கை வருணனைகளும் இந்த வரன்முறைகளின் அடிப்படையில் கூறப்படுவதில் வியப்பேதுமில்லை. தெய்வத்தைத் தவிரப் பிற கருப்பொருள்களை (உணவு, மா, மரம், ஊர், பறை) நிலைக்களனாகக் கொண்டு சங்கப்பாடல்களில் உள்ளுறை அமைவது இயல்பே.

சங்கப் பாடல்களில் இயற்கை வருணனைச் செய்தி அமையும் பாட்டினைக் கொண்டு உள்ளுறையை வகைப்படுத்தினால் சில சமயம் ஓர் இயற்கை வருணனை மெய்ப்பாடுகளில் ஒன்றனை நகை தோன்றும் வண்ணம் அமையலாம். சில சமயம் ஒன்றைச் சுட்டிக்காட்டி அதன்மேல் இன்னொரு செய்தி உள்ளுறுத்திக் கூறப்படலாம். 'கரை சேர்வோம் கரும்பிற் பூக்கிற' செய்தியும் 'கரும்பு நடு பாத்தியில் களித்த தாமரை சுரும்புபசி களைகிற' செய்தியும் வருணனையாகக் கூறப்படும் இயற்கைச் செயற்பாடுகள். இவை வினைவழி வந்த உள்ளுறைகளாகும். உடனுறை சுட்டு, நகை, சிறப்பு என

அவை கூறப்படும் பாங்கிலிருந்து உள்ளுறை ஐந்து வகைப்படும். இந்த ஐந்து வகை உவமங்கள் வழியாகவும் செய்திகள் உள்ளுறுத்துக் கூறப்படுகின்றன.

உள்ளுறைத்துக் கூறப்படும் செய்தி அந்நிலத்துக்குரிய – உடன் உறையும் கருப்பொருள்களை நிலைக்களனாகக் கொண்ட இயற்கை வருணனை அடிப்படையில் கூறப்படுகின்றன. இதனால் உடனுறையும் உள்ளுறையும் ஒன்றென இணைத்துப் பேசுவோரும் உண்டு. தென் மாநிலத்தாராகிய கன்னடக்காரர், தெலுங்கர், மலையாளி, மதராஸ்காரர் ஆகிய அனைவரையும் மதராஸி என வட மாநிலத்தில் அழைப்பது போல இதனைக் கருதலாம். உள்ளுறை உவமத்தின் இலக்கணம் இரண்டு அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது. ஒத்துப்பொருள் முடிவது; இரண்டாவது உள்ளுறுத்தி இயைவது. அதாவது, பாடலில் கூறப்படும் உவமேயக் கூறுகளுடன் உவமானக் கூறுகள் முழுவதுமாக எச்சம் எதுவுமின்றி ஒத்துப் போய் முற்றுப்பெற வேண்டும். கூறப்படாத உவமானக் கூறுகளை உவமேயக் கூறுகளால் உய்த்துணர வேண்டும்.

கரும்புநடு பாத்தியிற் கலித்த தாமரை
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வன் ஈன்ற எம்முயங்கல்
அதுவே தெய்ய நின்மார்பு சிதைப்பதுவே (ஐங்.65)

தலைவி தலைவனிடம் புதல்வனைப் பெற்றதால் வயதாகிவிட்ட எம்மைத் தழுவ வேண்டாம் என ஊடல் கொள்கிறாள். அப்போது அவள் கரும்பு நடுகிற பாத்தியில் தானே முளைத்த தாமரை, வண்டுகளின் பசியைத் தீர்க்கும் நாட்டைச் சேர்ந்தவனே எனத் தலைவனை அழைப்பது ஓர் உட்கருத்து கொண்டதாகும். இங்கு வினை நிகழ்ச்சி பசி தீர்த்தலாகும்.

கரும்புநடு பாத்தி	=	இல்லம்
தாமரை	=	பரத்தை
சுரும்பு	=	தலைவன்
பசி தீர்த்தல்	=	காமப் பசியைத் தீர்த்தல்

இவ்வாறு பாடலில் கூறிய செய்திகளின் உட்கூறுகள் கூற நினைத்த செய்திகளின் உட்கூறுகளோடு முழுவதுமாக ஒத்துப்போய்ப் பொருள் முடிதலே உள்ளுறை உவமாகும். இந்தச் செய்தி வினையை நிலைக்களனாகக் கொண்டமைந்துள்ளது. தலைவி தலைவனின் தகாத செயலை நாசுக்காகவும் நாகரிகமாகவும் கூறிச் செல்வது உள்ளுறை உவமம் இடம்பெறுவதற்கான காரணங்களில் ஒன்றாகும்.

உள்ளுறை உவமச் செய்திகளில் தாமரை சில சமயம் தலைவனையும் தலைவியையும் பரத்தையையும் குறிப்பதுண்டு. அதுபோன்றே வண்டு, கன்று,

எருமை ஆகியன தலைவனுக்கு ஆகி வருவதுமுண்டு. இது இதனைத்தான் சுட்ட வேண்டும் எனும் ஒரு நிலையான ஒருங்கிணைப்பு இல்லாமல் கூறப்பட்ட செய்தியிலிருந்து பொருள்கோள் முறைக்கு ஏற்பப் பொருத்திப் பார்த்துக் கொள்ளும் நெகிழ்வுத் தன்மையினை இங்கே காணலாம்.

உள்ளுறுத்தி இருப்பதும் ஒத்துப் பொருள் முடிவதும் உள்ளுறையின் இரண்டு அடிப்படைக் கூறுகளாகத் தொல்காப்பியம் வலியுறுத்தியுள்ளதை நாம் மீண்டும் நினைவில் கொள்வேண்டும். கூறப்படும் செய்தியை நிலைக்களனாகக் கொண்டே வேறொரு செய்தி உணர்த்தப்பட வேண்டும். அப்படியொரு நிலைக் களன் இல்லையெனில் அது வெறும் பயனற்ற ஒருவரின் சிந்தனைத் திறனுக்கேற்ற தன்னிச்சையான கற்பனையாகும். இதனால் பயனொன்றுமில்லை.

ஒத்துப் பொருள் முடிதல் என்பது இருவகைகளில் மாறுபடலாம். பொருள் ஒத்துப் போகாமல் இருப்பது ஒருவகையாகும். இரண்டாவது வகை, ஒத்துப் போகாமல் இருப்பது பொருள் முடியாமல் எஞ்சி இருத்தல் என்பதாகும்.

பேச்சு வழக்கில் ஒருவர் 'அவள் ரொம்ப அழகாக இருக்கிறாள்' என்றவுடன், 'ஆமாம்; அவ ரொம்ப அழகுதான்' என்று கூறும்போது அப்பொருள் எதிர்மறையாக 'அவள் அழகில்லை' என்ற பொருள் உணர்த்தப்படலாம். இங்கே ஒருவர் சொல்லிய பொருளோடு உணர்த்தப்பட்ட பொருள் ஒத்துப்போகவில்லை. 'உளுந்து இருக்கிறதா' என்று கூறினால், 'பருப்பு இருக்கிறது' எனும்போது கூறப்பட்ட செய்தியைத் தாண்டி எஞ்சிய பொருளாக அதாவது பருப்பு இல்லை என்பது உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு கருத்தாடலில் கூறப்பட்ட செய்திக் கூறுகளோடு உணர்த்த விரும்பிய செய்திக் கூறுகளை ஒத்துப் பார்க்கும் உள்ளுறை நிலைக்கும் மேலாக ஒத்துப்போகாத ஒரு நிலையைத் தொல்காப்பியர் சிந்தித்துப் பார்த்து, அந்த ஒத்துப்போகாத பொருள் புறத்த எஞ்சி இருக்கும் நிலையே இறைச்சி என்கிறார். பொருந்திப் பார்க்கும் ஒப்புமை முயற்சி உள்ளுறைக்கும் இறைச்சிக்கும் பொதுவாகும்.

உள்ளுறையில் பொருந்தி முடிகிறது. இறைச்சியில் பொருந்தாது எஞ்சி புறத்தே இருக்கிறது.

'இறைச்சி தானே உரிப் புறத்ததுவே'

என்பதும்

'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமாருளவே,
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே'

என்று தொல்காப்பியர் கூறுவதும் இதுவேயாகும். 'உள்ள பொருள் ஒன்றனுள்ளே கொள்வதோர் பொருள்' என்கிறார் நச்சினார்க்கினியர். ஒரு பாடலில் உரிப்பொருள்களைக் கொண்டு ஒரு நிகழ்வு பேசப்படும்போது நச்சினார்க்கினியர் 'உள்ள பொருள் ஒன்றனுள்ளே கொள்வது' எனும் பொருளை ஒருமையில் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கது. கருத்தாடல் நிலையில் தொக்கி நிற்கும் கருத்தையே அவர் சுட்டுகிறார் எனலாம். எவ்வாறு உள்ளுறைச் செய்தி உரிப்பொருள் வழியே காட்டப்படுகிறதோ அவ்வாறே இறைச்சிச் செய்தியும் காட்டப்படுகிறது. உரிப்பொருள் வருணனையை இறைச்சியாகக் கருதுகின்றனர். இறைச்சிப் பொருள் அந்த வருணனைக்கு அப்பால் உள்ளது என்பதும் அது கவிதை நயப்பில் திறனுள்ளவர்க்கே புரியும் என்பதும் உண்மையாகும். 'கருப்பொருள் களனாகக் கட்டுரை பயின்ற பொருட்புறத்தனவாம் இறைச்சிப் பொருளணி' எனத் தொல்காப்பியத்திற்கு விளக்கமாக மாறனலங்கார நூற்பா அமைந்துள்ளது.

அம்ம வாழி தோழியாவதும்
வல்லா கொல்லோ தாமே அவண
கல்லுடை நன்னாட்டுப் புள்ளினப் பெருந்தோடு
யாஅம் துணைபுணர்ந்து உறைதும்
யாங்குப் பிரிந்து உறைதி என்னா தவ்வே (ஐங்.333)

இப்பாடலில் 'தலைவன் பிரிந்து போன வழியில் பறவைக் கூட்டம் துணைப் பறவைகளோடு உள்ளன. 'நாங்கள் துணைகளோடு இருக்கிறோம். நீ எப்படி தலைவியைப் பிரிந்து வாழ்கிறாய்' என்று தலைவனைக் கேட்டிருக்க வேண்டும் அந்தப் பறவைகள். 'அப்படிக் கேட்க அவை சிறிதும் வல்லமை இல்லாதவை போலும்' என்று தலைவி பேசுகிறாள். இதில் கூறப்பட்ட செய்தியை இறைச்சி என்பர்.

இனிய காதற்காட்சிகளால் மக்கள் மனத்தில் அன்புணர்வைத் தூண்டி விடுவதே இறைச்சியாகும் என்கிறார் தமிழண்ணல் (ப.57). ஆனால், இறைச்சிப் பொருள்வேறு தலைவனைப் பறவைகள் கேட்டிருக்க வேண்டும் என்று விழைகிறாள். ஆனால் கேட்கவில்லையே என்று ஏங்குகிறாள். தலைவன் திரும்பிவராததால் பறவைகள் கேட்கவில்லையென்பது உறுதியாகிறது. அதனால் பறவைகள் வல்லமை இல்லாதவை போலும் என்று கூறுகிறாள். இத்தகைய காதற் காட்சிகளைக் கண்ட பின்பும் பிரிதல் துயரைச் சுமந்துகொண்டு பொருள் ஈட்டும் பெரு நோக்கோடு போயுள்ள பெருமிதத்தில் தலைவி தன் தலைவனையே வல்லமை மிக்கவன் என்று சூட்சுமமாய் இங்கே சுட்டுகிறாள். அளியதாமே என்று பறவைகளைத் தலைவி சொன்னாலும் தலைவனது பிரிவால் தானே இரங்கத் தக்கவள் என்றும் உணர்த்துகிறாள்.

அதுபோன்றே கீழ்வரும் பாடலும் இறைச்சிப் பாட்டிற்கு முடிமணியாகப் பலராலும் சுட்டப்படுகிறது.

ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறிஅயல் மராஅத்தப்
பிள்ளை உள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே (குறுந்.92)

இப்பாடலில், மாலைப்பொழுதில் தம் குஞ்சுகளுக்கு இரை கொண்டு பறவை திரும்புதல் வருணிக்கப்படுகிறது. இந்த வருணனையை இறைச்சி என்பர். ஆனால், இதன்வழிப் பெறும் பொருள் வேறாகும். அதுவே இறைச்சிப் பொருளாகும். தமது அலகுகளில் வைத்துக் குஞ்சுகளுக்கு ஊட்டுவதற்கு இரை கிடைத்துவிட்ட காரணத்தால் ஞாயிறு மறையும் மாலைப் பொழுதில் வேகமாய் வானத்தில் பறந்து போகும் பறவைகளைச் சுட்டும் இப்பாடலுக்குரிய காமம் மிக்க கழிபடர் கிளவி யாற் பொழுது கண்டு இரங்கும் தலைவி சொல்லியது எனும் குறிப்பே இப்பாடலின் இறைச்சிப் பொருளை நமக்குப் பாடல் செய்திகளால் உணர்த்துகிறது.

தாய்ப்பறவை குஞ்சுகளுக்கு உணவு ஊட்டத் திரும்பி வருதல் என்ற காட்சியோடு தலைவன் தலைவிக்கு நலம் விளைவிக்கத் திரும்பி வருதல் என்ற காட்சியோடு பொருந்தும் ஒப்புமைச் செய்தி. ஆனால் ஒப்புமைக்கு அப்பால் தலைவன் திரும்பி வரவில்லையே என்ற யதார்த்த நிலை உள்ளது. பறவை தலைவனுக்கும், நெறி அயல் மராஅத்தப் பிள்ளை என்பது வீட்டில் பாதுகாப்பாக உள்ள தலைவிக்கும், உள்வாய்ச் செரீஇய என்பது நலன் விளைவித்தலையும் ஒக்கும். அளிய தாமே எனும் தொடரால் பறவைகள் இரங்கத் தக்கன என்று தலைவி கூறினாலும் தானே இரங்கத் தக்கவளாக இருக்கிற பேருண்மையைத் தலைவி உணர்த்தியுள்ளதே இறைச்சிப் பொருளாகும்.

உள்ளுறையும் இறைச்சியும் உள்ளுறுத்துப் பாடலில் அமைவதால் இவை இரண்டும் கருப்பொருள்களைக் கொண்டு பின்னப்பட்ட இயற்கை நிகழ்வுகளை நிலைக்களனாகக் கொண்டுள்ளன. உள்ளுறை என்பது பொருளோடு உள்ளுறுத்து இருந்து ஒத்துப் பொருள் முடிவது; எச்சமின்றி அமைவது. இறைச்சி உள்ளுறை போல உள்ளுறுத்து இருப்பது; ஆனால் அன்மொழி போலப் புறத்தே தோன்றும் பொருண்மை. சொல் அளவில் உவமை உத்தியாக அன்மொழித் தொகை இருப்பது போலக் கருத்தாடல் அளவில் உவமை உத்தியாக அன்மொழிப் பொருண்மையாக இறைச்சி விளங்குகிறது. இறைச்சியில் பொருளொன்று (meaning) கூறப்பட்ட செய்தியில் தொனித்திருப்பதால் (Inferred meaning) இதனை வடமொழியில் 'வளர்ந்து வகைப்பாட்டு'க் கோட்பாடாகிய தொனிக் கோட்பாட்டுடன் ஒப்பிடுகின்றனர். இறைச்சி தொனிப்பொருள் பெற்றிருக்கிறது என்பது சரியே.

ஆனால் தொனிக்கோட்பாடு தமிழில் இருந்தது என்பதைவிடத் தொனிக் கோட்பாட்டுக்கான எடுத்துக்காட்டுகள் சங்கப்பாடல்களில் மிகுதியாக உள்ளன என்பதே பொருத்தமாகும்.

உவமானம், உவமேயம், உவமஉருபு ஆகியவற்றைப் பயன்படுத்திச் சொல்தளத்தில் இதற்கு உவமை எனக் கூறுவது தொடங்கி உவமானமே உருவக நிலையிலிருந்து, உவமேயமாக வரும் ஒன்றால் பிறிதொன்றைக் குறிப்பிடும் ஆகுபெயர் நிலைக்கு வளர்ந்து, சொல் தளத்தைத் தாண்டி, தொகை நிலையில் ஒரு நீர்மைத்தாகிய இருசொற்களின் துணையோடு தொடர்பில்லாத பிறிதொன்றைக் குறியீடாக உணர்த்தும் அன்மொழி நிலைக்கு விரிந்து; பின்னர்க் கருத்தாடல் தளத்தில் ஒரு கருத்துக் கோவையை முன் வைத்து அந்நிகழ்வுவழிப் பிறிதொன்றை உள்ளுறுத்தி, ஒப்ப முடித்து உணர்த்தி, பின்னர் எச்சமாகிய போது அதனைப் பொருள் புறத்தாய நிலையில் உய்த்துணர வைத்திருக்கும் பாங்கினைத் தொல்காப்பிய உவமயியல் உத்தியின் பரிணாம வளர்ச்சி நிலைகளாகக் கருதலாம். இவையனைத்தும் தொல்காப்பியரின் நுட்பமான சிந்தனையில் வளர்ந்த செறிவுமிக்க அறிவார்ந்த வகைபாடுகளாகும்.

சேனாவரையரின் உரை நெறி : கிளவியாக்கம்

2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட தமிழின் முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கு 10 நூற்றாண்டிற்குப் பின்னரே அதாவது தொல்காப்பியம் எழுதப்பட்டு ஆயிரம் ஆண்டுகள் ஆன பிறகே உரைகள் எழுதப் பட்டுள்ளன. மூலநூலை ஆயிரம் ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்தனர் என்றும் அதன் மொழிநடை எல்லோருக்கும் எளிதாகப் புரியாத காரணத்தாலும் மூல பாடத்தை நன்கு விளக்கிடத் தம்மால் இயலும் என்ற தன்னம்பிக்கையாலும் உரை எழுதத் தொடங்கினர். தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஏழு உரையாசிரியர்களில் சேனாவரையரும் ஒருவர். இளம்பூரணரும், பண்டைய உரையாசிரியரும் நூல் முழுமைக்கும் உரை எழுதியுள்ளனர். சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடனார் ஆகியோர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை எழுதியுள்ளனர். நூற்பாக்களைப் பிரிப்பதிலும் சேர்ப்பதிலும் உரையாசிரியர்கள் வேறுபடுவதால், சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக்கள் உள்ளதாகச் சேனாவரையர் கருதி அதில் 375 இடங்களில் இலக்கண மேற்கோள்களைக் காட்டி உரை விளக்கம் அளிப்பதாகக் கூறப்படுகிறது.

'சொல்' என்பதற்கு இளம்பூரணர் 'எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுத்தும் ஓசை' என்று விளக்குகிறார். 'எழுத்தொடு புணர்ந்து' என்பதற்கு 'எழுத்தொடு கூடி' எனப்பொருள் கொண்டால் ஓரெழுத்து ஒரு மொழியாக வருவதற்கு இவ்விளக்கம் பொருந்தாது. எழுத்துக்கள் ஒன்றோடொன்று இயைந்து வந்து பொருள் குறிப்பது எனும் கருத்தில், 'சொல்'லாவது 'எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமை உடைத்தாய் பொருள் குறித்து வருவது' என்று விளக்குகிறார். 'பொருள் அறிவுறுத்தும் ஓசை' எனும் இளம்பூரணரின் விளக்கத்தால் சொல் என்பது வாயால் சொல்லப்படுவது என்று மட்டுமே விளங்கும். மொழி பேச்சாலும் எழுத்தாலும் இயங்குவது என்பதால் சேனாவரையரின் சொல்லுக்கான விளக்கம் எழுத்து மொழியையும் கவனத்தில் கொண்டு கூறப்பட்டதாகக் கருதலாம். ஆ, வா, போ, போன்ற ஓரெழுத்து ஒருமொழிகள் எழுத்தொடு புணர்தல் இன்மையால் சொல்லாதல் எய்தாது என்க என்று விளக்குகிறார். இதன் அடிப்படையில் பொருள் குறித்து வராத அசைநிலைச் சொற்கள் சொல்லாகா எனவும் குறிப்படுகிறார். ஓரெழுத்து ஒருமொழியும் சொல்லாகக் கருதப்பட வேண்டும் எனும் நோக்கில் 'எழுத்தொடு புணர்ந்து' என்பதற்கு 'எழுத்தாதல் தன்மையோடு புணர்ந்து' என்று சேனாவரையர் விளக்கம் கண்டுள்ளார்.

சொல், என்பது தனிமொழி தொடர்மொழி என இருவகைப்படும். இதில் தொடர்மொழி குறித்து விளக்கும் போது, சேனாவரையர் 'தொடர்மொழி' என்பது அவாய் நிலையானும் தகுதியானும் அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம் என உரைகண்டுள்ளார். 'அவாய் நிலை என்பது ஒரு சொல் தன்னொடு பொருள் முடித்தற்குரிய சொல்லைச் சார்ந்து நிற்பது' என்கிறார். 'நான்' எனும் எழுவாயின் வினைமுற்றும் தன்மை ஒருமை கொண்டதாக இருக்க வேண்டும். 'நான் வந்தேன்', 'நீ வந்தாய்' என்பன நான், நீ என்பதனோடு வந்தேன், வந்தாய் என்பன அவாவி நிற்றலாகும். தகுதி என்பது தகுதி நோக்கி இயைந்து நின்று பொருள் கூறுதல் என விளக்குகிறார். 'காக்கை கரைந்தது, மயில் அகவியது', ஆகியன தகுதி நோக்கி இயைந்து பொருள் கூறுவதாகக் கருதலாம்.

'ஈ, தா, கொடு' எனும் இரவின் எச்சம் இடம்பெறும் பாங்கும் தகுதியின் பாற்படும். 'காண், பார்' எனும் இரண்டு வினைகளும் 'பார்த்தல்' எனும் பொதுப் பொருளில் வந்தாலும் 'கனவு கண்டேன்' என்கிற தொடர் கனவு எனும் சொல் 'காண்' எனும் வினையை அண்மை நிலையால் பொருள் உணர்த்த வரும் தொடராகக் கருதலாம். 'அமைச்சர்', 'மந்திரி' ஆகிய இரு சொற்கள் இருந்தாலும் 'பிரதம' எனும் அடையுடன் 'மந்திரி' என்பதே சாலப்பொருந்தும். இது அண்மை நிலையான் தொடர்மொழி அமைகிற பாங்கு எனலாம். சேனாவரையர் தொடர் மொழிக்கு இலக்கண இயைபு, தொடரியல், பொருண்மையியல் அடிப்படையில் விளக்கம் அளித்திருப்பது அறிவார்ந்த மொழிச் சிந்தனை அவருக்கு இருந்ததனை உறுதிப்படுத்தும்.

'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' எனும் நூற்பாவிற்கு உரை கூறுமிடத்து, 'செப்பு என்பது வினாய பொருள் அறிவுறுப்பது' என்கிறார். "அறிய வேண்டுவதை அறிவுறுத்த வருவது வினா" என்றும் விளக்குகிறார். மொழியில் ஒரு உரையாடல் செவ்வென அமைய வினாவும் செப்பலும் ஒன்றோடொன்று வழுவின்றி இயைந்து வரவேண்டும் என்பதைச் சேனாவரையர் தமது வினாவுக்கும் செப்பலுக்கும் என விளக்கத்தில் ஒன்றையொன்று சார்ந்து இருக்குமாறு அமைத்துக் கூறியுள்ளார்.

இந்தச் சொல்லுக்கு இன்னதுதான் பொருள் என்று வரையறை விளக்கம் தருவதில் சேனாவரையர் சிறப்பு வாய்ந்து விளங்குகிறார். அதிகாரம் என்பது 'ஒருபொருள் நுதலிவரும் பல ஓத்தினது தொகுதி' என்றும், பண்பு என்பது 'பொறியால் உணரப்படும் குணம்' என்றும் உணவு என்பது 'பசிப்பிணி தீர நுகரப்படும் பொருள்' என்றும் நறுக்குத் தெரித்தாற் போல் விளக்கியுள்ளார். 'என்மனார்' எனும் சொல்லுக்கு இலக்கணம் கூறுவதில் சேனாவரையர் இளம்பூரணரிடமிருந்து மாறுபடுகிறார். இளம்பூரணர் 'என்மனார்' என்பது என்ப + மன் + ஆர் = என்மனார் ஆக வரும் என்றும் 'மன்' என்பது இசைநிறைக்க

வந்ததாகவும் கூறி 'என்மனார்' என்பது விகாரச் சொல் என்றும் கூறுகிறார். இதனை மறுக்கும் சேனாவரையர் 'மன' எனும் இடைச்சொல் கழிவு, ஆக்கம், ஒழியிசை ஆகிய மூன்று பொருளில் மட்டுமே வரும் என்று தொல்காப்பியத்திலேயே கூறப்பட்டிருக்கும் போது 'மன்' எனும் சொல் இசை நிறைக்காக வந்தது என்பது மூலநூல் கருத்துக்கு முரணாகிறது. மேலும் என்மனார் எனும்சொல் சான்றோர் செய்யுட்களிலும், நூல்களிலும் மிகுதியாகப் பயின்று வருகிறது. இதனால் இவ்வாறு மிகுதியாகப் பயின்று வருவதால் என்மனார் எனும் சொல் இயற்கைச் சொல்லாக இருக்க வேண்டுமேயொழிய விகாரச் சொல்லாகாது என்று சேனாவரையர் விளக்கம் அளித்துள்ளார்.

'அடை, சினை, முதல் என மூன்றும் முறை மயங்காது நடைபெற்றியலும் வண்ணச் சினைச்சொல்' எனும் நூற்பாவிற்குச் சேனாவரையர் தொடரியல் சிந்தனையோடு தெளிவானதொரு விளக்கத்தைத் தந்துள்ளார். 'செங்கால்நாரை' என்பது 'வண்ணச்சினைச் சொல்' வாய்பாட்டில் அமைந்த தொடராகும். இதில் 'செம' எனும் அடை வண்ணத்தைக் குறிக்கும். 'கால்' என்பது உறுப்பு; இது சினையாகும். நாரை என்பது பறவையைக் குறிக்கும் சொல்; இது முதல் சொல். இந்த முதற்சொல்லுக்கு அடையாகக் கால் எனும் சினைச்சொல் வர, கால் எனும் அடைக்குச் 'செம்' எனும் சொல் மேலும் ஒரு அடையாக இடம்பெறுகிறது. செம் என்பது நாரை எனும் முதற் சொல்லோடு தொடர்புடையதன்று.



(வரைபடம் : 1)

இவ்வாறு செங்கால் நாரை முறையாக வந்துள்ளது. 'கால் செந்நாரை' என்பது முறைமாறி வந்த வழுவாகும். ஆயினும் செய்யுளில் சில சமயம் செவி செஞ்சேவல் எனவும் வாய்வண்காக்கை எனவும் வண்ணச் சினைச்சொல் வாய்பாட்டு முறை மாறி வருவதும் உண்டு. இதில் 'பெருந்தோட் சிறு நுசும்பின் பேரமர்க்கண் பேதை' எனும் தொடர் மரபுமுறை மாறி வழுவி வந்ததாக இளம்பூரணர் சுட்டுவார். சேனாவரையர் இக்கருத்தை மறுத்துள்ளார். 'பெருந்தோட் சிறுநுசும்பின் பேரமர்க்கண் பேதை' என்பது பெருந்தோள் பேதை, சிறு நுசும்பின் பேதை, பேரமர்க்கண் பேதை ஆகிய அடை, சினை, முதல் வரிசையில் முறையாக வந்த தொடர்கள் மூன்றும் அடுக்கி வந்ததாக விளக்கியுள்ளார்.

அடை, சினை, முதல் எனும் வரிசையில் பேரமர்க்கண் நிலை மொழியாகவும் பேதை என்பது முதல்மொழியாகவும் அமைய, பின்னர்ச் சிறுநுசும்பின் எனும் அடை, சினைச் சொற்களுக்குப் பேரமர்க்கண் பேதை எனும் தொடரையே முதல் சொல்லாகக் கொண்டு, பின்னர் அவ்வாறே பெருந்தோள்

எனும் நிலைமொழிக்குச் சிறு நுசும்பின் பேரமர்க்கண் பேதை எனும் தொடர் வருமொழியாக அமைகிறது என்று தொடர்கள் அடுக்கி வந்து இடம் பெறும் தொடரியல் முறையினைச் சேனாவரையர் விளக்கியுள்ளார்.



(வரைபடம் : 2)

ஆனால் 'கருங்கோட்டு யானை' எனும் தொடரை முன்வைத்து, முதல் சொல்லொடு இரு அடைகளும் தொடர்பு கொள்ள இயலும் எனும் கிடைக்கோட்டுத் தொடரியல் அமைப்பிற்கு மாறாகப் பொருண்மையியல் அமைப்பில் அகவடிவில் பொருள் காணவேண்டிய சிறந்ததொரு சான்றினைத் தெய்வச்சிலையார் தந்துள்ளார்.



(வரைபடம் : 3)

ஒரு வாக்கியத்திற்கு அக வடிவம், புற வடிவம் என இருவடிவங்கள் உள்ளன எனும் மாற்றிலக்கண அடிப்படைக் கோட்பாட்டிற்கு வித்தாகிய 'கருங் கோட்டு யானை' எனும் தொடருக்கு விளக்கம் தந்த தெய்வச்சிலையாரின் மொழியியல் சிந்தனை நினைந்து நினைந்து பெருமைப்படுவதற்குரியதாகும்.

'எப்பொருளாயினும் அல்லது இல்லெனின்
அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்'

எனும் நூற்பாவிற்குச் சேனாவரையரின் உரை, பேசுவோரின் மன உணர்வின் அடிப்படையில் அமைந்திருப்பதாகக் கருதலாம். பிறிது பொருள் என்பதை ஒருவனால் கேட்கப்பட்ட பொருளுக்கு இனமாகிய பிறபொருள் என்று இளம்பூரணர் பொருள் கொண்டு ஒருவன் ஒரு பொருளைக் கேட்டவுடன் அது தன்னிடம் இல்லையெனில் அவன் கேட்டதற்கு இனமாகிய பொருளைக் கூறி 'இதுவல்லது இல்லை' எனப் பொருள் கூறினார். சேனாவரையரோ இனப் பொருளைத்தான் கூற வேண்டுமென்பது தொல்காப்பியரின் கருத்தாக இருந்திருக்கு மானால் பிறிது பொருள் கூறல் என்பதற்குப் பதிலாக 'இனப்பொருள் கூறல' என்று கூறியிருப்பார். அதனால், இனமாகிய பொருளைக் கொண்டு அல்லதில் எனும் வாய்பாட்டில் இல்லை என்று கூற வேண்டியது இல்லை. ஒருவன் கேட்ட பொருளல்லாத ஏதாவது ஒரு பிறபொருளின்கண் அல்லதில் எனும் வாய்பாட்டாற் கூறலாம் எனச் சேனாவரையர் கூறுகிறார்.

ஒருவன், இவனிடம் கேட்டால் பதில் கிடைக்கும் என நினைத்துக் கேட்பதால் பதில் கூறுபவன் இதுவல்லது இல்லை என்பது கேட்பவனின் முற் கருதுகோளினை (Presupposition) மறுப்பதாக அமைகிறது. இளம்பூரணர் உரையானது கேட்பவன் இவனிடம் கேட்டால் உரிய பதில் கிடைக்கும் எனும் முற்கருதுகோள்கொண்டு கேட்பதால் பதில் கூறுபவனிடம் கேட்ட பொருள் இல்லாவிட்டாலும், கேட்கப்பட்ட பொருளுக்கு இனமாகிய பொருள் கொண்டிருப்பான் என்பதால் பதில் கூறுபவனின் மனநிலையில் அதற்கு இணையாக இதுவல்லது (அதாவது நீ கேட்டதற்கு இணையாக இது) இல்லையெனப் பதில் கூறுவதாக உரை கண்டுள்ளார். உரையாடலில் கேட்பவனுக்கும் பதில் கூறுபவனுக்கும் இடையில் உள்ள முற்கருதுகோள் மாறாத நிலையில் இளம்பூரணரின் விளக்கம் அமைந்துள்ளது. கேட்ட பொருள் அல்லாத பிற பொருளாகிய இது தவிர இல்லை யென்பது கேட்போனின் முற்கருதுகோளுக்கு மாறாகவும் பதில் கூறுபவனின் முற்கருதுகோள் கேட்பவனின் முற்கருதுகோளுக்கு இயைபாக இல்லாத நிலையில் சேனாவரையரின் உரை விளக்கம் அமைந்துள்ளது.

'தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை யிலவே'

எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர் தகுதி என்பது 'ஒரு பொருட்குரிய சொல்லாகக் கூறாமல் வேறொரு தக்க சொல்லால் கூறுதல்' என்று குறிப்பிடுகிறார். 'இறந்தார்' என்பதற்குப் பதிலாகத் 'துஞ்சினார்' என்பதே இதற்கு விளக்கம் ஆகும். வழக்கு என்பது (இலக்கண மற்றும் பொருள்) காரணம் இல்லாமல் வழக்கத்தால் கூறப்படுவதாகும். வெண்மையான ஆடு எனும் பொருளின்றி 'வெள்ளாடு' என்பது ஒருவகைச் சாதியைச் சார்ந்த ஆட்டினைக் குறிக்கும். அந்த வகைச் சாதியில் உள்ள கறுப்பு நிற ஆடுகளும் வெள்ளாட்டுச் சாதி ஆடுகளாகக் கருதப்படும். இளம்பூரணர் தகுதியையும், வழக்கையும் தனித்தனியாகக் கருதித் தகுதி என்பது மங்கலம் கருதியும், இடக்கரடக்கல் கருதியும், குழூஉக்குறி காரண மாகவும் மூவகைப்பட்டு வழங்கப்படலாம் என்றும் இலக்கணத்தோடு பொருத்தியும், இலக்கணத்தோடு பொருந்தாமல் மருவியும் வழக்கு அமையலாம் என்கிறார். தகுதியால் வழங்கப்படும் சொல்லின் பொருளடிப்படையில் இளம்பூரணர் இவ்வாறு தகுதியையும் வழக்கையும் வகைப்படுத்தியுள்ளார்.

இலக்கணம் மற்றும் பொருள் இயைபின் அடிப்படையில் தகுதியுடைய சொற்களையும் இலக்கணப் பொருளமைதி குன்றிய வழக்கத்தால் வந்த சொற்களையும் ஒரு நீர்மையில் கொண்டு ஒன்றிற்கு மாறாக வேறொன்றைத் தகுதி மற்றும் வழக்கு நோக்கிக் கூறுவர் எனச் சேனாவரையர் கூறியிருப்பது பொருண்மை நிலையினைக் கைக் கொள்ளாது தொடரியலைப் பின்பற்றி உரை விளக்கம் தந்திருப்பதாகக் கருதலாம்.

'எடுத்த மொழி இனஞ்செப்பலும் உரித்தே' எனும் நூற்பாவிற்கு இளம்பூரணர் உலகில் கூறப்படும் சொற்றொடர்களில் இனம் செப்புவனவும் உண்டு, இனம் செப்பாதனவும் உண்டு எனக் கூறி 'மேலைச்சேரிக் கோழி

வென்றது’ எனில் ‘கீழைச்சேரிக் கோழி தோற்றது’ என்பது பெறப்படும் என்றும் இது இனஞ் செப்பலாகும் என்றும் விளக்கியுள்ளார். அவ்வாறே அந்தணர் வாழ்க! என்றால் மற்றவர்கள் ஒழிக! என இனம் செப்புவதில்லையென்றும் கூறியுள்ளார். மேலைச்சேரி கோழி வென்றது எனும் போது வேறொன்று தோற்றது என்பது பெறப்படும். ஆனால் அது கீழைச்சேரி கோழியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. சேனாவரையர் ‘மேலைச்சேரி கோழி வென்றது’ என்றதும் ‘கீழைச்சேரி கோழி தோற்றது’ என்பது ‘சொல்லாற்றலாலன்றி இன்றியமை யாமையாகிய பொருளாற்றலால் (பொருள் அடிப்படையில்) பெறப்பட்டது’ என்கிறார். இங்குத் தொடரியல் அணுகுமுறை இல்லாததைச் சுட்டிக்காட்டியதோடு நில்லாமல் பொருளாற்றல் அதாவது பொருண்மை அடிப்படையில் கூறுதல் இன்றியமையாமை அதாவது தேவையற்றது என்கிறார். அத்துடன் தொடரியல் அணுகுமுறையில் இவை இனம் செப்புவன என்றும் இவை இனம் செப்பாதன என்றும் வரையறைப்படுத்துதல் வழுவாகும் என்றும் கூறியுள்ளார்.

‘செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்’
‘ஆக்கந் தானே காரண முதற்றே’

எனும் நூற்பாக்களுக்குச் சேனாவரையர் செயற்கைப்பொருள் ஆக்கமொடு வரும் என்றும் ஆக்கச்சொல்லிற்குக் காரணம் கொடுத்துக் கூறவேண்டும் என்றும் அமைத்துள்ள இரு கருத்துக்களையும் ஒரே நூற்பாவில் கூறாது தனித்தனியே கூறியிருப்பது செயற்கைப் பொருளுக்கு ஆக்கம் எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு இன்றியமையாதது ஆக்கத்திற்குக் காரணம் கூறுவது என்பதை வலியுறுத்தத்தான் என்று விளக்கியுள்ளார். ஆக்கத்துடன் செயற்கைப் பொருளுக்கு ஆகிவரும் காரணமும் கொடுத்துச் சொல்லுக எனின், ஆக்கமும் காரணமும் செயற்கைப் பொருளுக்கே எனக் கருதப்படும். செயற்கைப்பொருளை ஆக்கமொடு கூறவேண்டும். அவ்வாறு கூறும்போது ஆக்கச் சொல்லுக்குத்தான் காரணம் கூறவேண்டும் என்பதால் ‘ஆக்கம் தானே காரண முதற்றே’ எனத் தனியே ஆசிரியர் (தொல்காப்பியர்) கூறியுள்ளதாக விளக்கம் அளித்துள்ளார்.

சேனாவரையர் வடமொழிப் புலமை கொண்டவராயினும், தமிழ்மொழி அமைப்பினை அதனிடை உள்ள மொழிக்கூறுகளின் அடிப்படையில் ஆராய்ந்து, தொடரியல் அணுகுமுறைக்கு முன்னுரிமை தந்து, அதே சமயம் பொருள் கெடாதவாறு தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு மிகச் சிறந்த மொழியியல் சிந்தனையோடு உரை கண்டுள்ளார்.

தமிழ் இலக்கியங்களும் இரட்டைவழக்கு நிலையும்

செய்நேர்த்தித் திறனுடன் கலையம்சம் கொண்டதாக ஒரு மொழியில் உருவாக்கப்படும் படைப்பு, காலங்கடந்து நிற்கும்போது இலக்கியமாகத் திகழ்கிறது. இவ்வாறு சங்க காலந்தொடங்கி இன்றுவரை பல்வேறு இலக்கியங்கள் தமிழில் படைக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல மறைந்தும் போயின; சில இருந்தும் மறைந்தன. ஒரு படைப்பிற்கான மொழிப் பயன்பாட்டினை ஆராய்வது நடையியல் ஆய்வாகும். சொற் பயன்பாடு, வாக்கிய அமைப்பு, பாடக் கட்டமைப்பு (Textual Structure) முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு நடையியல் ஆய்வு அமைகிறது. ஒரு கோட்பாட்டினைப் பயன்படுத்தி அதனை அடிப்படையாகக் கொண்டு ஒரு இலக்கியத்தினை ஆராய்வது உண்டு. மார்க்சிய அடிப்படையில் ஒரு நாவல் இலக்கியத்தை ஆராய்தல் இந்த வகையைச் சார்ந்ததாகும். அவ்வாறே தமிழ் இலக்கியங்களில் காணும் மொழிநடை பற்றிய ஆய்வினையே இங்குச் சுட்டுவதாகக் கருத வேண்டும்.

ஒரு சமூகத்தின் அடையாளக் குறியீடாக மொழி திகழ்ந்தாலும், பயன்பாட்டு நிலையில் அது ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவியாகவே அமைகிறது. அத்துடன் இலக்கியப் படைப்பிற்கும் பயன்படுகிறது. மொழி பல்வேறு சமூக வட்டாரக் கூறுகளைக் கொண்டு பல்வேறு மொழி வழக்குகளாக விளங்கும். பிராமணர் மொழி வழக்கு, பிராமணரல்லாதார் மொழி வழக்கு எனச் சமூக வழக்குகளும், சென்னை மொழி வழக்கு, செட்டிநாட்டு மொழி வழக்கு என வட்டார வழக்குகளும் தமிழ் மொழியில் பற்பலவாக இருக்கலாம். நாட்டுப்புற இலக்கியங்களின் பேச்சு வழக்குகள் வட்டார மற்றும் சமூகக் கூறுகளோடு அமைகின்றன. ஆனால் எழுதப்பட்ட இலக்கியங்களின் மொழிநடை எழுத்து வழக்கில் வட்டார, சமூகக் கூறுகளின்றி அமையும்.

'வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே' என்பதற்கு ஏற்ப, 'சங்ககாலந் தொடங்கி' இன்று வரை பெரும்பாலும் உயர்வழக்கில் சமூக வட்டாரக் கூறுகளைத் தவிர்த்த எழுத்து மொழி நடையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டன. ஆயினும் படைப்பாளர்கள் தமக்கே உரிய முறையில் சில சொற்களைச் சிறப்பாகப் பயன்படுத்துதல், சில இலக்கணக் கூறுகளை மட்டும் அடிக்கடி வழங்குதல், குறிப்பிட்ட வாக்கிய அமைப்பு முறை அதிகமாக இடம்பெறுதல் எனும் முறையில் படைப்பாளனுக்கு உரிய மொழிநடை இனங்காணப்படுகிறது. அக்காலத்தில் உரைநடைப் பயன்பாடும், உரைநடை வடிவமும் அருகி, எழுத்து மொழிப் பயன்பாடும் செய்யுள் வடிவமும் பெருமளவில் காணப்பட்டன.

ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து அச்சுமுறை பரவலாக்கப்பட்ட பின்னரே உரைநடை வடிவம் இலக்கிய அந்தஸ்து பெற்றது. உரையாசிரியர்களின் உரைகள் உரைநடையில் அமைந்திருந்தாலும் அவையும் எதுகை மோனையுடன் செய்யுள் நடையினைப் போன்று உயர் வழக்கிலேயே அமைந்திருந்தன.

ஐரோப்பியர் காலத்தில் உரைநடை இலக்கியமாகத் தோன்றிய நாவல் இலக்கிய வகைமைதான் உரைநடையினை முழு வீச்சில் பயன்படுத்தியது. நாவலில்தான் பல்வேறு வட்டாரச் சமூகக் கூறுகளுடன் கூடிய மொழிநடை பயன்படுத்தப்பட்டது.

தற்கால இலக்கியப் படைப்புகளில் மரபுசார் இலக்கியக் கட்டுரைகள், ஆய்வேடுகள், இலக்கிய நூல்கள், பத்திரிக்கைகள் ஆகியன பிறமொழி கலப்பினைத் தவிர்த்த சமூக வட்டாரக் கூறுகள் இல்லாத எழுத்து மொழி நடையினைப் பயன்படுத்துகின்றன. இதற்கு நேர்மாறாக வானொலி, தொலைக் காட்சி, கணிப்பொறி, தகவல் தொடர்பு சாதனங்கள், ஜனரஞ்சகப் பத்திரிகைகள், நாளேடுகள் ஆகியன பிறமொழிக் கலப்போடு கூடிய மொழி வழக்கினை இயல்பாகப் பயன்படுத்தி வருகின்றன. தமிழில் ஆங்கில மொழிக்கலப்பு அண்மைக்காலங்களில் மிகக் கூடுதலாகக் காணப்படுகிறது.

திரைப்படத்துறை, தொலைக்காட்சி ஆகியன 'உலக மயமாக்கல்' எனும் கொள்கையைக் காட்டி, ஜனங்கள் சுலபமாகப் புரிந்துகொள்வதற்கு வசதியாக உள்ளது எனக் கூறிப் பிறமொழிக் கலப்பினை அதிகமாக்கியுள்ளன. பத்திரிகை மொழிநடையில் பேச்சு வழக்கினைப் பயன்படுத்துதல், ஆங்கிலத் தொடர்களைத் தமிழ் வாக்கியத்தில் கலந்து எழுதுதல், பேசுதல், அத்துடன் ஆங்கில வாக்கியங்களையே தமிழில் எழுதுதல், நாளிதழ்களில் பத்திரிக்கைகளில் செய்தி மற்றும் கட்டுரைத் தலைப்புகளாக வழங்குதல் ஆகியன தற்போது அதிகம் காணப்படுகின்றன. சரண்டர், நாக் அவுட், என்கவுண்டர், கவுண்ட் டவுன் போன்று பல சொற்களும் 'ரன்' எடுத்தார், அவுட் ஆனார் போன்ற தொடர்களும், 'கெட் அவுட்' போன்ற வாக்கியங்களும் மிக இயல்பாகப் பத்திரிக்கைகளிலும் செய்தித்தாள்களிலும் (குறிப்பாக விளையாட்டுச் செய்திகளில்) இடம்பெறுகின்றன. படித்தவர்கள் எல்லாம் ஆங்கிலம் அறிந்த இருமொழியாளர்கள் என்பதால் ஆங்கிலப் பயன்பாடு அதிகமாகவும் இயல்பாகவும் இடம்பெறுகின்றது. ஆனால் பிரெஞ்சு, ஜெர்மன் போன்ற மொழிப் பத்திரிகைகளிலும் நாளேடுகளிலும் ஆங்கில மொழிக் கலப்பு மிக மிகக் குறைவாக இருப்பதாக, பெரும்பாலும் தவிர்க்கப்பட்ட நிலையிலேயே மொழிநடை அமைந்திருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மரபுசார் பத்திரிக்கைகள் சமூக வட்டாரக் கூறுகள் இல்லாமல், பிறமொழிக் கலப்பினை முழுமையாகத் தவிர்த்து எழுத்து மொழி நடையினைப்

பயன்படுத்துகின்றன. மரபு இலக்கிய நூல்கள், இலக்கியக் கட்டுரைகள் ஆகியன மேற்கூறிய எழுத்து மொழி நடையினைப் பயன்படுத்துகின்றன. மரபுசார் தமிழர்கள் பொது இடங்களில் மேடைப் பேச்சு, செய்தி வாசித்தல் போன்ற முறையான சூழல்களில், சமூக வட்டாரக் கூறுகளைத் தவிர்த்துப் பிறமொழிக் கலப்பில்லாத பேச்சு வழக்கினைப் பயன்படுத்துகின்றனர்.

தகவல் தொடர்பு சாதனங்கள், திரைப்படங்கள், நாளேடுகள், ஜனரஞ்சகப் பத்திரிக்கைகள், நாவல்கள், ஆகியவற்றில் பிறமொழிக் கலப்போடும், சமூக வட்டாரக் கூறுகளோடும் கூடிய தமிழ் மொழிநடையில் எழுதியும் பேசியும் வருகின்றனர். இதனால் எழுத்து நிலையிலும் பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு என இருவேறு வழக்குகள் உருவாகத் தொடங்கியுள்ளன.

தமிழில் இரட்டை வழக்கு (Diglossic) நிலை உள்ளது. அதாவது பேச்சு வழக்கு ஒரு விதமாகவும், எழுத்து வழக்கு வேறுவிதமாகவும் இருக்கும். இவ்விரு வழக்குகள் வெவ்வேறு சூழலில் பயன்படும். ஒன்று பயன்படும் சூழலில் மற்றொன்று இடம்பெறாது. பேச்சு வழக்கில் சமூக மற்றும் வட்டாரக் கூறுகளும் பிறமொழிக் கலப்பும் இடம்பெற்றிருக்கும். ஆனால் முறையான சூழலில் மேடைப் பேச்சு, இலக்கிய உரையாடல், செய்தி வாசிப்பு ஆகியன எழுத்து வழக்கு மொழி நடையில் அமையும்.

தற்போது பேச்சு வழக்கு மொழிநடையில் எழுதப்படும் சூழல்கள் விரிவடைந்து இலக்கியப் படைப்பிற்கும் உரிய மொழிநடையாக இடம்பெறத் தொடங்கியுள்ளது. அதாவது பேச்சு வழக்கு தாம் பயன்படும் சூழல்களை மெல்ல மெல்ல அதிகரித்துக் கொண்டே வருவதைக் காணமுடிகிறது. இதன் காரணமாக, பேச்சு வழக்கு எழுதப்படவும் அதன் எழுத்துச் சூழல் கூடுதலாகவும் தொடங்கியுள்ளது. இதனால் இலக்கியச் சூழலில் மரபு சார்ந்த இலக்கியப் படைப்புக்களில், கட்டுரைகளில் அவை தொடர்பான பேச்சு வழக்கில் இந்த எழுத்து வழக்கு எனப்பட்ட இலக்கிய வழக்கு பயனாகிறது எனலாம். இதனால் தமிழின் இரட்டை வழக்கு நிலை பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என வகைப்பட்ட முறையிலிருந்து சற்று மாறிப் பேச்சு வழக்கு, இலக்கிய வழக்கு எனக் கருதப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் சமூக வட்டாரக் கூறுகளுடன் கூடிய பிறமொழி கலந்த பேச்சு வழக்கின் பயன்பாடு பேச்சு மற்றும் எழுத்து நிலைகளில் கூடுதலாகிக் கொண்டே போகிறது என்பதும் தெரிய வருகிறது.

சங்ககால இலக்கியக் கொள்கை: ஒரு வியப்பூட்டும் புதிர்

சங்ககாலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. உலகளாவிய இலக்கியங்களோடு ஒப்பிட்டுப் பேசும் அளவிற்குத் தலைசிறந்த தமிழிலக்கியங்களான பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் செவ்வியல் (Classical Literature) இலக்கியத் தகுதிக்கும் மேலாக மிக உயர்ந்து நிற்கின்றன. பண்டைக்கால கிரேக்க இலக்கியங்களுக்குச் சமமாகவும் இன்னும் சற்று வலியுறுத்திச் சொன்னால், கிரேக்க இலக்கியங்களைவிடத் தரமும் நயமும் மிகுந்து உலகச் செவ்வியல் இலக்கிய வரிசையில் முதன்மையானதாகத் தமிழ் இலக்கியங்கள் தனித்தன்மையுடன் விளங்குகின்றன என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

சங்க இலக்கியங்களில் தனிப்பாடல்களாக 2381 பாடல்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 1862 பாடல்கள் அகத்திணைப் பாடல்களாகும். ஒட்டு மொத்தமாகச் சங்கப்பாடல்களைப் பாடிய 472 புலவர்களில் அகத்திணையில் மட்டும் பாடிய புலவர்கள் 378 பேர்கள். இந்த 378 பேர்களில் 23 பேர் பெண்பாற் புலவர்கள் (சரளா ராசகோபாலன், 1994:18). சங்க காலப் புலவர்கள் எல்லோரும் பல்வேறு பகுதிகளைச் சார்ந்தவர்கள். அதாவது, 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்தில்' நிலவிய பல்வேறு நிலப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள். இவர்களில் மதுரை எனும் அடைமொழி கொண்ட புலவர்கள் 38 பேர்கள். மதுரை அறுவை வாணிகன், மதுரைக் கணக்காயனார், மதுரைக் கூத்தனார், மதுரைப் போத்தனார், மதுரை வேளாளன் என அவர்களின் பெயர்கள் அமைந்துள்ளன (கையேடு: 2வது உலகத் தமிழ் மாநாடு; 1968:17).

மதுரை எனும் அடைமொழி கொண்ட இவர்கள் மதுரையைச் சுற்றியுள்ள ஊர்களில், அல்லது மதுரையில் வாழ்ந்தார்கள் என்று கருதிக் கொள்ளலாம். ஆனால் இவர்களைத் தவிர ஏனையோர் சேர, சோழ நிலப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள். அத்துடன் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தி வந்தவர்கள். கூல வாணிகர், கொல்லர், கணியர் எனப் பல தொழில் புரிந்தோர் தமக்குள்ள இலக்கிய ஆர்வத்தினால் சங்க காலத்தில் பாட்டெழுதி வந்திருக் கிறார்கள். சங்க காலப் புலவர்கள் சிலரின் பெயர்களுக்கு முன்னால் காணும் அடைமொழிகளே இதனை நமக்கு உணர்த்தும். சான்றாக, கூலவாணிகன் மகன் சாத்தனார், கொல்லன் அழிசி, கணியன் பூங்குன்றன் முதலியன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழகத்தில் மக்கள் தொகை எவ்வளவு இருந்திருக்கக்கூடும்? இன்றைய தமிழக மக்கள் தொகையினை மனத்தில் கொண்டு அக்காலத்திய மக்கள் தொகையினைப் பின்னோக்கிக் கணக்கிட்டுப் பார்த்தால், அது ஒரு சில இலட்சங்களைத் தாண்டுமா என்ற ஐயப்பாடு எழுகிறது. மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட சங்ககாலத் தமிழகத்தில் 2381 புலவர்கள் இருந்தார்கள் என்பதும் இதில் 23 புலவர்கள் காதலைப் பேசும் அகத்திணையினை மட்டும் பாடிய பெண்பாற் புலவர்கள் என்பதும் வியப்பாக உள்ளது.

கம்பர் காலத்தில் கம்பர் ஒருவர்மட்டுமா புலவராகத் திகழ்ந்திருப்பார்? அவரைப் போல இன்னும் பலர் வாழ்ந்திருப்பார்கள். ஆனால், இராமாயணம் என்ற அரியதொரு காவியப் படைப்பால் காலத்தைக் கடந்து நமக்கு இன்னும் தெரிந்தவராகக் கம்பரை மட்டுமே காலம் நமக்குக் காட்டிக் கொண்டு வருகிறது. பாரதியின் காலத்தில் பல்வேறு கவிஞர்கள் வாழ்ந்தார்கள் என்றாலும் பாரதி மட்டுந்தானே தலைமுறைகளைத் தாண்டித் தனித்தன்மையோடு நிற்கிறான். அப்படியானால் சங்க காலத்தில் மிகக்குறைந்த மக்கள் தொகை கொண்ட தமிழகத்தில் 2381க்கும் மேற்பட்ட புலவர்கள் பலர் வாழ்ந்திருக்க வேண்டும். இந்தச் சங்க காலத் தமிழகத்தின் படைப்பாற்றல் திறன் நமக்கு வியப்பளிக்கிறது.

சங்க காலத்தில் சாதாரண மக்கள் நாள்தோறும் பயன்படுத்தும் பானைகளில்தான் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன என்ற அகழாய்வு உண்மையினை நாம் அறிவோம். பல்வேறு பகுதிகளில் மேற்கொண்ட அகழாய்வுகளில் எழுத்துக்களும் சித்திரங்களும் தீட்டப்பட்ட பானை ஓடுகளே அதிகம் நமக்குக் கிடைத்திருக்கின்றன. நாள்தோறும் பயனாகும் பானைகளில் எழுத்துகளால் அடையாளமிடப்பட்டிருந்த அகழாய்வு உண்மையானதே. அப்படியானால் அக்காலத்தில் சாதாரண மக்கள்கூட எழுதப்படிக்கத் தெரிந்தவர் களாக இருந்தார்கள் என்ற கூற்றினை உறுதி செய்கிறது. சங்க காலத் தமிழகத்தில் நிலவிய கல்வி நிலையின் மேன்மை நம்மை வியக்க வைக்கிறது.

பண்டைத் தமிழகம் பரந்துபட்ட பூமி. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகமாக' இருந்தது. அந்தக் காலத்தில் இப்போதிருப்பதுபோல் போக்குவரத்து வசதி, நிச்சயமாக இல்லை. மக்கள் தொடர்பு வசதிகளும் அதிகம் இல்லை. பெரும்பாலும் நடைப்பயணமாகவும் சிலசமயம் குதிரை, தேர் இவற்றின் துணையோடும் பயணித்துள்ளனர். பாதை வசதிகளும் பயண வசதிகளும் இல்லாத அக்காலத்தில் சான்றாக, கரூரிலிருந்து திருச்சி செல்வது என்றால் அது பல நாள் பயணமாக அமையும். வடவேங்கட எல்லையிலிருந்து குமரிமுனைக்குச் செல்வது ஒருவரின் வாழ் நாள் பயணமாகக் கூட அமைந்து விடலாம்.

தமிழகத்தின் பரந்துபட்ட நிலப்பரப்புகளில் ஆங்காங்கே புலவர்கள் தமக்குள் அதிகத் தொடர்பும் சந்திக்கிற வாய்ப்பும் இன்றித் தனித்தனியே வாழ்ந்திருந்து இலக்கியப் படைப்புக்களில் ஈடுபட்டார்கள் என்ற அடிப்படை உண்மையினை நாம் மனதில் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்

சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆழ்ந்து நோக்கினால் இப் படைப்புகள் அனைத்தும் ஒருவித இலக்கியக் கொள்கைகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டு உருவாகியிருக்கிற உண்மை விளங்கும். அகம், புறம் என முதல்நிலையில் சங்க இலக்கியங்கள் வகைப்படுகின்றன. அதில் 'சுட்டி ஒருவர் பெயர் கூறாத வரன்முறையுடன்' அக இலக்கியங்கள் அனைத்தும் அமைந்திருக்கின்றன. முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை ஐவகை நிலப்பகுதிகளாகப் பிரித்திருக்கும் பாங்கு புலனாகிறது. காதல் வாழ்வின் முழுச் செயற்பாட்டினைக் களவு, கற்பு என்றும் களவு ஒழுக்கத்தை இரங்குதல், இருத்தல், கூடுதல், ஊடுதல், பிரிதல் எனும் ஐந்து பெரும் படிநிலைகளிலும் காட்டியிருப்பதை உணரலாம். ஒவ்வொரு அக ஒழுக்கமும் ஒரு குறிப்பிட்ட நிலத்தில் நிகழ்வதாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என உணர்ந்து ஐந்து நிலத்திற்கும் ஐந்து வகை ஒழுக்கத்தை வகைப்படுத்தியிருக்கிற இலக்கிய வரன்முறையினை நம் அக இலக்கியங்களில் காண முடிகிறது.

அதுபோன்றே, காலம், பொழுது, உணவு, மரம், பூ போன்று எல்லா இயற்கைப் பொருள்களிலும் சிறப்பானவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை இன்னின்ன நிலத்திற்கு இவை உரியன என ஒழுங்குடன் வரன்முறைப்படுத்தி யிருப்பதை அக இலக்கியங்கள் வழி அறிகிறோம். 'எள்ளிலிருந்து எண்ணெய் எடுப்பதுபோலத் தொல்காப்பியம் நமது அக இலக்கியங்களிலிருந்து இந்தச் செய்திகளையெல்லாம் தொகுத்து எடுத்து வகைப்படுத்தி நமக்குப் பொருளதிகாரத்தில் வழங்கியிருக்கிறது. இதனைக் இக்கட்டுரையின் பின்னிணைப்பில் உள்ள அட்டவணை நன்கு விளக்கும்.

இந்த அட்டவணையில் முதல், உரி, கருப்பொருள்களாகச் சுட்டி யிருப்பவை மட்டுந்தானா ஒவ்வொரு நிலத்திலும் காணப்படும் பொருள்கள்? உணவு, தொழில் என்பதுபோல விளையாட்டு வகைகள், ஆடை அணிகலன்கள், வீட்டு அமைப்புமுறை, போர்க்கருவிகள் போன்று பல்வேறு பொருட்களை இன்னும் வகைப்படுத்தியிருக்கலாம். அத்துடன் ஒரு நிலத்திற்கு உரியனவாகக் கூறப் பட்டவை மற்றொரு நிலத்தில் இருப்பதில்லையா! கார்காலமும் மாலைப்பொழுதும் முல்லை நிலத்திற்கு மட்டும்தான் உரியனவா! மழை எல்லாப் பகுதிகளிலும் பெய்யுமே! மற்ற காலமும் பொழுதும் அங்கு இல்லையா? விடியலும் நண்பகலும் மாலையும் இரவும் எல்லா நிலத்திலும் உண்டு. ஆயினும் முல்லை நிலத்திற்குக் கார்காலமும் மாலைப்பொழுதும் சிறப்புக் கருதி உரியனவாகக் கூறப்பட்டுள்ளன.

சங்க காலப் புலவர்கள் தலைவன் தலைவி பற்றிய அகச் செய்தியைக் கூற வேண்டுமானால், அதுவும் அதை முல்லை நிலப் பின்னணியில் கூற வேண்டுமானால் தலைவனுக்காகத் தலைவி காத்திருக்கும் கருத்தமைவு கொண்ட உள்ளடக்கத்தைப் (Thematic Content) பாடுபொருளாக வைப்பது சிறப்பாக இருக்கும் எனக் கருதினார்கள். அத்துடன் இந்தக் காத்திருப்பு கார்காலத்தில் நடப்பதாகவும் அதிலும் சிறப்பாக மாலைப்பொழுதில் நிகழ்வதாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும் என்றும் கருதினார்கள். அதனால் அந்த இருத்தல் ஒழுக்கத்தையும் கார்காலத்தையும் மாலைப்பொழுதையும் முல்லை நிலப்பகுதிக்கு உரியனவாக வரன்முறைப்படுத்திக் கொண்டு தம் அக இலக்கியப் படைப்புக்களை உருவாக்கினார்கள்.

ஒரு திரைப்படத்தில் காதல் காட்சியெனில், நீரோடை, வயல், தோப்பு, பூங்கா போன்ற பகுதிகள் காதலன் காதலி ஆடி மகிழ்வதற்குரிய இடங்களாக எவ்வாறு உருவாக்கம் செய்து கொண்டிருக்கிறார்களோ அதுபோலச் சங்க இலக்கியங்களிலும் காட்சிப் பின்னணிகளுக்கு முதல், உரி, கருப் பொருள்களை வகைப்படுத்திப் பின்னர் இந்த வகைப்பாட்டின் நெருக்கத்தால் இதற்கு இது என்று அமைத்து விடுகிற உறவுமுறையால் இப்பொருள்களைக் குறியீடுகளாகவும் பயன்படுத்தியுள்ளனர். கற்பு என்றால் கண்ணகி என்று மரபாகத் தொடர்புபடுத்திப் பின்னர்க் காலப்போக்கில் கண்ணகி என்னும் சொல் கற்புக்குக் குறியீடாக மாறுவதுபோலச் சங்க இலக்கியப் பாடல்களில் பல கருப்பொருள்கள் கருத்தமைவுக்குக் குறியீடாக (Symbol for Thematic Content) மாறியுள்ளன.

சங்க இலக்கியங்களில் முல்லை என்பது கற்புக்கு ஓர் குறியீடாக இருப்பதை ‘முல்லை சான்ற கற்பினள்’ எனும் தொடர் உணர்த்தும். அப்படி யானால் கூடுதல், பிரிதல், ஊடுதல் போன்ற பல்வேறு நிலைகளாகிய அக உணர்வுகளைப் பாடுபொருள்களாக அமைத்துப் பின்னர்ப் பாடல்கள் படைக்கும் போது அவற்றிற்கே சிறப்பாக உரியன இவை இவை என்றும் இவற்றைப் பின்புலமாகப் பயன்படுத்திப் பாட்டெழுதுவதே ஏற்புடையது என்றும் பின்னர் அனைத்துப் புலவர்களுக்கும் இது மரபாக மாறிவிட்டது என்றும் நாம் அறிகிறோம்.

சங்க காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாத சூழல்; மக்கள் தொடர்பு சாதனங்கள் இல்லாத காலம்; ஒருவருக்கொருவர் அடிக்கடியும் உடனடியும் தொடர்புகொண்டு செயல்பட இயலாத நிலையில் தனித்தனியாகப் பல்வேறு பகுதிகளில் புலவர்கள் வாழ்ந்திருந்தனர். சங்கம் என்றதோர் அமைப்பு இருந்தாலும் அது ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது ஊரில் வாழ்ந்த அல்லது அந்தப் பகுதிக்கு அருகாமையில் உள்ள ஊர்களில் வாழ்ந்த புலவர்கள் ஒன்றுகூட வாய்ப்பாக இருந்திருக்கலாம். ஆனால், தமிழகத்தின் முழுமையையும் இணைக்கும் அமைப்பு, தொடர்பு சாதனங்கள், போக்குவரத்து வசதி முதலியன சங்க காலத்தில் நிச்சயமாக இல்லை. சங்க இலக்கியங்களில் காணும் பாடல்கள் தமிழகத்தின்

பல்வேறு பகுதிகளில் வாழ்ந்த புலவர்களால் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும்.

அப்படியானால் சங்கப் பாடல்களில் காணும் அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் இந்த முதல் கரு உரிப்பொருள்களுக்குரிய வரன்முறைகளை ஏற்று அமைந்திருப்பது எப்படி சாத்தியமாகும்? பொதுவாக, இரண்டு தமிழ்ப்புலவர்கள் இருந்தால் மூன்று சங்கங்களைத் தோற்றுவிக்கிற அளவு தலைநிமிர்வு உடையவர்களாகவும் தன்னிச்சையாகச் செயல்படுகிறவர்களாகவும் இருக்கிற சூழலில் தமிழ்ப் புலவர்கள் எப்படி இந்த அகத்திணை ஒழுக்கமுறைகளை ஏற்றுப் பாடல் எழுதினார்கள். தமிழகம் முழுதும் பரவியிருந்த புலவர்களை இந்த ஒழுக்கமுறை கொண்ட இலக்கியக் கொள்கை எப்படி எதன் மூலமாகக் கட்டுப்படுத்தியது?

மக்கள் தொடர்பு சாதனங்கள் அரிதாக இருந்த காலத்தில் போக்குவரத்து வசதி இல்லாத சூழலில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்களும், பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு இலக்கிய ஆர்வலர்களாக இருந்து பாட்டெழுதிய புலவர்களும் எவ்வாறு இந்த இலக்கியக் கொள்கையை அறிந்து கொண்டார்கள்? எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்? இயல்பாக அனைவரும் ஏற்றுக் கொண்டார்கள் என்றால், இயல்பாக இந்த இலக்கியக் கொள்கை பலநெடுங்காலமாகப் புலவர்களால் புழக்கத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பின்னர் அனைவரிடமும் இது பரவி, பின்னர் இது நிலைபேறடைந்து பழக்கமாகப் பின்னர் மரபாகப் பரிணாம வளர்ச்சிபெற எவ்வளவு காலம் ஆகியிருக்க வேண்டும்? எவ்வளவு நீண்ட வரலாறு கொண்ட பல்வேறு இலக்கியப் படைப்புகள் இந்தப் பரிணாம வளர்ச்சிக்கு முன்னர்த் தோன்றியிருக்க வேண்டும்?

சங்க இலக்கியத்திற்கு முந்திய அந்தப் பரிணாம வளர்ச்சிக் காலம் எவ்வளவு? அந்த வளர்ச்சிக் காலத்தில் தோன்றிய இலக்கியப் படைப்புகள் எல்லாம் என்னாயின? ஒரு இலக்கியக் கொள்கை பரிணாம வளர்ச்சியுற்று நிலைபேறடைந்து மரபாக மாறிய காலமும் அதற்குத் துணையாயிருந்த இலக்கியப் படைப்புகளும் நமக்கு இப்போது இல்லாமல் இருக்கிறதே! சங்க இலக்கியங்களாக இருப்பவை கொண்டு நாம் இழந்திருப்பதைப் பற்றிச் சிந்தித்தால் நம்மவர்களின் இலக்கியப் படைப்பாற்றலும் நீண்ட இலக்கிய வரலாறும் அதன்வழிப் பெற்ற இலக்கியக் கொள்கைகளும் நம்மை மிகவும் வியப்படையச் செய்கின்றன.

பின்னிணைப்பு : 1 அட்டவணை : 1

நிலம்	முல்லை	குறிஞ்சி	பாலை	மருதம்	நெய்தல்
காலம்	கார் காலம்	கூதிர், முன்பனி,	வேனில், (பின்பனியும்)	அறுவகைப் பருவமும்	அறுவகைப் பருவமும்
பொழுது	மாலைப் பொழுது	நடு இரவு	நடுப்பொழுது	இரவின் பிற்கூறு, விடியற்காலை	பகல்பொழுது
ஒழுக்கம்	இருத்தல்	புணர்தல்	பிரிதல்	ஊடுதல்	இரங்கல்
தெய்வம்	மாயோன்	முருகன்	கொற்றவை	இந்திரன்	வருணன்
தலைவன்	நாடன்	வெற்பன், சிலம்பன்	மீளி, விடலை	ஊரன், மகிழ்நன்	சேர்ப்பன், துறைவன்
மக்கள்	ஆயர்,வேட்டுவர்	குறவர்	எயினர், எயிற்றியர்	உழவன்	துணையர்
உணவு	வரகு, முதிரை	தினை, ஐவனம், வெதிர்நெல்	ஆறலைத்தலால் கிடைப்பன	நெல்	மீன், உலர்ந்த மீன்,
மா	மான், முயல்	யானை, புலி, பன்றி, கரடி	வலியிழந்த யானை, புலி, செந்நாய் முதலியன	எருமை, நீர் நாய்	கரா, சுறா
மரம்	கொன்றை, குருந்து, புதல்	வேங்கை, கொங்கு, அகில்	பாலை, இருப்பை, கள்ளி	மருதம்	புன்னை, கைதை
புள் (பறவை)	கானாங்கோழி	மயில், கிளி	எருவை, பருந்து	அன்னம், அன்றில்	கடற்காக்கை
பறை	ஏறுகோள்	வெறியாட்டுப் பறை, தொண்டகம்	ஆறலைப்பறை, சூறைகோட் பறை	நெல்லறி பறை	நாவாய்
தொழில்	நிரைமேய்த்தல்	தேனழித்தல் கிழங்கு அகழ்தல்	ஆறலைத்தல்	உழவு	மீன்பிடித்தல், உப்பு தயாரித்தல்
பண்	சாதாரி	குறிஞ்சி	பாலை	மருதம்	செவ்வழி
பூ	முல்லை, பிடவு, தளவு	வெங்கை, காந்தள், குறிஞ்சி	மராம்பூ	தாமரை, செங்கழுநீர்	நெய்தல்
நீர்	கான்யாறு (காட்டாறு)	சுனைநீர், அருவி நீர்,	ஆற்றுநீர், சுனை நீர்	ஆற்றுநீர்	கேணி நீர் கடல் நீர்
ஊர்	பாடி, சேரி	சிறுகுடி, குறிச்சி	குறும்பு	பேரூர்	பட்டினம் பாக்கம்

மொழியியல் நோக்கில் "நாடனொடு நட்பு"

'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோட் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே' (குறுந்:3)

இது எட்டுத்தொகை நூல்களுள் இரண்டாவது நூலாகிய குறுந் தொகையில் உள்ள பாடல். மேலே குறிப்பிட்ட இந்தப் பாடலை எழுதியவர் தேவகுலத்தார். இது தலைவன் சிறைப்புறமாக அவன் வரைந்து கொள்வது வேண்டித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் இயற்பட மொழிந்தது என்று இப்பாடலுக்கான சூழல் குறிப்பிடப்படுகிறது. அதாவது தலைவன் வேலிக்கு அந்தப் பக்கத்தில் இருக்கிறான். தலைவியை மணப்பதில் நாள் கடத்தி வருகிறான். என்றாலும், நாள்தோறும் அவளைச் சந்திப்பதில் மட்டும் அவனுக்கு அளவு கடந்த ஆசை. தலைவன் தலைவியை விரைவில் மணம் முடித்துக் கொள்ள வேண்டும் என்று தோழி விரும்புகிறாள். அதனால் கிண்டலாகத் தலைவனை – அவனது நட்பைப் பழித்துக் கூறுகிறாள். அதற்குப் பதிலாகத் தலைவி தலைவனிடம் தான் மேற்கொண்டுள்ள நட்பு எப்படிப்பட்டது என்று தலைவனுக்கும் கேட்குமாறு குறிப்பால் விளக்குகிறாள். அதுதான் குறுந்தொகையில் காணப்படும் நான்கு வரிப் பாடல். ஆனால் இதில் பொதிந்துள்ள இலக்கிய நயமோ பல பக்கங்களில் பதிவு செய்யப்பட வேண்டிய சிறப்பினைப் பெற்றதாகும்.

இதில் தலைவன் தலைவி நட்பின் ஆழ அகலப் பரிமாணங்கள் இயற்கையை அளவுகோல்களாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. நிலத்தைவிடப் பெரிது; வானைவிட உயர்ந்தது; கடலைவிட ஆழமானது. அது என்ன? நாடனொடு தான் கொண்ட நட்பு என்கிறாள் தலைவி. ஆனால் தலைவன் தலைவியோடு கொண்ட நட்பு எப்படிப்பட்டது என்பதை இது பேசவில்லை. மேலும் காதல் என்று குறிப்பிடாது நட்பு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆழத்திலும் அகலத்திலும் மிகுதியாகத் தலைவி வெளிப்படுத்துகிற அவளது நட்பை எவ்வித அடைமொழியும் இன்றி வெறுமனே நட்பு என்று கூறுவது வியப்பாக உள்ளது. மேலும் நட்பைப் பழித்துக் கூறிய தோழிக்கு இது சரியான பதிலா? தலைவனின் காதுபடக் கூறும் தலைவியின் உள்நோக்கம் எதுவாக இருக்கும்?

இது ஓர் அகத்திணைப்பாடல். ஏனெனில் இது தலைவன் - தலைவி நட்பை, அவர்களது உறவைப் பேசுகிறது. இந்த உண்மையைச் சூழல் காட்டும்

முன்னுரைதான் தெளிவாக்குகிறது. பாடலில் தலைவன் - தலைவி நட்புக்குரிய எவ்விதக் குறிப்பும் நேரடியாக இல்லை. இதை இரு நண்பர்களின் நட்புக்கு உரியதாகவும் கருதலாம். ஆனால் இதை அகப் பாடலாகக் கருதிப் பார்க்கும் போதுதான் பாடலின் பொருள் புதியதொரு கோணத்தில் பொருள் விளக்கம் விரிகிறது.

இப்பாடலில் நாடனொடு நட்பு எனும் முடிப்பு வரிதான் முத்தாய்ப்புத் தொடர்; உயிர் மூச்சுடையது. நாடன் என்பது நாட்டுத் தலைவன். அவன் எப்பேர்ப்பட்ட தலைவன்? அந்த உயிர்மூச்சுத் தொடருக்கு அடையாகவும் துணையாகவும் இருப்பது 'கருங்கோட் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும்' எனும் தொடராகும். இந்த வருணனை வரிகளே நாடனொடு நட்பு எனும் தொடரை நமக்கு நன்கு புரிய வைக்கின்றன.

நாடனொடு நட்பு என்பதைத் தவிர நாடனது கொடை, நாடனது வீரம் என எவ்வாறெல்லாம் இத்தொடரை மாற்றியமைத்தாலும் அது அந்த வருணனை வரிகளோடு பொருந்தி வராது. தலைவி நாடனொடு கொண்ட நட்பை விளக்காது. ஆனால் தலைவி நாடனொடு கொண்ட நட்பும் கருங்கோட் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் செய்தியும் நெருங்கிய தொடர்புடையன. ஒன்றொடு ஒன்று சார்ந்து இருப்பன. தலைவன் - தலைவி நட்பின் பரிமாணத்தை முன்னிரண்டு வரிகளும் தெரிவிக்க, நட்பின் தன்மையைப் பின்னிரண்டு வரிகளும் படம்பிடித்துக் காட்டுகின்றன.

பெரிய நிலம்; உயர்ந்த வான்; ஆழ்ந்த கடல்; என்பதெல்லாம் புறப்பொருள் பற்றிய செய்திகள். அது போன்றே கருங்கோட் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைத்தல் என்பது ஓர் இயற்கை வருணனை. இந்தப் புறச் செய்திகளை அளவுகோல்களாகக் கொண்டு, வருணனையாகச் சொல்லும்போது அதற்கு அப்பால் இவற்றை அகச் செய்திகளாக நாம் உணரும்படி மாற்றும் மந்திரச் சக்தி 'நாடனொடு நட்பே' எனும் உயிர்மூச்சு வரிகளில்தான் உள்ளது. இதுதான் முழுக்க முழுக்கப் புறச் செய்திகளைக் கூறும் இப்பாடலை அகச் செய்தியாக மாற்றும் மாய வித்தையைச் செய்கிறது.

அப்படி, அகச் செய்தியாக இதைக் கருதும்போது அளவுகோல்களும், இயற்கை வருணனையும் புதிய பொருள்களை உணர்த்துகின்றன. கருங்கோல் என்பது கரிய கோல் என்றும் வலிமையான கோல் என்றும் பொருள்படும். அந்தக் கோலில் ஒரு குறிஞ்சிப்பூ. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை பூக்கும் அரிய பூ இது என்பதால் இதிலிருந்து பெறப்படும் தேன் உயர்வானது; சிறப்பானது; பெருமளவில் கிடைப்பது. என்ற பொருளைப் பெருந்தேன் எனும் சொல் குறிப்பிடுகிறது.

இழைத்தல் என்பது தேய்த்தல் என்றும் பொருள்படும். தச்சர் மரத்தைச் சமப்படுத்த இழைப்புளி எனும் கருவி கொண்டு மரத்தின் மீது முன்னும் பின்னும் அசைப்பர். இச்செயலை மரத்தை இழைத்தல் எனக் குறிப்பர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிப்பூவினை இங்கு நாடனொடு நாட்டில் இருப்பதாகக் கூறுவது பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தலைவன் பெருந்தேன் இழைக்கும் தகுதிப்பாடு உடையவனாக இருக்கிறான் என்பதைச் சுட்டுகிறது. குறிஞ்சிப்பூக் கொண்ட வலிமையான கரியகோல் அரிதாகிய தேனை இழைக்கிறது என்பது தலைவி தலைவனோடு புணர்ந்த நிலையினை மறைமுகமாகச் சுட்டுகிறது.

குறிஞ்சி நிலத்திற்குரிய ஒழுக்கம் புணர்தலும், புணர்தல் நிமித்தமும் ஆகும். அரிதாகப் பூக்கும் பூவை இங்கே கூறுவதால் தலைவனோடு புணருதலும் அரிதாகவே அமைகிறது என்பதும் தனது பரந்த, உயர்ந்த அகன்ற நாட்டின் முத்தாய்ப்பாய் இந்தக் கருங்கோட் குறிஞ்சிப் பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நிகழ்ச்சி எப்போதாவது நிகழும் என்பதையும் தலைவி சூட்சுமமாகச் சுட்டிக் காட்டுகிறாள். நட்பின் பரிமாணத்தை வலியுறுத்திய அதே நேரத்தில் திருமணத்தை அவசியம் விரைவில் முடிக்க வேண்டிய காரணத்தையும் தலைவி இதில் நயத்தோடு குறிப்பிடுகிறாள். தோழியின் கருத்துக்குத் தானும் உடன்பட்டுப் புறத்தே நிற்கும் தலைவனுக்குத் தன் நிலையைப் புரிய வைக்கும் மிக உன்னதமான கவிதை நயமிக்க அகத்திணைப் பாடலிது என்பதில் ஐயமில்லை.

சங்க இலக்கிய மரபைக் கட்டுடைத்த சிற்றிலக்கியங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொற்காலம் எனப் போற்றப்படும் சங்க காலத்தில் எழுந்த இலக்கியப் படைப்புகள் ஏறக்குறைய 600 ஆண்டுக்கால இடைவெளிக்கு உட்பட்டவையாகும். தனிப்பாடல்களாகக் கிடைத்தவைகளைப் பாடுபொருள் தளத்தில் அகம், புறம் என வகைப்படுத்தி, பின்னர்த் திணை, துறை இவைகளால் உட்பிரிவுபடுத்தினர். 100-க்கும் மேற்பட்ட வரிகளைக் கொண்டு ஓராசிரியரால் படைக்கப்பட்ட நெடும்பாடல்களைப் பத்துப்பாட்டாகவும், பல்வேறு புலவர்கள் படைத்த பாடல்களைத் திணை, துறையின் கீழ் வகுத்துக் கருப்பொருள் அடிப்படையில் எட்டுத் தொகையாகவும் தொகுத்தனர்.

இவ்வாறு தொகுக்கப்பெற்ற சங்க இலக்கியப் படைப்புகளுக்கிடையே காணும் பொதுண்மைக் கூறுகளின் அடிப்படையில் சங்க இலக்கியக் கோட்பாடு உருவாக்கப்பட்டது. இதற்குப் பின் எழுந்த படைப்புகளுக்கு எல்லாம் இந்தச் சங்க இலக்கியக் கோட்பாடுகளே முன்மாதிரியாக விளங்கிப் படைப்பாக்கத்திற்கு வழிவகுத்தன. அகம் புறம் எனும் பெரும்பிரிவில் அடங்கும் இலக்கியங்களுள் 'மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' எனும் தொல்காப்பிய நூற்பாவின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. அத்துடன் 'பெருமையும் உரனும்' கொண்ட அகத்துறைத் தலைவனும், அச்சமும் நாணும் மடனும் கொண்ட அகத்துறைத் தலைவியும் தன்னேரில்லாத் தலை மக்களாய்த் திகழ்தலும், காதல் வயப்பட்ட தலைமகள் தன்னுறு வேட்கையைக் கிழவன் முன் கிழத்தல் இன்றி "எத்திணை மருங்கினும் மடன்மேல்" பொற்புடை நெறிமை இல்லாத தலைமகளாய்க் குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை நெறிப்பட வாராஅ பண்பினளாக இருத்தலும், அகத்துறைத் தலைவிக்கு இலக்கணமாகத் தொல்காப்பியர் சுட்டுவதைச் சங்க அக இலக்கியங்கள் முற்றிலும் வழிமொழிந்திருப்பதைக் காணமுடிகின்றது.

600 ஆண்டுக்கால இடைவெளியில் தோன்றிய சங்க இலக்கியப் படைப்புகள் எல்லாம் சங்க இலக்கிய மரபிலிருந்து சற்றும் பிறழா. இத்தகைய சூழலில் நெடுநல்வாடை எனும் சங்க இலக்கிய நூலில் "வேம்புதலையாத்த நோன்காழ் எஃகமொடு முன்னோன் முறைமுறைகாட்ட" எனும் பாடல் வரிகளை அடிப்படையாகக் கொண்டு வேம்பு சுட்டும் வேப்பம் பூ பாண்டிய மன்னனுக்கு உரியது என்பதால் பாட்டுடைத் தலைவனைக் குறிப்பால் சுட்டிவிடுவதால், நெடுநல்வாடை எனும் சங்க இலக்கியத்தை அக இலக்கியமாகக் கருதக்

கூடாது என்பது மரபு சார்ந்த திறனாய்வாளர்களின் கருத்தாகும். நெடுநல்வாடை ஆசிரியரான நக்கீரர் மிகவும் செறிவான சங்க இலக்கிய மரபைச் சற்றே மீறிப் பார்க்க மேற்கொண்ட முதல் முயற்சியாக அதே சமயம் இலக்கிய நயமிக்க சிறந்ததொரு மரபு மீறலாகக் கருதலாம்.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைவனது பெருமைகளும் ஊர்ச் சிறப்பும் அவனது வருகையைக் கண்டு மகிழ்தலும் ஆங்காங்கே காணப்படு கின்றன. ஆனால் பல்வேறு கிளைக் கதைகளை உள்ளடக்கி நீண்ட நெடும் பாடல் எண்ணிக்கையைக் கொண்ட காப்பியக் கட்டமைப்பில் தலைவனின் மெய்க்கீர்த்தி, நாட்டுவளம், தலைவன் உலா வருதல் ஆகியன ஒரு காவியத்தின் உட்கூறுகளாய் அதன் இயல்களாய் இடம்பெற்றன.

அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கு உறுதிப்பொருள்களை வலியுறுத்தும் காப்பியச் சமயங்களையும் இறைவனையும் போற்றியும் புகழ்ந்தும் எழுந்த பக்தி இலக்கியங்கள் சங்க கால மரபிலிருந்து மாறுபட்டன. சங்க இலக்கியத்தின் மானுடக் காதல், பக்தி இலக்கியத்தில் இறைவன் மீது தோன்றும் பேரின்பக் காதலாக உருமாறியது. இறைவனைத் தலைவனாகவும், தன்னைத் தலைவியாகவும் பாவித்துக் கொண்ட நாயகன் நாயகி பாவனை சங்க அக இலக்கியத்தின் எச்சமாகப் பக்தி இலக்கியத்தில் காணப்பட்டது.

பக்தி இலக்கியக் காலத்தில் சங்க இலக்கிய மரபையொட்டி, அதே நேரத்தில் அம்மரபை மீறியும் இலக்கியங்கள் பல தோன்றின. காதலையும் வீரத்தையும் கருப்பொருளாகக் கொண்டு கட்டமைந்த சங்க இலக்கியப் படைப்புகளும், அவற்றிற்கான கோட்பாடுகளும், இறைவனைப் புகழ்ந்து போற்றி அவரது லீலா வினோதங்களையும் எடுத்துக் கூறும் பக்தி இலக்கியங்களுக்குப் பொருந்தாமல் போயின. ஆயினும் தமிழில் தொடர்ந்து வந்த இலக்கிய மரபினால் பக்தி இலக்கியங்களில் சங்க இலக்கியக் கட்டமைப்பும் கோட்பாட்டுக் கூறுகளும் ஓரளவு இடம்பெற்றிருந்தன. அத்துடன் இறைவழிபாட்டிற்கு ஏற்ற வகையில் இசையோடு பாட இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இதனால் பக்தி இலக்கியப் படைப்புகள் சங்க இலக்கிய மரபுகளை விட்டு விலகவேண்டியதாயின.

“பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக” என இறைவனே மாணிக்கவாசகரிடம் வேண்டிடத் திருக்கோவையார் எனும் சிற்றிலக்கிய நூல் எழுந்ததாகக் கூறப்படும் செவிவழிச் செய்தி, சிற்றிலக்கியப் படைப்புகளுக்குத் தெய்வீக அங்கீகாரத்தை நிலைநிறுத்தும் முயற்சியாகக் கருதலாம். பெண்கள் நீராடப் போகும் நிகழ்ச்சி சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் ஒரு சிறு செய்தியாகச் சுட்டப்படுகிறது. இது பக்திக் காலத்தில் திருவெம்பாவையில் இறைவனது சிறப்பினை எடுத்தியம்ப நீராடச் செல்லும் மகளிர் நிகழ்ச்சி மையக் கருவாக அமைகிறது. “மாவென மடலும் ஊர்ப” எனக் குறுந்தொகை மடலேறுதல்

பற்றிக் குறிப்பிடுகிறது. "காமம் உழந்து வருந்தினார்க்கு ஏமம் மடல் அல்லது இல்" எனத் திருக்குறள் மடலேறுதலைச் சுட்டுகிறது. சங்க காலத்தில் ஆண்கள் மட்டுமே மடல் ஏறும் வழக்கம் இருந்ததையும் பெண்கள் மடல் ஏறாச் சிறப்பினையும் தொல்காப்பிய நூற்பா சுட்டுவதற்கேற்ப, சங்க இலக்கியங்கள் அமைந்திருக்கப் பக்தி இலக்கியக் காலத்தில் இந்தச் சங்க இலக்கிய மரபு பக்தியின் பெயரால் பெண்களும் மடல் ஏறுவதாகக் காட்டப்படுகிறது. திருமாலிடம் பக்தி பூண்டப் பெண் மடல் ஏறத் துணிவதாகத் திருமங்கை மன்னனின் "பெரிய திருமடல், சிறிய திருமடல்" ஆகியன எடுத்தியம்புகின்றன. இந்தப் பெண்கள் மடலேறும் போக்கு சற்று நீண்டு நெகிழ்ந்து நாகையில் வாழ்ந்த காத்தான் குலாதித்தன் மேல் அதீதக் காதல் கொண்ட தாசி காளிமுத்து என்பவள் பாடிய "வருணகுல ஆதித்தன் மடல்" எனும் சிற்றிலக்கியமாக எழுந்துள்ளது.

ஆழ்வார் பாசுரங்களைத் திரட்டிய வைணவப் பெரியார் நாதமுனி அவர்கள் அவற்றைப் பிரபந்தங்கள் எனக் குறிப்பிடுகிறார். பிரபந்தம் எனும் சொல் நூல்களின் தொகுப்பு எனும் பொருளில் முதன்முதலாகக் கையாளப்பெறுகிறது. "அடிவரை யறையின்றித் தாளத்தாற் புணர்ப்பது பிரபந்தம்" என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் 96 என்பதால் அதனை யொட்டியே சிற்றிலக்கிய வகைகள் 96 எனக் கூறுவதும் ஒருவகை நிலைப் பாடாகும். இவ்வாறு தெய்வ அங்கீகாரம் பெற்றதாகவும் சங்க இலக்கிய மரபை ஒட்டி அதே நேரம் பக்தி இலக்கியக் கருத்தாக்கங்களால் சங்க இலக்கிய மரபை மீறிச் சமயம் சார்ந்த கலைச் சொல்லால் பிரபந்தம் எனச் சுட்டப்படும் சிற்றிலக்கியங்கள் பல படைக்கப்பட்டன.

பக்தி இலக்கியப் பெயரால் ஏற்பட்ட சங்க இலக்கிய மரபு மீறல் தொடர்ந்து இலக்கியப் படைப்பின் பல்வேறு கூறுகளில் நிகழ்ந்த வண்ணம் காணப்படுகிறது. பக்தி இலக்கியக் காலத்தைத் தொடர்ந்து எழுந்த காலம் 1500லிருந்து 1850 வரையாகும் என வையாபுரிப் பிள்ளை அவர்கள் கணக்கிட்டுள்ளார். ஏறக்குறைய 350 ஆண்டுகள் சிற்றிலக்கியக் காலமாகக் கருதப்படுகிறது. எந்தவொரு மரபையும் கட்டுடைக்கும் முயற்சி முதலில் சிறிய அளவில் தோன்றிப் பின்னர்க் காலப்போக்கில் பெரியதாகவும் அதற்குப் பின்னர் முற்றிலும் மாறுபட்டதாகவும் அமைவது இயற்கை. அந்த வகையில் பிரபந்தக் காலத்தில் முதலில் தோன்றிய சிற்றிலக்கியங்களைவிடப் பின்னால் வந்த சிற்றிலக்கியங்கள் சங்க இலக்கிய மரபிலிருந்து அதிக அளவில் மாற்றங்களைப் பெற்றுள்ளதாகக் கருதலாம். சிற்றிலக்கிய வகைமைகளில் ஏறக்குறைய கி.பி. 5ஆம் நூற்றாண்டில் அந்தாதியும் 7ஆம் நூற்றாண்டில் கோவையும் 8ஆம் நூற்றாண்டில் உலாவும் 9ஆம் நூற்றாண்டில் கலம்பகமும் 11ஆம் நூற்றாண்டில் சதகமும் 12ஆம் நூற்றாண்டில் பிள்ளைத் தமிழும் 14ஆம் நூற்றாண்டில் தூதும் 16ஆம் நூற்றாண்டில் பள்ளும் 18ஆம் நூற்றாண்டில் குறவஞ்சியும் பெரும்பான்மை இலக்கிய வகைமைகளாக இருந்தன. இதில் அந்தாதி, கோவை,

உலா ஆகியன பெருமளவு சங்க இலக்கிய மரபை ஒட்டி அமைந்திருக்க 16 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பள்ளும் அதற்குப் பின்னர் 17 ஆம் நூற்றாண்டில் தோன்றிய குற வஞ்சியும் சங்க இலக்கிய மரபிலிருந்து பேச்சு வழக்கையொட்டி நாடகப் பாணியில் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

கருப்பொருளால் அகம் புறம் என வகைப்பட்டும் பின்னர்த் திணை துறைகளால் உட்பிரிவாக அக, புறச் சங்க இலக்கியங்கள் உள்ளன. ஆனால் சிற்றிலக்கியங்களின் வகைப்பாடு பல்வேறு வகைகளில் மாறுபட்டு அமைந்துள்ளது. புறம் சார்ந்ததாகக் களவழி, வாண்மங்கலம் போன்றனவும் அகம் பற்றியதாக ஓம் படை, கைக்கிளை, வேலன் வெறியாட்டு போன்றனவும், அரசர் தொடர்புடையவையாகத் துயிலெடைநிலை, குடைநிழல் மரபு, வாயுறை வாழ்த்து ஆகியனவும் வாழ்த்து வகையைச் சார்ந்ததாக இயன்மொழி, வாயுறை வாழ்த்து ஆகியனவும், பா வகையைச் சார்ந்ததாக வஞ்சி, அகவல், பண்ணத்தி ஆகியனவும் மக்கள் சார்ந்தனவாகக் குரவைப்பாட்டு, வள்ளைப்பாட்டு ஆகியனவும் மகளிர் விளையாட்டுச் சார்ந்ததாக ஊசல், அம்மானை ஆகியனவும் இன்ன பிற வகையிலும் சிற்றிலக்கியங்கள் வகைப்படுத்தப்படுகின்றன. பெயரிடுவதால் கூட இத்தகைய நெகிழ்ச்சியைக் காண முடிகிறது. உலா இலக்கியத்தைப் பவனிகாதல் என்றும் பரணி இலக்கியத்தைக் களவழியென்றும், குறவஞ்சியைக் குறம் என்றும் குறிப்பிடுவதுண்டு.

பல சிற்றிலக்கியங்களுக்குரிய வரையறை காலப்போக்கில் நெகிழ்வடைந் திருப்பதைக் காண முடிகிறது. ஒரு முறை நெகிழ்ந்ததை இன்னும் நீட்சி பெற வைப்பது எளிது. அதுபோல் போரில் நூறு யானைகளை வென்ற அரசன் பரணி பாடுவதற்குரிய தகுதி பெற்றவனாக இலக்கண விளக்கப்பாட்டியலில் கூறப்பட்ட வரன்முறைக்கு முன்னர்ப் பன்னிரு பாட்டியலில் எழுபது யானைகளை வென்றவனுக்கும் பரணி பாடலாம் என வரையறுத்துள்ளது. பிள்ளைத்தமிழ் சிற்றிலக்கியத்திற்கு வரையறையாக ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் எனப் பத்துப் பருவங்கள் அமைய வேண்டும் என்பர். ஆனால் சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஏழு பாடல்களும், கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழில் ஐந்து பாடல்களும் இடம் பெற்றுள்ளன. சிற்றிலக்கியங்களுள் ஒவ்வொன்றிற்கும் அதற்கென வரையறுக்கப் பட்ட யாப்பு முறைகளும் காலப்போக்கில் மாற்றம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. பெரும்பாலும் நேரிசை வெண்பாவால் அமைந்த நூறு பாக்களால் அமைந்ததாக அந்தாதி இலக்கியம் கருதப்பட்டது. ஆனால் கட்டளைக் கலித்துறைப் பாவில் அமைந்ததைக் கலித்துறை அந்தாதி என்றனர். வெண்பாவும் கலித்துறையும் கலந்துவரப் பத்துப்பாடல்களில் அமைந்ததைப் பதிற்று அந்தாதி என்றும் நூறு பாடல்களில் அமைந்ததை நூற்றந்தாதி என்றும் அழைத்தனர். பத்துப் பத்துப் பாடல்களால் அமைந்த அந்தாதிப் பாடல்கள் ஒவ்வொன்றும்

ஒவ்வொரு சந்தத்தில் அமைந்திருந்தால் அதனைப் பல்சந்த மாலை எனவும் குறிப்பிட்டனர். அந்தாதிப் பாடல்களில் யமகமும், திரிபும் அமையப் பாடுவதை யமக அந்தாதி, திரிபு அந்தாதி என்றும் கூறினர். உதடுகள் ஒட்டாமல் பாடும் முறையில் அமைந்தவற்றை நீரோட்டக யமக அந்தாதி என்றனர். சங்க இலக்கிய மரபில் தலைவன் ஒருவனைத் தலைவி ஒருத்தி எதிர்கொண்டு காதல் கொள்வதாகக் கட்டமைக்கப்படுவதுண்டு. ஆனால் உலா இலக்கியங்களில் உலா வரும் தலைவனை எழுபருவ மங்கையர், அதாவது ஐந்து முதல் ஏழு வயது வரையான பேதையர் தொடங்கி 32 வயது முதல் 40 வயது வரையிலான பெதும்பையர் வரை காதல் கொள்வதாகக் காட்டியிருப்பது சங்க அக இலக்கியத் தலைவிக்குரிய பண்பு நலன்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். அதனால் தான் சில உரையாசிரியர்கள் இத்தகைய எழுவகைப் பருவ மங்கையரை நற்குடிப் பிறந்தவராகக் கருதத் தயங்குகின்றனர். திருக்குற்றால நாதர் உலா எனும் பக்தி இலக்கியம் சார்ந்த சிற்றிலக்கியத்தில் இறைவன் உலா வர அதனைக் கண்டு தேவ மகளிர், நாகமகளிர் என எழுவகை மங்கையர் காதல் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. தலைவன் ஒருவனைப் பல்வேறு பெண்டிர் காதல் கொள்வதாக அமைப்பதும், அவர்களின் பெருங்காதலை கைக்கிளையாகக் காட்டுவதும் சங்க இலக்கிய மரபிலிருந்து மாறுபட்டதாகும்.

ஆற்றுப்படை இலக்கியங்களில் பாதாதிகேச வருணனையோ கேசாதிபாத வருணனையோ வருவதுண்டு. இது ஆற்றுப்படையில் காணும் ஒரு கூறு. பின்னர்த் தன் அங்கங்களைப் பக்தியில் தெய்வ வழிபாட்டில் ஈடுபடச் சொல்லிப் பாடுதல் 'அங்கமாலை'யாகக் கருதப்பட்டது. திருநாவுக்கரசரின் திருப்பதிகத்தில் 'திரு' அங்கமாலை இருப்பதை நாமறிவோம். சிருங்காரச் சுவையோடு விறலியின் அங்கங்களை வருணித்த ஆற்றுப்படை இலக்கியத்திலிருந்து அங்க அவயங்களை இறை வழிபாட்டில் ஈடுபடுத்திப் பாடிய பக்திக் காலத்தைத் தொடர்ந்து ஒரு அங்கத்தை மட்டுமே வருணித்துத் தனிநூல் அமைக்கும் சிற்றிலக்கியப் போக்கு எழுந்தது. 10 பாடல்கள் பெண்ணின் கண்களை மட்டுமே வருணித்துப் பாடுவதை நயனப்பத்து என்றும் மார்பகங்களை வருணித்துப் பாடுவது பயோதரப்பத்து என்றும் அழைக்கப்படுகிறது.

தலைவன் தேரினைத் தலைவி புகழ்ந்து பாடுவதாகச் சங்க கால அக இலக்கியப் பாடல்கள் சில உண்டு. காப்பியத்தில் அரசரது குடை, கொற்றம் இவற்றையெல்லாம் வருணித்துக் கூறுவதுண்டு. இது காப்பியத்தின் ஒரு சிறு பகுதியாகும். ஆனால் சிற்றிலக்கியக் காலத்தில் அரசரின் பத்துப் பொருட்களைச் சிறப்பித்துப் பாடுதல் 'தசாங்கப் பத்து' எனப்பட்டது. அரசரின் மலை, ஊர் பற்றி விருத்தப்பாவினால் பாடினால் அது விருத்தமாகும். இதில் அரசரின் ஏதாவது ஒரு பொருள் பற்றி விருத்தப்பாவினால் பாடுவது நரிவிருத்தம் புலிவிருத்தம் என அழைக்கப்படும்.

நீண்ட அடிகளின் ஆசிரியப்பாவில் சங்ககால இலக்கியப் படைப்புகள் காணப்பட்டன. சிற்றிலக்கியக் காலத்தில் குறிப்பிட்ட இலக்கிய வகைமைக்கு எனப் பாவகை அமைந்தது. பெரும்பாலும் உலா, தூது ஆகிய இலக்கியங்கள் கலிவெண்பாவினால் அமைந்திருக்கும். பிள்ளைத்தமிழுக்கு ஆசிரிய விருத்தம் உரியது என்றும் கொச்சகக் கலிப்பாவும் பஃறொடை வெண்பாவும் வரலாம் என இந்திரகாளியம் குறிப்பிடுகிறது. அந்தாதி இலக்கியங்களில் வெண்பாவிலோ கட்டளைக் கலித்துறையிலோ அல்லது இரண்டும் விரவியோ வரலாம். இன்னிசைப் பாடல்களைக் கொண்ட குறவஞ்சியின் ஆசிரிய விருத்தம், சிந்து, கண்ணி போன்ற பல பாவினங்கள் இடம்பெறும்.

தன்னேரில்லாத் தலைமாந்தர்களைக் கொண்ட சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து காப்பியக் காலத்தில் உயர்குடிமக்கள் தலைமக்களாகச் சித்திரிக்கப் பட்டனர். பக்திக் காலத்தில் இறைவர்கள் இலக்கியத் தலைமாந்தர்களாயினர். ஆனால் சிற்றிலக்கியக் காலத்தின் பிற்பட்ட பகுதிகளில் பள்ளு, குறவஞ்சி போன்ற இலக்கியங்களில் உழைக்கும் மக்களைச் சார்ந்த பள்ளனும் குறத்தியும் தலைமாந்தர்களாக இடம் பெற்றனர். சிற்றிலக்கியக் கதை மாந்தர்கள் நடப்பியல் உலகின் யதார்த்த மாந்தர்களாக விளங்கினர்.

சங்க கால இலக்கியத் தலைவியர் தலைவனைத் தவிர வேறொரு ஆடவனைக் கனவினும் நினையாத அளவில் கற்புக்கடம் பூண்டவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். தலைவன் வேண்டுமானால் தலைவியைக் காண வராது காலம் நீட்டிப்பதானது "பொய்ப்பின் யான் என் செய்குவன்" எனத் தலைவி வருந்துவதாகக் காட்டப்படலாம். ஆனால் பள்ளு போன்ற சிற்றிலக்கியங்களில் பள்ளனுக்கு இரு மனைவியர் இருப்பதாகக் காட்டப்படுகிறது. குறவஞ்சியில் காலந்தாழ்த்தி வருகின்ற குறத்தியின் நடத்தையில் சந்தேகம் கொள்பவனாகக் குறவனின் உரையாடல் அமைந்துள்ளது. இவையெல்லாம் இலட்சியக் கதை மாந்தர்களை வகுத்துச் சிற்றிலக்கியம் எதார்த்த நிலையில் தலைவன் தலைவியரை ஜனரஞ்சகமாகக் காட்டியிருப்பதை உணரலாம்.

ஒரு படைப்பிற்கு வடிவம் உள்ளடக்கம் என நிலைகள் உள்ளன. சங்க இலக்கியக் காலத்துப் பா வடிவினை, யாப்பு முறையினைச் சிற்றிலக்கியங்கள் முற்றிலும் மாற்றிவிட்டன. ஒரு இலக்கிய வகைமைக்கு ஒரு யாப்பு முறை உரியது என்ற கட்டுக் கோப்பான நிலையின்றி ஒன்றிற்கு மேற்பட்ட யாப்பு முறையில் ஒரு இலக்கிய வகைமை சிற்றிலக்கியக் காலத்தில் அமைந்திருக்கக் காணலாம். ஒரே இலக்கியத்தைப் பல்வேறு தலைப்புகளில் அமைக்கும் உறழ்ச்சி நிலையும் காணப்படுகிறது. தன்னேரில்லாத் தலைவனும் தலைவியுமான கதை மாந்தர்களை இலட்சிய தளத்திலிருந்து விலக்கி யதார்த்த நடைமுறைகளில் சிற்றிலக்கியங்களைப் படைத்தனர். ஒரு தலைவனுக்கு

இருமனைவியரும் தலைவன் பல பெண்களைக் காதல் கொள்ளுவதும், மனைவியின் நடத்தையில் சந்தேகம் கொள்வதால் சிற்றிலக்கியங்களில் இடம்பெற்றன. சிற்றிலக்கியக் காலத்தில் ஒரு படைப்பிற்குரியதாக அமைந்த வரையறை காலப்போக்கில் மாற்றமடைந்து நெகிழ்வுற்றது. இவ்வாறு சங்க இலக்கியங்களான கோட்பாடுகள் சிற்றிலக்கியக் காலத்தில் பெரிதும் மாற்ற மடைந்து போயின.

இந்த வகைச் சிற்றிலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட நெகிழ்வுகளைக் கண்டு இவற்றைத் தேக்க நிலையில் ஏற்பட்ட கலைப்போலிகள் என்றனர். பண்டைய மரபிலிருந்து மாறுபட்டிருந்த சிற்றிலக்கியங்களை ஊனமடைந்த இலக்கியங்களாகவும் குறிப்பிட்டனர். இந்திய அரசியலில் மாலிக்காபூரின் படை யெடுப்பினைத் தொடர்ந்து மராட்டியர் ஆட்சியும் நிலவியது. தொடக்கத்திலிருந்தே சமஸ்கிருதமும் தெலுங்கும் ஆட்சியாளர்களின் மொழி மேலாண்மையோடு இலக்கியத் தளத்திலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. சிற்றிலக்கியங்களை முதலில் பிரபந்தங்கள் என வடமொழிச் சொல்லால் குறிப்பிட்டதும் சதகம், அந்தாதி, தசாங்கம் எனச் சிற்றிலக்கிய வகைமைகளுக்கு வடமொழிச் சொற்களால் பெயரிட்டதும் பிறமொழித் தாக்கங்கள் தமிழில் இருந்ததைத் தெளிவுபடுத்தும்.

முறைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாக விளங்கிய சமய நெறிகளுக்கு மாறாகத் தனிமனித மேன்மையை வலியுறுத்திச் சமய நெறிகளை விடத் தனிமனித ஒழுக்கங்களை, உள்ளார்ந்த தேடல்களை வலியுறுத்திய சித்தர்களின் படைப்புகள் பக்தி இலக்கியப் போக்கில் பெரும் மாறுதல்களை உண்டாக்கின. அந்த வகையில் சங்க இலக்கிய மரபுகளைப் பக்தி இலக்கியப் படைப்பாக்கத்தை முன்வைத்து எதிர்ப்புகள் எதுவுமின்றி உருவாக்கிய இந்தப் பக்தி இலக்கிய வழிகாட்டுதலைத் தொடர்ந்து சமயச் சார்பற்ற பொது இலக்கியங்களும் சங்க இலக்கிய மரபுகளைக் கட்டுடைத்து உருவாயின.

சங்க இலக்கிய மரபுகளை மீறியிருப்பதால் மட்டுமே சிற்றிலக்கியங்களின் இலக்கியத் தகுதியைக் குறைத்து மதிப்பிட இயலாது. சிற்றிலக்கியங்களின் இலக்கியத் தகுதி புதிய உவம உத்திகளாலும் கட்டமைப்பு முறைகளாலும் யதார்த்த நிகழ்வுகளாலும் சங்க இலக்கியங்களுக்கு ஒப்பாகச் சற்றுத் துணிவுடன் கூறுவதனால் சங்க இலக்கியங்களை விட மிகச் சிறந்த இலக்கிய நயத்தோடும் செய்நேர்த்தித் திறனோடும் இலக்கியத் தரத்தில் உயர்ந்து சிறந்திருக்கிறது எனலாம். மாற்றங்களைப் பெறுவதே பரிணாம வளர்ச்சியாகும். இவ்வகையில் சங்க இலக்கிய மரபுகளைக் கட்டுடைத்த சிற்றிலக்கியங்கள் பரிசோதனை முறையில் புத்தாக்க முயற்சியினை மேற்கொண்டு புதுப்புது இலக்கியத் தரமிகுந்த படைப்புகளை நமக்கு வழங்கியுள்ளன.

வள்ளுவரின் மொழித்திறன்

கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுவது மொழி. சொற்களை இலக்கண வரம்பிற்குட்பட வாக்கியங்களில் அமைத்து நம் கருத்தை நாம் வெளியிடு கின்றோம். ஆனால் சிறந்த இலக்கியங்களை உருவாக்கும் படைப்பாளர்கள் சரியான சொல்லைப் பொருத்தமான இடத்தில் அமைத்துத் தம் கருத்துக்களை அழகுறவும் செறிவாகவும் தெரிவிக்கின்றனர். கவிஞர்களோ சொல்லவரும் செய்தி களைச் சற்றே நயத்தோடு சுற்றிவளைத்துச் சொல்லுவதுண்டு. உரைநடையில் காண்பதுபோல் நறுக்குத் தெரித்தாற்போல் கவிதை நடையில் கருத்துக்களைச் சொல்லுவது இல்லை.

ஆனால் வள்ளுவரோ தான் படைத்த குறளின் ஈரடிகளில் மிகச் செறிவாக, அதே நேரத்தில் கவிதைக்குரிய உவமை நயத்தோடும் கற்பனை வளத்தோடும் அமைத்திருப்பது மிகப் பெரிய வியப்பாகும். ஒன்றரை அடிகளில் தாம் கூற வந்த கருத்தை வெண்பா வகையில் பா வரன்முறையோடு வள்ளுவர் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். இந்தக் கவிதைவழி நிகழ்ந்துள்ள கருத்துப் புலப்பாட்டு ஆற்றலைச் சொற்செட்டுடனும் செய்நேர்த்தித் திறனுடனும் வள்ளுவர் கையாண்டிருப்பது நம்மை அதிகம் சிந்திக்க வைக்கிறது. இந்த ஆற்றலே வள்ளுவரின் மொழித்திறனாக அமைகிறது. வள்ளுவரின் மொழித் திறன் மிக மிகக் கைநேர்த்தி மிக்க கவிஞனின் படைப்பாற்றலாகும். சுருங்கச் சொல்லுவது, அதே நேரம் தெளிவாக விளங்க வைப்பது என்பதே வள்ளுவரின் மொழித் திறனாகும்.

கட்டளை வாக்கியமாக வள்ளுவர் தனது கருத்துக்களை முன்மொழியும் போது, அக்கட்டளையைப் பின்பற்றாவிட்டால் வரும் துன்பங்களையும் சுட்டிக் காட்டாமல் விடுவதில்லை. "தன்னைத் தான் காக்கின் சினம் காக்க" எனும் கட்டளை வாக்கியத்தில் தன்னைத்தான் காக்கின் எனும் தொடருக்கு இரு நிலைகளில் பொருள் கொள்ளலாம். தன்னைத் தான் காப்பாற்றிக் கொள்வது என்பதும் தன்னையே காப்பாற்றிக் கொள்வது என்பதும் பொருந்தும். தன்னைத் தான் காப்பாற்ற முடியாவிட்டாலும் சரி, தன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாவிட்டாலும் சரி, சினத்தை (வெளியிடாமல்)க் காப்பாற்ற வேண்டும் என இக்குறள் பொருள்படும். இதில் 'சினம் காக்க' எனும் இந்தக் கட்டளை வாக்கியத்தைக் கைக் கொள்ளாவிட்டால் என்ன நிகழும் என்பதை வள்ளுவர் அடுத்த பகுதியில் குறிப்பிடுகிறார். 'காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்' என்பதில் தன்னையே என்று ஏகாரம் வந்து இருப்பதால் அதனைத் தன்னைத்தான்

எனும் முதல் தொடரில் உள்ள சொல்லோடு ஒப்பிட்டுப் பார்த்து அதனையும் வள்ளுவர் சிறப்புக் கருதி அழுத்தம் கொடுத்து, 'தான்' எனும் இடைச்சொல்லைத் தன் என்பதுடன் தன்னைத் தான் என்று பயன்படுத்தியதாகக் கொள்ள வேண்டும். காக்கின் என்பதற்கு எதிராகக் காவாக்கால் (கொல்லும்) எனும் தொடரை அமைத்திருக்கிறார் வள்ளுவர். சில சமயங்களில் எதிர்மறையாகக் சுட்டளை வாக்கியத்தை அமைப்பதும் உண்டு.

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு (*குறள், உட்பகை: 2*).

வாள்போல் பகைவரை அஞ்சற்க என்ற வள்ளுவர், கேள் போல் பகைவர் தொடர்பை அஞ்சுக என்றும் குறிப்பிடுகிறார். கேள் போல் ஒருவர் இருந்தால் அவரோடு நமக்குத் தொடர்பு தொடர்ந்து இருக்கும். ஆனால் அவர் பகைவராக இருந்துவிட்டால் தான் ஆபத்து. அதேசமயம் எதிரியாக வாள் போல் இருப்பவரோடு நமக்குத் தொடர்பு இருக்காது. அதனாலேயே இதனை மனதில் வைத்து வள்ளுவர் வாள்போல் பகைவர் எனும் தொடரில் தொடர்பு எனும் சொல்லைப் பயன்படுத்தவில்லை. மாறாக, கேள்போல் பகைவர் என்பதோடு தொடர்பு என்பதைப் பயன்படுத்துகிறார். அத்துடன் கேள்போல் பகைவர் தொடர்பே மிகவும் அஞ்சத்தக்கது எனும் கருத்தை எதிர்மறைக் கட்டளை வாக்கியத்தின் மூலம் மிகச் சிறப்பாக வள்ளுவர் எடுத்துரைத்திருப்பதை நாம் இங்கே காணலாம். எதிர்மறைக் கட்டளை வாக்கியம் நமக்கு எச்சரிக்கையாக அமைகிறது. அதனால் இது ஆழமாக நம் மனதில் பதிய வாய்ப்புள்ளது.

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப்பட வேண்டா தார் (*குறிப்பு அறிதல்: 6*)

உண்ணற்க கள்ளை என்று சொல்லிய வள்ளுவர், உண்டால் என்ன நிகழும் என்பதை அடுத்த வாக்கியத்தில் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உண்க என்கிறார். சான்றோரை அன் விகுதியிலும், கள்குடித்த கீழ்மக்களை வேண்டப் படாதார் என அர் விகுதியிட்டும் குறிப்பிடுகிறார். மரியாதை அல்லது பன்மை குறித்த இந்த விகுதிகளைப் பயன்படுத்துவதில் காணப்படும் அங்கத நிலையும், உணில், உண்க எனக் கட்டளை வாக்கியத்தை அமைத்திருக்கும் முரண் அழகும், உண்பவர் சான்றோரான் எண்ணப்பட வேண்டாதவராக அமைகிறார் என்பதைக் கூறுகிற நயமிக்க பாங்கும் சிந்திக்கத்தக்கன. வேண்டாம் என்பது ஒருவரின் விருப்பத்தை உணர்த்துகிற சொல். எண்ணம் என்பது அக மன நிலையைச் சார்ந்தது. சான்றோன் ஒருவனின் உள்மனதில் தான் வேண்டப் படாதவனாக அல்லது அதை விரும்பாதவனாக வேண்டும் என ஒருவன் நினைப்பது என்பது மிக இழிவான நிலையாகும். வெளிப்படையாகப் பாராட்டினாலும் உள் மனதில் சான்றோன் ஒருவன் கள் உண்ணும் குற்றங்களுக்காக அவனை

வேண்டாத வனாகக் கருதுவான் என்ற பொருளும், அந்த வேண்டாத நிலை தமக்குத் தாமே வேண்டிப் பெற்றுக்கொண்டது எனும் பொருளும் இதில் பொதிந்திருப்பதை நாம் காணமுடிகிறது.

உவமை கூற வருமிடத்து மிகச் சுருக்கமாக உவமான உவமேயங்களை நேர்நிறுத்திவிட்டு அதன்வழிப் பல கருத்துக்களை நம் சிந்தனைக்கு விட்டுவிடுவது வள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் *(குறிப்பு அறிதல்: 6)*

என்ற குறளில் போல் எனும் உவமஉருபுடனும்,

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று *(இனியவை கூறல்: 10)*

எனும் குறளில் அற்று எனும் உவமஉருபும்,

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு *(நிலையாமை: 9)*

எனும் இருநிலை உவமைகளில் போலும் எனும் உவம உருபும்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு *(ஊக்கம் உடைமை: 5)*

எனும் குறளில் உவம உருபு இன்றியும் வள்ளுவர் தம் உவம, உவமானங்களைச் சிறப்புடன் அமைத்துள்ளார். இவைகளில் தாம் கூற வந்த கருத்துக்களை நேரடியாகவும், நிரலாகவும் நிறுத்தியிறுப்பதை நாம் காண முடிகிறது. சில குறள்களில் வள்ளுவர் தம் கருத்துக்களை உடன்பாடு, எதிர்மறை வாக்கியங் களில் அமைத்துள்ளார். 'முயற்சி திருவினையாக்கும்' என்பது உடன்பாட்டு வாக்கியம் ஆகும். ஆனால் அதனைத் தொடர்ந்து வரும் முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும் எனும் வாக்கியம் கருத்தளவில் எதிர்மறையாகவும் வாக்கிய அளவில் உடன்பாடாகவும் அமைந்துள்ளது. திருவினையை ஆக்குகிறது முயற்சி என்பதும், முயற்சி இல்லாத நிலை துன்பத்தில் புகுத்தி விடுகிறது என்பதில் ஆக்கு, புகுத்து எனும் இருவினைகள் உள்ளன. ஆக்கு என்பது செயற்பாட்டளவில் அமையப் புகுத்து என்பது அதன் பயன்பாடாகவும் அமைகிறது. அதுபோன்றே

தீயினால் சுட்ட புண் உள்ளாறும்

என்பதும்

ஆறாதே நாவினால் சுட்டவடு

என்பதும் நம் சிந்தனைக்கு உரியதாகும். உள் ஆறும் என்பதினால் தீயினால் சுட்டபுண் மறைந்துவிடக்கூடும் என்பதும் அதே சமயம் நாவினால் சுட்டபுண் ஆறாமல் வடுவாக இருக்கும் என்பதும் இதன்வழி உணர்த்தப்படுகிறது. உள் ஆறும்; ஆறாதே சுட்டவடு எனும் இரு தொடர்களின் எதிர் எதிர் நிலைகளால் இக்கருத்து மேலும் சிறப்பாக உணர்த்தப் படுகிறது. நல்லொழுக்கம் நன்றிக்கு வித்தாக இருக்கிறது. அதே சமயம் தீயொழுக்கம் இடும்பை தரும் செயலுக்கு வித்தாக அமைகிறது என்கிறார். இங்கே வித்தாகும்; தரும் எனும் இருவேறு வினைகள் அமைந்திருக்கும் பாங்கிலிருந்து இதனை நாம் உணர முடிகிறது. வித்தாக இருப்பது விளைச்சல் தரும் எனும் இயல்பான எண்ணக் கருத்தாக்கத்தை வள்ளுவர் இங்கே தமக்கேற்ப மாற்றி, சிறப்புடன் கையாண்டுள்ளார்.

வள்ளுவர் இயல்பாக இருக்கும் நிலைக்கு மாறாகக் கருத்துக் கூறுவது, தாம் சொல்ல வந்த கருத்தை வலியுறுத்தும் உத்தியாக அமைகிறது. வாள் பகைவரைக் கண்டுதான் பொதுவாக அனைவரும் அஞ்சுவர். ஆனால் வள்ளுவர் 'வாள் பகைவர் கண்டு அஞ்சற்க' என்கிறார். அதுபோன்றே நாவினால் பேசத்தான் முடியும், சுட முடியாது. வடு ஏற்படுத்த முடியாது. வள்ளுவன் முடிந்ததை, முதல் அமைப்பில் 'நாவினால் சுட்ட வடு ஆறாது' என்கிறார். கட்டளை வாக்கியத்தில் ஒரு கருத்தையும், அதனைத் தொடர்ந்து அக்கட்டளை வாக்கியக் கருத்தினை மீறினால் ஏற்படும் பின் விளைவுகளை மற்றொரு கருத்தாகவும் வள்ளுவர் எவ்வாறு அழகுறச் சுட்டிக் காட்டினாரோ அதே போன்று உடன்பாட்டு வாக்கியங்களையும் அதற்கான எதிர்மறை வாக்கியங்களையும் ஒரு குறளில் எதிரும் புதிருமாக நிறுத்தி ஒன்றின் கருத்தைப் பின்வரும் வாக்கியத்தின் கருத்துக்கு அடித்தளமாக அமைத்து வள்ளுவர் மிகச் சுருக்கமாகவும் செறிவாகவும் கூறியிருக்கும் பாங்கு எண்ணி வியக்கத்தக்கது. எளிய சொற்கள் ஆயினும் ஆழமிக்க கருத்துக்கள், சுருங்கக் கூறுதல் ஆயினும் நம்மை விரிவாகச் சிந்திக்க வைத்தல் இவையே வள்ளுவரின் மொழித்திறனாக அமைந்து அவரது படைப்பாற்றலை வான் புகழ வைக்கிறது.

திருக்குறளில் சமூகவியல் சிந்தனைகள்

சங்க காலத்தைத் தொடர்ந்து நீதிநூல்களும், இரட்டைக் காப்பியங்களும் தோன்றிய சங்கம் மருவிய காலத்தில், நீதி நூல்கள் அனைத்தும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், தனிமனித நல்லொழுக்கத்திற்கும் அரும்பாடுபட்டன. சமூகத்தில் நிகழும் வர்க்கப் போராட்டங்களின் வெளிப்பாடுகளாக இலக்கியங்கள் அமைந்து இருக்கின்றன என்று காரல் மார்க்ஸ் கூறுகிறார். சமுதாயச் சூழல்களின் உந்து சக்தியைப் பெற்ற தனிமனித ஆற்றலின் உருவாக்கமே கலை இலக்கியப் படைப்புகளாகும். முடியாட்சி நிலவிய காலத்தில் ஆணாதிக்க சமூகத்தில் வள்ளுவர் திருக்குறளைப் படைத்திருக்கிறார் எனும் கருத்தினை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அறிவியலாய்வு தற்சார்பின்றிக் கூறப்படும் மெய்ம்மைகளை அடிப்படையாகக் கொண்டது. பல தரவுகளை ஆராய்ந்து அதிலிருந்து பொதுமைகளைப் பெற்று அப்பொதுமைக் கூறுகளைக் காரண காரியத்தோடு நிறுவிய பின்னர்க் குறிப்பிட்ட சூழலும் உரிய காரண காரியங்களும் நிலவினால் குறிப்பிட்ட பொதுமைக் கூறினை யாவரும் பெறலாம் என்று அதன் ஆக்கத் திறனைக் கூறுவது கோட்பாடு உருவாக்கமாகக் கருதப்படும். ஆறிவியலாய்வின் உச்சகட்டநிலை கோட்பாட்டு உருவாக்கமாகும். நீர் கொதிப்படைந்து ஆவியாக மாறுமென்பது அனுபவ உண்மை. ஆனால் நூறு டிகிரி சென்டிகிரேடு சூட்டில் ஆவியாக மாறுமென்பது அறிவியல் செய்தி. ஆவியான நீர் ஒன்றில் அடைக்கப்படும்போது அதன் கனப் பரிமாணத்திற்கேற்ப அதனுடைய அழுத்தம் கூடுதலாகிறது என்று கண்டுபிடித்து மெய்ப்பித்த நிலையே கோட்பாட்டு உருவாக்கமாகும். இந்தக் கோட்பாட்டு உண்மைதான் நீராவி எஞ்சினைக் கண்டுபிடிக்க உதவியது. அதிகக் கொதிப்பில் நீர் ஆவியாக மாறுகிறது எனும் நடைமுறை உண்மையை அறிந்து வைத்திருப்பது கோட்பாட்டு உருவாக்கத்திற்கோ நீராவி எஞ்சினை உருவாக்குவதற்கோ வழி வகுக்க முடியாது.

நம் முன்னவர்கள் அனுபவ அறிவு மிக அதிகமாகப் பெற்றிருந்தார்கள். ஆனால் அவற்றை அலசி ஆராய்ந்து அறிவியல்படுத்தவில்லை. இரண்டாயிரம் ஆண்டுக் காலத்துக்கு முன் வாழ்ந்த நம் முன்னோர்கள் இவ்வளவு அனுபவ அறிவைத் தொகுத்ததே பெரிய சாதனைதான். ஆனால் பின்னால் வந்த தலைமுறைகள் பழம் பெருமைகளைப் பேசினரேயன்றி ஆக்கப்பூர்வமான அறிவியலாய்வு எதனையும் இலக்கியத்தில் மேற்கொண்டு இலக்கியக் கோட்பாடுகளை பிறமொழி இலக்கியங்களும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் உருவாக்கவில்லை.

வள்ளுவர் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் ஆழ்ந்து சிந்தித்த ஒரு பெரிய சிந்தனையாளர். வள்ளுவரைப் போலவே மற்ற நாடுகளிலும் பல்வேறு அறிஞர்களும் நல்ல மனிதர்களை, நல்ல சமுதாயத்தை, நல்ல நாட்டை,

உருவாக்கக் கருத்துகள் கூறியிருக்கிறார்கள். பிளாட்டோ தாம் எழுதிய 'ரிபப்ளிக்' (Republic) எனும் நூலில் "தன்னாட்சியுரிமையுடைய ஒரு சிறந்த நகர் எவ்வாறு இருக்க வேண்டும்" என்று எழுதியுள்ளார். 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 17-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இத்தாலிய நாட்டைச் சார்ந்த 'காம்பனெல்லா' எனும் அறிஞர் தாம் எழுதிய 'கதிர் நகர்' (Civitatis Solis) எனும் நூலில் அன்பும் அறிவும் ஆற்றலும் நிறைந்தோர் வாழும் ஒரு இலட்சிய நகரை (Ideal State) புனைந்துள்ளார். 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தாம்ஸ் மூர் எனும் ஆங்கில அறிஞர் எழுதிய 'வுட்டோபியா' (Utopia) எனும் நூலில் கற்பனை நாடு ஒன்றினை எல்லா நல்லியல்புகளுடன் படம் பிடித்துக் காட்டுகிறார். 17ஆம் நூற்றாண்டில் பிரான்சிஸ் பேக்கன் தாம் எழுதிய 'புதிய அத்லாந்திய நாடு' (New Atlantis) எனும் நூலிலும், ஹாரிங்டன் (James Harrington) எனும் ஆங்கில அறிஞர் எழுதிய 'ஒஷியானா' (Oceana) எனும் நூலிலும் இத்தகைய நல்லியல்பு கொண்ட ஒரு இலட்சிய நாடு காட்டப்படுகிறது. நமது கம்பரும் தாம் படைத்த கோசலை நாட்டினை எல்லா நலனும் நிறைந்ததோர் இலட்சிய நாடாகக் காட்டுகின்றார். "வண்மையில்லை ஓர் வறுமையின்மையால்" எனும் கம்பனின் பாடல் அடி இதனை நமக்கு உணர்த்தும். இலட்சிய நாட்டை, இலட்சிய சமுதாயத்தைக் கற்பனை செய்த படைப்பாளர்களிடையே வள்ளுவர் தனித்தன்மையுடன் உயர்ந்து நிற்கும் சிறப்பினை நாம் பார்க்க முடிகிறது. முடியாட்சி கொண்ட சமூக அமைப்பினை ஏற்றுக் கொண்டு அதன் நல்லது கெட்டதுகளிடையே அறமானதொரு வாழ்க்கை வாழ யதார்த்த வழிமுறைகளைக் காட்டுகின்ற நடைமுறை ஞானியாக வள்ளுவர் தோன்றுகிறார்.

வள்ளுவர் எல்லாவற்றிலும் நன்மையும் தீமையும் இருப்பதைக் குறிப்பிடுகிறார். செங்கோன்மை, இறைமாட்சி பாடிய வள்ளுவர் கொடுங்கோன்மையையும் பாடுகிறார். கல்வியின் சிறப்பை வலியுறுத்திய கைகளே கல்லாமையையும் எழுதியிருக்கின்றன. வள்ளுவர் வாழ்வின் இரு நிலைகளையும் எண்ணிப் பார்த்து, இருக்கின்ற சூழலில் நல்லதொரு இனிய அற நெறிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வழிகாட்டும் நடைமுறை ஞானியாக விளங்குகின்றார். வள்ளுவரின் பார்வையில் சமூகம் தனிமனிதர்களின் உழைப்பால் உருவாக்கத்தால் அமைகிறது என்று கருதி, தனிமனிதர்களுக்கு அதி முக்கியத்துவம் தருகின்றார். சமூகத்தின் ஒட்டுமொத்த அங்கமாக மனிதர்களைக் கருதிச் சமூகத்தை முதன்மைப் படுத்தும் மார்க்சிய பார்வையிலிருந்து வள்ளுவரின் சமூகப் பார்வை மாறுபட்டது. தனிமனித ஒழுக்கமே வள்ளுவருக்கு முதன்மையானது முக்கியமானது. அறமென்பது சமஸ்கிருதத்தில் கூறப்படும் 'தர்மா' (Dharma) எனும் கருத்துடன் தொடர்புடையது. தனிமனித அறம், சமூக நீதி, அரசியல் சட்டம் ஆகிய மூன்றும் ஒரு சமூகத்தில் வாழும் தனிமனிதர்களைக் கட்டுப்படுத்தி, சமூகத்தின் நெறியான இயக்கத்திற்குத் துணைசெய்கின்றன. வள்ளுவரின் அறநெறிச் சிந்தனைகள் மானுட நேயத்தையே வலியுறுத்துகின்றன. அதனால் தான் அறமென்பது என்னவென்று கேள்வி எழும்போது "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்" என்று தனிமனிதச் சார்பில் வள்ளுவர் கூறுகின்றார்.

அத்தோடு

"அழுக்காறு அவாவெகுளி இன்னாசொல் நான்கும்
இழுக்கா யியன்றது அறம்

எனச் சொல்லி உள்ள உணர்வுகளின் வழித் தோன்றும் செயல்பாடுகளால் அறத்தை விளக்குகிறார். தனிமனித ஒழுக்கமே தலையாய ஒழுக்கமாக வள்ளுவர் கருதுகிறார். அறமும் அறிவும் அன்பும் தனிமனித வாழ்வின் மூலாதாரமாக வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

வள்ளுவரின் சமுதாயம் தனிமனித ஒழுக்கத்தால் உருவாக்கப்படுகிறது. ஒரு சமூகம் பசிப்பிணியின்றி, நோய் நொடியின்றி, உள் வெளிப் பகையின்றி இயைபுடன் வாழ வேண்டும் என்பது வள்ளுவரின் நோக்கமாகும். வள்ளுவரின் சமூகச் சிந்தனைகள் குடும்பம், வாழ்க்கை முறை, கல்வி, தொழில், அரசு எனும் பல்வேறு கூறுகளில் வெளிப்படுகின்றன.

குடும்பம்

இருவர் தம்முள் மனமொத்துப் புரியும் மணமுறையை - களவில் தோன்றிக் கற்பாக மலரும் திருமண முறையை - வள்ளுவர் ஆதரிக்கிறார். ஒருவனும் ஒருத்தியுமாக இணைந்து நன்மக்களைப் பெற்றுச் சுற்றத்தாருக்கு உதவி, விருந்தோம்பி, அறச் செயல்கள் புரிந்து இறைவழிபாடு நடத்தி இனிதே இருக்கும் இல்லறத்தை நல் இல்லமாக வள்ளுவர் கண்டார். பிறர் பழிப்பதற்கு இடம் கொடாது பிறரைக் குறை கூறியும் வாழாது இருக்க வள்ளுவர் வேண்டுகிறார். ஒருதார மணத்தை வலியுறுத்தும் வள்ளுவர் வரைவின் மகளிரை வெறுக்கிறார். பரத்தையின் காரணமாக ஊடல் நிகழுவதாகக் கூட வள்ளுவர் எங்கும் காட்ட வில்லை. மறு உலக வாழ்வில் நம்பிக்கை கொண்ட வள்ளுவர் மறுமையினை வலியுறுத்தித் தென்புலத்தார் குறித்து இல்வாழ்வோர் செய்ய வேண்டிய கடமை களையும் குறிப்பிடுகிறார்.

ஆணாதிக்க சமூகத்தில் வாழ்ந்த வள்ளுவர் மனைவி விரும்பியபடியே நடக்கும் கணவன் நல்லோர்முன் தலைகுனிவு அடைவான் என்று குறிப்பிடுகிறார். பொருளீட்டல், விருந்தோம்பல், பிறருக்கு உதவுதல் போன்ற வெளியுலக முயற்சிகள் முதலியவற்றை மனைவி சொல்படிக் கேளாக் கணவனால் தான் சிறப்பாகச் செய்திட முடியும் என்கிறார். 'கற்பு' என்ற ஒன்றைப் பெண்ணிற்குரிய உயர்ந்ததொரு மாண்பாக வலியுறுத்துகிறார். குடும்ப நலத்திற்கும், கொண்டவன் நலத்திற்கும் மனைவியின் கற்பே துணை நிற்கும் என்பது வள்ளுவரின் நம்பிக்கை. கணவனும், மனைவியும் குழந்தைகளும் அடங்கிய சிறுகுடும்பத்தை (Nucleus Family) வள்ளுவர் விரும்புகின்றார். நன்மக்கட்பேறு இல்லறத்தின் பயனாகக் கருதப்படுகிறது. இல்வாழ்வைவிட்டுப் பிற நெறிகளில் செல்வது இல்வாழ்வோனுக்கு ஆகாது என்றும், இல்லற வழியே வீடு பேற்றை அடையமுடியும் என்றும் வள்ளுவர் கூறுகின்றார். இல்வாழ்வோர் சமூகத்தோடு கூடி இணைந்து வாழ்பவராவார். ஆதலால் பிறரைக் குறித்தும் சமூகத்தைக் குறித்தும் அக்கறை கொண்டவர்

களாகவும் இருக்க வேண்டும். வள்ளுவர் துறவறத்தை மேற்கொள்வோரை இகழவில்லை. ஆனால் இல்லறத்தைத் தொடங்கிப் பின் அதிலிருந்து நீங்கித் துறவறம் செல்வதை வள்ளுவர் ஏற்கவில்லை.

தொழில்கள்

முடியாட்சிக் காலத்தில் வள்ளுவர் வாழ்ந்ததால் தூது, அமைச்சு, படைத்தொழில் போன்ற மன்னரைச் சேர்ந்தொழுகிய பல தொழில்கள் இருந்தன. உள்நாட்டு வாணிகம், வெளிநாட்டு வாணிகம் என்ற வகைப்பாடும் இருந்தன. வணிகர்கள் செல்வச் செழிப்புடன் அரசர்க்கு அடுத்தபடியான சமூக மதிப்புடன் விளங்கினர். பொருளாதாரச் சிறப்பே வள்ளவர் காலத்தில் சமூக மதிப்பிற்கு அளவுகோலாக இருந்தது. வாணிபம், உழவு, நெசவு, கல்வி, மருத்துவம் போன்ற தொழில்கள் காலங்காலமாக இருந்துவரினும் தொழில் முறைகளும் தொழிலுக்குரிய கருவிகளும் காலம் தோறும் மாறுதலடையலாம். கடவுள் வாழ்த்துக்கு அடுத்து வான் சிறப்பினை வள்ளுவர் பாடுகின்றார். உழவுத் தொழிலுக்கு மழையே இன்றியமையாதது. பொருளாதாரத் துறையினர் தமது பொருளாதார ஆய்வில் விவசாயத்திற்கு நிலத்தையே அடிப்படையாகக் கருதி முதன்மைப்படுத்துவர். ஆனால் வள்ளுவர் நிலத்தை விவசாயத்திற்கு உரியதாக மாற்றும் சக்தி கொண்ட இயற்கை நிகழ்வான மழைக்கு முதன்மையிடம் தருகிறார்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை

எனும் குறள் இதனை விளக்கும். உழுதல், எருவிடுதல், நீர்ப்பாய்ச்சுதல், களை எடுத்தல், பயிர்ப் பாதுகாப்பு ஆகிய ஐந்து கூறுகளை உழவுக்குரிய முக்கியச் செயல்பாடுகளாக வள்ளுவர் வகுத்துள்ளார். கடல் தொழிலாக மீன்பிடித்தல், சங்கு மற்றும் முத்தெடுத்தல், உப்புத் தயாரித்தல் ஆகியனவும் குறிக்கப்படுகின்றன. குயவர், கொல்லர், தச்சர் போன்றோர்களும் வள்ளுவர் காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். "முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" எனும் அடியால் வள்ளுவர் காலத்தில் கூலிவேலை செய்வோர் இருந்திருக்கின்றனர். சிவிகை சுமப்போர், பண்டங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை ஓட்டுபவர், யானை, குதிரை, தேர் செலுத்துவோர் போன்ற பாட்டாளிகள் வாழ்ந்திருக்கின்றனர். பசுக்களை வளர்த்துப் பயன் கொள்ளல் ஒரு தொழிலாக அமைந்திருந்தது. "நன்பால் கலந்தீமையால் திரிந்தற்று" என்பதால் பால் வழித் தயிர் வெண்ணெய் முதலியன கடைந்தெடுக்கப்பட்டதையும் உணரலாம்.

கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது

எனும் குறள் வெண்பா வரிகளால் வேட்டுவத் தொழில் இருந்ததையும் உணரலாம்.

"பாலொடு தேன்கலந்தற்றே" என்று கூறிச் செல்வர்கள் உணவுண்ணும் முறையைச் சுட்டிய வள்ளுவர்

ஆத்திசூடியின் பாடுபொருள்

ஔவையாரால் எழுதப்பட்ட நீதி நூல் ஆத்திசூடி. மிகச்சிறிய இரண்டு அல்லது மூன்று சொற்களால் அமைந்த 108 நீதி வாக்கியங்களைக் கொண்டதே ஆத்திசூடி. சங்க காலத்தைச் சார்ந்த ஔவையார் இதை எழுதியிருப்பாரோ என ஓர் ஐயப்பாடுண்டு. ஆயினும் பிற்கால ஔவையார் ஒருவர் தான் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகிய நூல்களை எழுதியதாகக் கருதப்படுகிறது.

காதலையும் வீரத்தையும் இரு கண்களாகக் கருதிப் போற்றிய சங்க காலத்தை 'வீரயுகக் காலம்' என்பர். சங்ககாலப் புலவராகிய ஔவையார் இந்த ஆத்திசூடியை எழுதியிருந்தால் 'போர்த்தொழில் புரியேல்' (86) 'முனை முகத்து நில்லேல்' (91) ஆகிய நீதிக் கருத்துக்களைக் கூறியிருக்க மாட்டார். அத்துடன் "திருமாலுக்கு அடிமை செய்" (56) எனும் சமயப் போதனை பிற்காலத்தைச் சார்ந்ததாகும். இத்தகைய அகச்சான்றுகளால் ஆத்திசூடி எழுதியவர் சங்க கால ஔவையார் அல்ல, பிறிதொருவர், அவர் பிற்காலத்தைச் சார்ந்தவர் எனக் கருதலாம்.

வைப்புமுறை

நீதி நூல்கள் பெரும்பாலும் 'அகர முதல் னகர இறுவாய்' என அகர வரிசையைப் பின்பற்றுவதில் கவனம் செலுத்துகின்றன. திருக்குறளில் அகர வரிசை இல்லாவிட்டாலும் கூட 'அ'கரத்தில் தொடங்கி 'ன'கரத்தில் முடிகிற போக்கினைக் காணமுடிகிறது.

ஔவையார் எழுதிய 'கொன்றைவேந்தன்', 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என 'அ'கரத்தில் தொடங்கி உயிரெழுத்து வரிசை நிரலினைத் தொடர்ந்து 'க,ச,ட,த,ப,ம' இவைகளில் 'அ'கர முதல் 'ஐ'காரம் வரை வரிசைப் படுத்தியும், இறுதியாக 'ஒ', 'ஓ' என்ற எழுத்துக்களை முதலாகக் கொண்டும் அமைந்துள்ளன. இந்நிலையில் ஆத்திசூடியின் வைப்புமுறை சற்று மாறுபட்டு இருப்பதாகக் காணமுடிகிறது. 'அறஞ்செய விரும்பு', என அகரத்தில் தொடங்கி, 'அஃகம் சுருங்கேல்' என உயிரெழுத்துக்களில் பதிமூன்றையும் வரிசைப்படுத்தி, நீதிப்பாக்களை எழுதிவிட்டுப் பின்னர், 'க,ங,ச, ஞ,த,ந' என வரிசைப்படுத்தப் பட்டுள்ளது. அதற்குப்பின் 'இ'கரத்தில் தொடங்கும் இரு நீதிப்பாக்கள் 'இடம்பட வீடு எடேல்' (18) 'இணக்கம் அறிந்து இணங்கு' (19) ஆகியன இடையில் இடம்பெற, பின்னர், 'த,ந,ப,ம' வரிசை தொடர்கிறது. அதற்குப்பின் 'இயல்பலாதன செய்யேல்' எனும் வரி தொடங்கி 7 நீதிப்பாக்கள் அகரவரிசைக்குட்பட்டதாக அமைந்துள்ளன. அதன் பின்னர், 'க'கர வரிசை தொடர்கிறது. அதுவும் அகரத்தில் தொடங்கி 'ஔ'காரம் வரை, 'க,கா,கி,கீ' எனும் எழுத்துக்களை முதலாகக் கொண்டு நீதிப்பாக்கள் அமைந்துள்ளன. அதன்பின்னர், ச,த,ந,ப,ம ஆகிய

எழுத்துக்களின் 'அ'கரம் முதல் 'ஔ'கார வரிசை இடம்பெறுகிறது. இதைத் தொடர்ந்து 'வ'கரத்தில் 'அ'கரம் தொடங்கி 'ஐ'காரம் வரை இடம் பெறுகிறது. முடிவில் 'ஒ,ஓ' எனும் எழுத்துக்களை முதலாகக் கொண்ட நீதிப் பாக்கள் காணப்படுகின்றன. இதனால், நிரல்வரிசைகளில் மாறுபட்டுள்ள 'இடம்பட வீடு எடேல்'(18), 'இணக்கம் அறிந்து இணங்கு'(19) எனும் நீதிப் பாக்களையும் அத்துடன் 'இயல்பலாதன செயேல்'(24) எனத் தொடங்கி 'அனந்தல் ஆடேல்'(31) எனும் எட்டு நீதிப்பாக்களையும் இடைச் செருகல்களாகக் கருதலாம்; அல்லது குறைந்த பட்சம் இவை வரிசை முறை மாறி வகைதொகையற்று வந்திருக்கின்றன எனக் கருதலாம்.

முன்னிலை

ஆத்திசூடியின் 108 நீதிப்பாக்களும் பெரும்பாலும் பெரியவர்களுக்கான அறிவுரையாகக் கூறப்பட்டுள்ளன. 'சூது விரும்பேல்' (48), 'மைவிழியார் மனை அகல்' (95), 'மெல்லி நல்லாள் தோள்சேர்' (93) ஆகியன பெரியவர்களுக்கு உரியனவாகும். இந்த நீதிக்கருத்துக்கள் அனைத்தும் ஆண்களை முன்னிலைப் படுத்தியே எழுதப்பட்டுள்ளன. இவை பெரும்பாலும் ஒருவன் எப்படிப் பேச வேண்டும், எப்படிப் பழக வேண்டும், எப்படி வேலை செய்ய வேண்டும் என்ற மூன்று பெரும் பிரிவுகளுக்குள்ளேயே அடங்குமாறு அமைந்துள்ளன. அத்துடன், 'அரனை மறவேல்' (30), 'தெய்வம் இகழேல்' (60), 'வீடுபெற நில்' (101) ஆகியன தெய்வ பக்தியை உணர்த்துவனவாக உள்ளன.

தொழில் முறை

உழவுத் தொழிலை மேற்கொள்ளும் காலத்தில் எழுந்த நீதி நூல் ஆத்திசூடி என்பதால் 'நெற்பயிர் விளை' (71), 'பூமி திருத்தி உண்' (81), 'பருவத்தே பயிர்செய்' (22) ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அத்துடன் 'செய்வன திருந்தச்செய்' (49) எனக்கூறி, 'கைவினை கரவேல்' (40) என அறிவுறுத்தி, 'தீவினை அகற்று' (57), 'நைவினை நணுகேல்' (73), 'கொள்ளை விரும்பேல்' (41), 'மன்று பறித்து உண்ணேல்' (23) என ஆத்திசூடி அறிவுரை கூறுகின்றது.

'உழுதொழில் புரிந்து' ஒழுக்கமுடன் வாழ வழிவகுக்கும் முயற்சியில் அரசுடன் இணைந்து வாழவும் ஆத்திசூடி அறிவுரை கூறுகின்றது. 'சக்கரநெறி நில்' (43), 'தேசத்தோடு ஒத்து வாழ்' (61), 'ஊருடன் கூடிவாழ்' (103), 'நாடு ஒப்பன செய்' (66) ஆகியன அரசுக்குக் கட்டுப்பட்ட ஒரு பிரஜையாக வாழ வேண்டுமென ஆத்திசூடி போதிக்கின்றது. அத்துடன் 'சான்றோர் இனத்திரு' (44), 'பெரியோரைத் துணைகொள்' (82), 'மேன்மக்கள் சொல் கேள்' (94) எனும் நீதி போதனைகள் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பெரியோர்களை, சான்றோர்களை அனுசரித்து வாழ அறிவுரை கூறுகின்றது. நம்முடன் பழகுவோரிடம் நாம் பழகுதலும், யாரோடு பழகுகின்றோம் என்று தெரிந்து வைத்திருத்தலும் முக்கியமானதாகக் கருதி, 'சேரிடம் அறிந்துசேர்' (50), 'இணக்கம் அறிந்து இணங்கு' (19) என்னும் நீதி போதனைகளை நிகழ்த்துகின்றது. 'பீடு பெற நில்' (79) 'கிழமைப்பட வாழ்' (34),

'கீழ்மை அகற்று' (35) எனும் நீதிப்பாக்கள் நம் வாழ்வின் நோக்கத்தை உணர்த்துகின்றன. 'ஒப்புர ஒழுகு' (10), 'நேர்பட ஒழுகு'(72) ஆகியன நாம் வாழ வேண்டிய முறையினை உணர்த்துகின்றன. 'சையெனத் திரியேல்' (51), 'பையனோடு இணங்கேல்' (84) ஆகியன நம்மை எச்சரிக்கும் முகமாய் அமைந்துள்ள நீதிப்பாக்களாகும்.

'உன் நண்பனைக் காட்டு, நீ யார் என்று சொல்கிறேன்' என்பது போல ஒருவன் பிறரொடு பேசுதல் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்ற முயற்சியாகும். ஒருவனது பேச்சு அவனை அடையாளம் காட்டுவதால் அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்பதை ஆத்திசூடி நமக்கு உணர்த்துகின்றது. 'நூல் பல கல்' (70), 'நயம்பட உரை' (17), 'மொழிவது அறமொழி' (96) ஆகியன தெளிவாய், நயமாய் நமது பேச்சு அமைய வேண்டும் எனச் சுட்டுகின்றன. அதேசமயம் 'வெட்டெனப் பேசேல்' (104) சுளிக்கச் சொல்லேல்' (47), 'பழிப்பெனப் பகரேல்' (76) என்பன பேச்சு நயமாகக் கனிவாக இருக்க வேண்டும் என்பதையும், 'கண்டு ஒன்று சொல்லேல்' (14), 'சித்திரம் பேசேல்' (45), 'மிகைபடச் சொல்லேல்' (89) ஆகியன புனைந்துரைத்தலைத் தவிர்க்கவும் 'வல்லமை பேசேல்' (98), 'வாது முற்கூறேல்'(99) ஆகியன வாதமிட்டு வம்பு வளர்ப்பதைத் தவிர்க்கவும், 'நொய்ய உரையேல்'(74), 'ஔவியம் பேசேல்' (12) ஆகியன நம் தகுதிக்குக் கீழான நிலையில் பேசுவதைத் தடுக்கவும் அறிவுரை கூறுகின்றன. கடலில் குளிப்பதையும், நீரில் (ஆறு, ஏரி, குளம்) விளையாடுவதையும் மறுக்கின்ற ஆத்திசூடி 'சனி நீராடு' (16) எனக் கூறியுள்ளது. சமூகப் பழக்க வழக்கங்களைப் பற்றியோ அல்லது அதில் பங்கேற்பதைப் பற்றியோ ஆத்திசூடி எதுவும் கூறவில்லை.

அவ்வையாரின் இந்த ஆத்திசூடி, வளர்ந்து சமூகத்தில் ஆளான ஒருவனுக்கு அறிவுரை கூறும் முறையில் அமைந்துள்ளது. சமூகத்தில் அங்கமாக உள்ள ஒருவன் செய்கின்ற பணி, அவன் மற்றவர்களோடு பழகுகின்ற முறை, பிறரோடு பேசுகின்ற பாங்கு ஆகிய மூன்று நிலைகளை முக்கியப்படுத்தித் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தும் பாங்கில் இந்த ஆத்திசூடி அமைந்துள்ளது. இதை எழுதுவதற்கான பெரும்நோக்கு எதுவும் இருந்திருக்க முடியாது. திருக்குறள் போன்ற நீதி நூல்கள் பல தோன்றிய காலக்கட்டத்தில் நீதி நூல் எழுதுகின்ற இலக்கிய வகைமை பரவலாக இருந்திருக்கும். அந்தப் பெரும்பான்மை இலக்கிய வகைமையில் ஒரு படைப்பாளி ஒருவன் 'தாமும் ஒன்றைப் படைப்போமே' என நினைத்து இந்த நீதி போதனைகளைச் சமூகத்தின் அங்கத்தினனாய் உள்ள ஆண் மக்களுக்குச் சொல்வதுபோல இதனைப் படைத்திருக்கலாம். இந்த நூலின் தலைப்புக்கூடக் கடவுள் வாழ்த்தாய் அமைந்த முதற்பாடலில் காணும் முதற்சொல்லாய் உள்ளது. "ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே" எனக் கூறும் பாடலின் முதல் இரு சொற்களே தலைப்பாக இருப்பதால் இத்தலைப்பு பிற்காலத்தில் வழங்கப்பட்டதாகக் கருதலாம்.

புதிய சிந்தனைகள் ஏதுமின்றி மரபுவழிச் சார்ந்த அறிவுரைகளைத் தனிமனித வாழ்க்கை முறைக்குக் கூறுகின்ற அவ்வையாரின் ஆத்திசூடி நீதிநூல் வரிசையில் இதுவும் ஒன்று எனச்சொல்லும் அளவிற்குத்தான் அமைந்துள்ளது.

துணை நூல்கள்

1. ஆரோக்கியநாதன், எஸ். இலக்கியச் சாரல், மணியன் பதிப்பகம், குறிஞ்சிப்பாடி, 1994.

2. சரளா ராசகோபாலன், கு., சங்க இலக்கியம் (அகம்), ஒளிர் பதிப்பகம், சென்னை, 1994.

3. கலைக் காட்சிக் குழு : கையேடு, 2வது உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாடு, சென்னை, 1968.

4. சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும், உலகத் தமிழ்க்கல்வி இயக்கம், சென்னை, 1985.

5. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் : இறைச்சி, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1986.

6. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக்கொள்கைகள்: உள்ளுறை, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1986.

7. பாலசுந்தரம், ச., தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகை உரை பாகம்: 1, தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், 1989.

8. ஆரோக்கியநாதன், எஸ்., மொழியியல் நோக்கில் தொல்காப்பியம், ஓரியண்ட் லாங்மன் லிமிடெட், சென்னை, 2001.

9. சிவலிங்கனார், ஆ., தொல்காப்பிய உரைவளம் : சொல்லதிகாரம், கிளவியாக்கம், (பதிப்பு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.

10. சுந்தரமூர்த்தி, கு., தொல்காப்பியச் சொல்லதிகாரம் : சேனாவரையம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். 1981.

11. பழனியப்பன், வி. புலமைமிகு சேனாவரையர், சிந்து பதிப்பகம், சிதம்பரம், 2000.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு	90.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
வாழிய செந்தமிழ்	140.00
பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்	40.00
தமிழக எல்லைப் போராட்டங்கள்	60.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு	50.00
தமிழ்ப் புனைகதைகளில் உளவியல்	35.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்யல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00

623 மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள் 40.00